குயில் கூவிக் கொண்டிருக்கும்

- ஜெகசந்தரம்

குயில் கூவிக்கொண்டிருக்கும்

முருகுசுந்தரம்

அகரம் ◻ சிவகங்கை ◻ 623560

இந்நூல் 'பாவேந்தர் நினைவுகள்'
வரிசையில் வெளிவரும்
மூன்றாவது நூல்

குயில் கூவிக்கொண்டிருக்கும்

© முருகுசுந்தரம்

முதற்பதிப்பு நவம்பர் 1981

அச்சும் அமைப்பும் வெளியீடும்

அகரம்

2 சிவன்கோவில் தெற்குத் தெரு

சிவகங்கை-623 560

அட்டை

ஆர். எம். பழனியப்பன்

அட்டை அச்சாக்கம்

விநாயகா ஸ்க்ரீன்ஸ்

மதுரை-10

விலை ரூபாய் 6-50

அணி வகுப்பு

இளமையிலிருந்தே கவிஞர் வரலாறுகளைப் படிப்பதில் எனக்கு விருப்பம் அதிகம். ஜான்சன் எழுதிய ஆங்கிலக்கவிஞர் வரலாறு (Lives of English Poets), பாஸ்வல் எழுதிய ஜான்சன் வரலாறு (Boswells Life of Johnson), பிரெஞ்சு எழுத்தாளன் ஆண்ட்ரூ மொராய் எழுதிய பைரன் வரலாறு (Byron) ஷெல்லி வரலாறு (Aerial), பாபுலோ நெருடாவின் தன் வரலாற்றுச் சுருக்கம் (Pablo Neruda's Memoirs) வ.ரா. எழுதிய மகாகவி பாரதியார் ஆகியவை என் வாழ்க்கையில் நான் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள். இந்நூல்களைப் படித்த போது பாவேந்தரைப் பற்றி இப்படி ஒரு நூல் எழுதவேண்டும் என்று நான் அடிக்கடி நினைத்ததுண்டு. அந்த எண்ணத்தின் செயற்பாடே பாவேந்தரைப் பற்றிய இந்நூல் வரிசை. பல ஆண்டுகளாகத் தமிழகமெங்கும் சுற்றித் திரிந்து நான் திரட்டிய செய்திகள் இந்நூலோடு முற்றுப் பெறுகின்றன. இம்மூன்று நூல்களில் ஐந்து கட்டுரைகள் மட்டுமே அந்தந்த ஆசிரியர்களால் எழுதப் பட்டவை; மற்றவை யாவும் நான் எழுதியவையே.

உலகக் கவிஞர்களுள் பைரனுடைய வாழ்க்கைதான் சுவையான வாழ்க்கை. காதலும், வீரமும், அரசியலும் அவன் வரலாற்றில் போட்டி போட்டுக் கொண்டு விளையாடுகின்றன. அவன் வரலாற்றைப் படிக்கும் எந்தப் பெண்ணும் அவன்மீது காதல் கொள்ளாமல் இருக்க முடியாது. அவ்வளவு வசீகரக்கவிஞன் (Glamorous poet) அவன்.

பைரன் தனிச்சண்டைக்குக் (Single Combat) கூவி அழைத்தவன்; புஷ்கின் தனிச்சண்டை

யில் செத்தவன். ஷெல்லி கடற்புயலில் சிக்கி மாண்டவன்; லார்கா அரசியல் புயலில் சிக்கி மாண்டவன். மாய கோவ்ஸ்கி தற்கொலை யால் முடிந்தவன்; எஸ்ரா பவுண்ட் பயித்தி யத்தால் மடிந்தவன். பிரெஞ்சுப் பெருங் கவிஞன் ஃப்ராங்காயிஸ் கொள்ளைக் கார னாகவே வாழ்ந்து வாழ்வை முடித்துக் கொண்டவன். சிலி நாட்டுப் பெருங் கவிஞன் பாபுலோ நெருடா தன் கால்களாலும் கவிதை யாலும் உலகை அளந்தவன். ஒவ்வொரு கவிஞனின் வாழ்க்கையும் உள்ளத்தை நெரு டும் ஓர் உணர்ச்சிக் காவியம்.

கவிஞன் வாழ்க்கையைச் சர்க்கரைப் பொங் கலுக்கு ஒப்பிடலாம். சர்க்கரைப் பொங்க லில் முந்திரிப் பருப்பு அங்கொன்றும் இங் கொன்றுமாகக் கிடப்பது போல், கவிஞர்கள் வாழ்க்கையிலும் சுவையான நிகழ்ச்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தட்டுப் படுவதுண்டு. ஆனால் பாவேந்தரின் வாழ்க்கை முழுவதும், உண்பவர் வாயில் மொருமொருவென்று உதிரும் வறுத்த முந் திரிப்பருப்பு. சுவையில்லாத நிகழ்ச்சியேஅவர் வாழ்க்கையில் இல்லை என்று சொல்லலாம்.

பாவேந்தர் வாழ்க்கையில் வெளிவராத செய்திகள் நிறைய உள்ளன. மேலை நாட் டுக் கவிஞர்கள் தங்கள் காதல் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி கூச்சமின்றி அவர்களே எழுதியிருக்கிறார்கள்; பிறரையும் எழுத அனு மதிக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டின் நிலை வேறு. நமது நாட்டில் தமது காதல் வாழ்க்கையை ஒளிக்காமல் துணிச்சலாக எழுதும் ஒரே கவிஞர் கண்ணதாசனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? பாவேந் தருடைய காதல் வாழ்க்கையும் சுவையானது தான். ஆனால் நான் அதில் கை வைக்க வில்லை. சரியான முறையில் ஆங்கிலத்தில்

மொழிபெயர்க்கப்பட்டால், பாவேந்தர் வர லாறு உலக இலக்கிய வாதிகளின் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பாவேந்தர் வாழ்க்கையில் உணர்ச்சிமயமான எவ்வளவோ செய்திகளை எழுதும்போது, இடையிடையே அவரைப் பற்றிய மிகச் சாதாரணமான செய்திகளையும் எழுதியிருக் கிறேன். அவை அற்பமானவை என்றாலும் அவற்றை விட்டு விட எனக்கு விருப்ப மில்லை. கவிதை எழுதும் போது காற்புள்ளி யும் அரைப்புள்ளியும் இல்லாமல் எழுத முடி கிறதா?

பாவேந்தரைப் பற்றி வரலாற்று நூல்களும் நிறைய வரவேண்டும்; திறனாய்வு நூல் களும் வரவேண்டும். மேலை நாட்டார் கவிதை பற்றியும், கவிஞர் பற்றியும் புதுப்புது முறைகளில் வகுத்தும் தொகுத்தும் எழுதி வெளியிடும் நூல்கள் அளவற்றவை; அமைப் பாலும் உள்ளடக்கத்தாலும் நம்மைவியப்பில் ஆழ்த்தக் கூடியவை. அவற்றைப் பார்க்கும் போதும் படிக்கும் போதும் தமிழில் இத் தகைய நூல்கள் வெளியாகும் காலம் வருமா என்று நான் ஏக்கப் பெருமூச்சு விடுவதுண்டு.

ஒரு கவிஞன் இறந்துஇருபத்தைந்து ஆண்டு களுக்குள் அவனைப்பற்றிய வரலாறுகள் எல்லாம் எழுத்தில் வந்து விட வேண்டும். ஏனென்றால் இருபத்தைந்து ஆண்டுகளுக் குள் அக்கவிஞனோடு நெருங்கிப் பழகிய தலைமுறை மறைந்து விடும். அதன்பிறகு எழுதப்படும் நூல்களுள் புனைந்துரை இடம் பெற்று விடும். கவிஞன் 'அவதார புருஷன்' ஆகிவிடுவான்; நாக்கில் எழுதக் காளி தேவி யும் வந்து விடுவாள்.

பாவேந்தர் வாழ்ந்த புதுவை பிரெஞ்சுப் பண்

பாடும் தமிழ்ப்பண்பாடும் கலந்து செழித்த மண். அம்மண்ணுக்கே உரித்தான சில பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும், சொற்களும் தொடர்களும் குடும்ப விளக்கிலும் பிற காப்பி யங்களிலும் மலிந்து காணப்படுகின்றன. புதுவைப் பண்பாட்டில் ஊறிய தமிழறிஞர் கள் அப்பண்பாட்டின் அடிப்படையில் அவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.

பாரதியின் கவிதைத்தாக்கத்தாலும், பாவேந் தரின் கவிதைத் தாக்கத்தாலும் பாட்டுத் தமிழ் இந்த நூற்றாண்டில் இரு முறை மாற் றம் அடைந்துள்ளது. பாவேந்தர் தமிழுக்குப் பல புதிய சொற்களையும் படைத்துக் கொடுத்திருக்கிறார். மொழியியல் வல்லுநர் கள் இதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

18 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சி உலகத்திற்குப் பிரகடனப் படுத்திய 'சுதந் தரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற கொள்கைகளின் பாதிப்புகள் இவருடைய துவக்ககாலப் படைப்புகளில் அதிகம் காணப் படுகின்றன. பாவேந்தர் கூறும் பொதுவுடை மைக் கருத்துக்கும், இன்றைய கட்சிப்பொது வுடைமைக் கருத்துக்கும் வேறுபாடுகள் உண்டு. அரசியல் அடிப்படையில் இதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

சங்க காலத் தொட்டு இன்று வரை மொழி யையே பாடு பொருளாக (Theme) வைத் துப் பாட்டிலக்கியம் படைத்து அதில் வெற்றி கண்ட கவிஞர் பாவேந்தரைத் தவிர வேறு யாருமில்லை; மொழியை ஆற்றல் மிக்க பிரச் சார பீரங்கியாகப் பயன்படுத்தி வெற்றி கண் டவரும் இவரே! இவர் எழுப்பிய மொழி யுணர்ச்சிதான் இன்றைய தமிழக அரசி யலுக்கு உயிர்ச்சத்தாகவும் ஊட்டச்சத்தாக

வும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாவேந்தர் பாடல்களை மேடை தோறும் பாடியும் ஏடுதோறும் எழுதியும் தான் தன் மான இயக்கம் வளர்ந்தது; தி.மு.க ஆட்சிப் பீடம் ஏறியது. தமிழ் மக்கள் உள்ளத்தில் சீர்திருத்தப் புரட்சியையும், தமிழக அரசி யலில் ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தும் ஆற்றல் இவரது எழுத்துக்குத் தான் இருந் தது. அழகிய சொல்லுக்கும் ஆணித்தரமான கருத்துக்கும் அறிஞர் அண்ணாவே இவரிடத் தில் ஏராளமாகக் கடன்பட்டிருக்கிறார். இவையாவும் முறைப்படி ஆய்வு செய்தற் குரியவை. இலக்கிய ஆராய்ச்சி நடத்தும் என் இளைய தலைமுறையினரைக் காணும் போதெல்லாம், நான் அவர்களுக்கு இவற்றை அடிக்கடி நினைவூட்டுவதுண்டு. பாவேந்தர் எழுது கோல் தொடாத கருத்து எதுவுமில்லை; அவர் தொட்டு இலக்கிய மதிப்புப் பெறாத சிந்தனை எதுவுமில்லை. இன்றைய தமிழர்கள் எந்தக் கருத்துக்கு மேற்கோள் காட்ட வேண்டுமென்றாலும், திருவள்ளுவரிடம் செல்லவேண்டும்: அல்லது பாரதிதாசனைத் தேடி வர வேண்டும். திரு வள்ளுவரிடம் காணப்படாத இன்றைய புதிய சிந்தனைகளுக்குப் பாவேந்தரை விட் டால் வேறு யாருமில்லை. பாவேந்தர் ஒரு தனிப்பட்ட கவிஞர் அல்லர்; அவர் கவிஞர் களின் அணி வகுப்பு.

ஈரோடு
15.10.81

முருகு

பொருளடக்கம்

உள்ளத்தில் எழுதிய ஓவியம்	9
கொள்கை மறவர்	25
என் ஆசான் பாரதிதாசன்	29
நினைத்தாலே இனிக்கும் நாட்கள்	37
அவள் மேல் பழி	44
நோபிள் பரிசு கிடைத்திருக்கும்	58
தேனருவி	68
தமிழ்த் தமையன்	74
என் அறிவுத் தந்தை	84
ஆஸ்தி நாஸ்தி	93
இரு துருவங்கள்	98
மறத் தமிழன்	102
சொந்தச் சிந்தனையாளர்	106
சில அரும்புகள்	113

உள்ளத்தில் எழுதிய ஓவியம்

ஓவியர்
வேணுகோபால சர்மா

○

இன்று எல்லா அரசியல் அலுவலகங்களிலும், பள்ளி—கல்லூரிகளிலும், பொது மன்றங்களிலும், பேருந்து களிலும் கம்பீரமாகக் காட்சி தரும் திருவள்ளுவரின் திரு வுருவப் படத்தை எழுதி, அதற்காக ஜனாதிபதி பரிசு பெற்ற புகழ்மிக்க ஓவியர் திருவாளர் வேணுகோபால சர்மா.

இளமைப் பருவத்தில் விகட கவியாகக் கருநாடகக் கத் வார் சமஸ்தானத்திலும், ஆந்திராவின் புங்கனூர்

சமஸ்தானத்திலும் விளங்கி யவர்; 'போலச்செய்யும் ஆற் றல்' (Mimicry) கைவரப் பெற்றவர்; இசைப் புலமை யும் நடிப்பாற்றலும் மிக்க வர்; பல்துறை அறிஞர்.

பாவேந்த ரிடம் உ ள் ள ங் கலந்து பழகிய உணர்ச்சி மிக்க நண்பர். பாவேந்த ரைப் போலவே உறுமும் குரல் படைத்தவர். பாவேந் ரைப் பற்றிப் பேசும்போது இவர் பேச்சு, உணர்ச்சி, மெய்ப்பாடு யாவும் பாவேந் தரை நேரில் கொண்டுவந்து நிறுத்துகின்றன. பாவேந் தரைப் பற்றி வேறு யாரும் கூறாத மிக நுணுக்கமான செய்திகளை நி னை வி ல் நிறையத் தேக்கி வைத்திருக் கிறார். அச் செய்திகளின் தொகுப்பே இக் கட்டுரை.

○

●

பாவேந்தர் பாரதிதாசன் ஒரு மகாகவி மட்டுமல்லர்; பெரிய மேதை; ஒப்பற்ற கலைஞர்; என் வாழ்நாளில்

நான் கண்டு பழகிய மேதைகளில் என்னை வியப்பில் ஆழ்த்தியவர். அவரோடு எனக்கு எற்பட்ட உறவை எனக்கு வாய்த்த பெரும் பேறாகக் கருதுகிறேன்.

எனக்கும் அவருக்கும் 1938-39ஆம் ஆண்டுகளில் பழக்கம் முதன் முதலாக ஏற்பட்டது. அப்போது கவி காள மேகம் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. புகழ்பெற்ற தமிழறிஞரும், பொறிஞ ருமான திருவாளர் பா.வே.மாணிக்க நாயகரின் பங்க ளாவை வாடகைக்கு எடுத்து அதில் படக்கம்பனி வைத் திருந்தனர். பாவேந்தர் அங்குதான் தங்கியிருப்பது வழக்கம்.

கவிகாளமேகத்துக்குத் திரைக்கதை, வசனம், பாடல் யாவற்றையும் பாவேந்தரே எழுதினார். நாதசுவரச் சக்கரவர்த்தி திருவாடுதுறை ராஜரத்தனம் காளமேக மாக நடித்தார். காளமேகத்துக்காகப் பாவேந்தரால் எழுதப்பட்ட பாடல்கள் அடையாறு 'பிராக் ஜோதி ஸ்டுடியோவில்' முதன் முதலாக அரங்கேற்றம் செய்யப் பட்டன. அந்நிகழ்ச்சிக்கு நீதிக் கட்சியின் முன்னாள் அமைச்சர் திரு எஸ்.இராமநாதன் தலைமை வகித்தார். இசைமேதை ஜி.என். பாலசுப்பிரமணியம், திரு. தியாக ராஜபாகவதர், இசையரசி எம். எஸ். சுப்புலட்சுமி ஆகி யோர் பாடல் அரங்கேற்றத்தைக் காண வந்திருந்தனர். பாவேந்தர் 'லாங் கோட்' அணிந்து அவருக்கே உரித் தான கம்பீரத்தோடு காட்சியளித்தார். திருவாளர் இராஜரத்தனம் பாடுவதற்காக எழுந்ததும் ஜி.என்.பி., பாகவதர், எம். எஸ், ஆகிய மூவரும் எழுந்து நின்று கொண்டனர். இராஜரத்தனத்தின் இசை ஞானத்துக்கு அப்படி ஒரு மரியாதை. அவர் பாட்டை விரும்பித் தொலை பேசியில் கேட்பவர் பலர்.

பாவேந்தரிடம் பேசிக்கொண்டிருப்பது சிறந்த பொழுது போக்கு; சிரிக்கச் சிரிக்கச் சுவைபடப் பேசுவார். இலக்கி யத்தில் யார் எந்த ஐயம் கேட்டாலும் உடனுக்குடன்

சொல்லுவார். இலக்கணக் கருத்துக்கள் எப்போதும் விரல் நுனியில் (Finger tips) காத்திருக்கும். இலக்கணத்தை விளக்கி அதற்குரிய சூத்திரத்தையும் உடனே சொல்லுவார். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்று வான்புகழ் வள்ளுவர் கூறிய கருத்து அவருக்கு மிகவும் பொருந்தும். அவர் அறியாத புதிய செய்தி ஒன்றையாவது கூறினால் 'அப்படியா!' என்று மூக்கின் மேல் விரல்வைத்து வியப்போடு கேட்பார்.

''கபிலர் எழுதிய 'எண்ணூலே' சாங்கியம். சாங்கியத்தின் அடிப்படையிலேயே திருவள்ளுவர் திருக்குறளைத் எழுதினார். திருக்குறளின் உண்மைப் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் சாங்கியத்தின் அடிப்படையில் அதற்கு உரை காணவேண்டும்'' என்று பாவேந்தர் அடிக்கடி கூறுவார். எனவே சாங்கிய நூலின் படி ஒன்று கிடைக்குமா என்று அவர் சென்ற இடங்களிலெல்லாம் தமிழறிஞர்களைக் கேட்பார். கடைசியில் மதுரை புதுமண்டபத்தில் அந்நூல் கிடைத்தது. கிடைத்தற்கரிய ஒரு பெரிய புதையலைக் கண்டெடுத்ததுபோல் பாவேந்தர் மகிழ்ச்சியடைந்தார்.

சாங்கியத்தைப் படித்து முடித்ததும் அந்நூலின் அடிப்படையில் திருக்குறளுக்குத் தாமே புத்துரை காணவேண்டும் என்ற எண்ணம் அவருள்ளத்தில் ஏற்பட்டது. உடனே அம்முயற்சியில் இறங்கினார். கடலூர் பிருந்தாவனம் விடுதியில் ஓர் அறை எடுத்துத் திருக்குறளின் பாயிரத்துக்கு உரையெழுதத் தொடங்கினார். அப்போது திருக்குறள் முனிசாமி பாவேந்தரைப் பார்க்க வந்தார். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தொடங்கும் முதற் குறலுக்கு உரையெழுத மூன்று நாள் ஆராய்ச்சி நடந்தது.

"'ஆதிபகவன் முதற்றே உலகு'— என்று வள்ளுவர்பாடியிருக்கிறாரே! நடுவில் வந்த பகவன் யார்?" என்று நான் ஐயத்தைக் கிளப்பினேன். 'ஊரெல்லாம் பட்டி

தொட்டி, உண்பதோ கம்பஞ்சோறு, பேரெல்லாம் பொம்மன் திம்மன்'என்ற தனிப்பாடல் வரிகளை எடுத்து வைத்துக்கொண்டு அதற்குச் சிலேடைப் பொருள்கூறித் திருக்குறள் முனிசாமி கலாட்டா செய்துகொண்டிருந் தார்.

ஒருநாள் காலை 7-30 மணியிருக்கும்; வெளியில் சென்று விட்டுப் பாவேந்தர் பிருந்தாவன் விடுதி அறைக்குத் திரும்பினார். வழக்கம்போல்அறைச் சிற்றாள் காஃபி கொண்டுவந்தான். காஃபி வேண்டாம் என்று சொல்லி மறுத்துவிட்டார். ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக் கிறார் என்பதை நான் புரிந்து கொண்டேன். நானும் அமைதியாக இருந்தேன்.

சிந்தனையிலிருந்து விடுபட்டு 'சர்மா' என்று கூப்பிட் டார். 'ஏன்?' என்றேன் நான்.

''தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை.''

என்ற பாட்டுக்கு ஒரு புத்துரை கூறப்போகிறேன். இரவு நேரத்தில் கணவன் மனைவியிடையே சண்டை. கண வன் முரடன். மனைவியை நன்றாக உதைத்துவிட்டான். சண்டைக்குப் பிறகும் அவன் மனைவியை விடவில்லை. அவளிடத்தில் இன்பம் துய்த்தான். இருவரும் களைப் போடு உறங்கிவிடுகின்றனர். மனைவி அதிகாலையில் கண்விழித்து எழுந்தாள். கணவனின் அடிகளைத் தொட்டு வணங்கினாள். ஏன்?'' என்று கேட்டார் பாவேந்தர். நான் விழித்தேன்.

''அடித்தாலும் உதைத்தாலும் இரவில் இவ்வளவு இன் பத்தை எவன் தருவான்?—என்று நினைத்தாள் அவள். கணவன்மீது அளவில்லாத அன்பு அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. அவன் காலைத் தொழுதாள். இத்த கைய மனைவி கணவனுக்குப் பெய்யென்றவுடன் பெய் யும் மழை போலப் பயன்மிக்கவள்'' என்று கூறினார்.

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த நேரம். சென்னை நகரமக்களெல்லாம் குடிபெயர்ந்து வேற்றூர் களுக்குச் சென்று கொண்டிருந்தனர். திருச்சி தேவர் ஹாலில் சுயமரியாதை மாநாடு ஒன்று நடைபெற்றது. திருவாளர்கள் சௌந்தர பாண்டியன், பெரியார் ஈ.வெ.ரா., பட்டுக்கோட்டை அழகிரிசாமி, ஈழத்தடிகள், அறிஞர் அண்ணா போன்ற பெரிய தலைவர்கள் அம் மாநாட்டில் கலந்துகொண்டனர். பாவேந்தரும் மேடை யில் இருந்தார். மற்றொரு நாற்காலி கொண்டுவரச் சொல்லி என்னை அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொண்டார். நெற்றியில் குங்குமம் அணிந்து ஆத்திகக் கோலத்துடன் அமர்ந்திருந்த என்னை எல்லாரும் ஒரு மாதிரியாகப் பார்க்கத் தொடங்கினர். யாரோ ஒரு சு.ம.த்தோழர் பாவேந்தரின் அருகில் வந்து 'யாரிவர்?' என்று மெதுவாகக் கேட்டும் விட்டார்.

பாவேந்தர் அந்தத் தோழரைப் பார்த்து 'அவரா? அவர் ஓர் உலகம்! போ! போ!' என்று கூறினார். எதிர்ப்புக்கு அஞ்சாத அவர் துணிச்சலை நான் வியந்தேன். அவர் மீது நான் கொண்டிருந்த மரியாதை பன்மடங்காக உயர்ந்தது. அப்போது பெரியார் ஈ.வே.ரா. குடியர சில் இராமாயண ஆராய்ச்சி எழுதிக்கொண்டிருந்த நேரம். மாநாட்டு மேடையில் இராமாயணத்தைக் கடுமை யாகத் தாக்கியதோடு கொளுத்தவும் செய்தார். இராமா யணத்தைப் போலவே குறளும் வைதீகத்தை ஆதரிப்பது என்று சொல்லி அதையும் கடுமையாக விமர்சனம் செய் தார். அதையும் கொளுத்தவேண்டும் என்று சொன் னார். ஆனால் பாவேந்தருக்கு அக்கருத்து உடன்பாடு இல்லை. திருக்குறளின் அடிப்படையில் கழகத்தை அமைக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

சென்னைக்கு அருகில் உள்ள பெரிய பாளையம் அங்கா ளம்மன் கோயில் மிகவும் புகழ்பெற்ற அம்மன் தலம். ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளில் அங்கு நடைபெறும்

திருவிழாவுக்கு அளவுகடந்து மக்கள் கூடுவர். ஆடை எதுவுமின்றி இடுப்பில் வேப்பிலை மட்டும் சுற்றிக் கொண்டு பட்டிக்காட்டு ஆடவரும் பெண்டிரும் கோவிலைச்சுற்றி உருளுதண்டம் போடுவர். இந்த அநாகரிகத்தைக் கண்டு சகிக்காத பாவேந்தர் ஒருநாள் தம் நண்பர்களோடு ஒரு பெரிய காரில் பெரியபாளையம் புறப்பட்டார். டாக்டர் மா. இராஜமாணிக்கனார், சமணர் ஸ்ரீபால் ஆகியோர் உடன் வந்தனர். நானும் சென்றேன். அடையாறு மாணவிகள் சிலரும் எங்களுடன் வந்திருந்தனர். அங்கு பலியிடப்படும் ஆடு கோழிகளின் குருதி வாய்க்காலாக ஓடும். உயிர்ப் பலியைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சமணரான ஸ்ரீபால் எங்களுடன் கலந்து கொண்டார்.

நாங்கள் அம்மன் கோவிலுக்கு அருகில் கூட்டம்போட்டோம். ஸ்ரீபால் உயிர்ப் பலி கூடாது என்று கூறி அருளாறத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். ''பக்தி என்றால் என்ன என்பதைப் பற்றியும். அம்மன் பற்றிய விளக்கத்தையும் 184 புராணங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்க முடியும். நிர்வாணமாகக் கோவிலை வலம் வரவேண்டும் என்று எந்தப் புராணமும் எடுத்துரைக்கவில்லை. ஆண்டவன் பேரால் உயிர்ப் பலி வேண்டாம்'' என்று பாவேந்தர் உருக்கமாகவும், உணர்ச்சி ததும்பவும் பேசினார். உடன் வந்த அடையாறு மாணவிகள், நிர்வாணமாக கோவிலைச் சுற்றிய பெண்களைப் பார்த்து, ஆடை அணிந்து கோவிலை வலம் வரும்படி வேண்டிக் கொண்டனர்.

கூட்டத்தில் இருந்த சிலர், ''நிர்வாணமாகக் கோவிலைச் சுற்றுவது எங்கள் விருப்பம். நாங்கள் வேண்டுதலை நிறைவேற்றுவதற்காகச் செய்கிறோம். அதைக் கேட்க நீங்கள் யார்?'' என்று கேட்டனர்.

''தமிழ் நாட்டின் மானம் காற்றைப் போலவும், தண்ணீர் போலவும் எல்லார்க்கும் பொதுவானது. அதைக்

கெடுப்பதை எங்களால் பொறுத்துக்கொள்ள முடியாது" என்று அஞ்சாமையோடு அவர்களைப்பார்த்துக் கூறினார். அத்தகைய துணிச்சல் பாவேந்தருக்கு மட்டுமே உரியது.

பாவேந்தர் நாத்திகர். நான் ஆத்திகன்; அம்பாளை வழிபடுபவன். ஆனால் இந்தக் கொள்கை வேறுபாடு எப்போதும் எங்கள் நட்புக்குக் குறுக்கே நின்றதில்லை. அவர் நாத்திகக் கருத்துக்களைக் காரசாரமாகப் பேசிக் கொண்டிருப்பார். நான் அமைதியாக அருகிலிருந்து கொண்டு என் வேலையைக் கவனிப்பேன். நான் தாள் தோறும் வணங்கும் அம்பாளைப் பற்றி ஒரு பாட்டு எழுதித்தரும்படி அவரை அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தேன்; அவர் மறுத்துக் கொண்டிருந்தார். பிறகு என் நச்சரிப்புத் தாங்காமல் ஒரு நாள், "சரி. சொல்ற... எழுதிக்க!" என்று சொல்லிவிட்டுத் தலையணையில் முழங்கையை ஊன்றிப் படுத்துக்கொண்டே மளமள வென்று சொல்ல ஆரம்பித்தார். நானும் எழுதிக் கொண்டேன். அப்பாடலை மிகவும் பத்திரமாக வைத்து நாள்தோறும் பாராயணம் செய்து வந்தேன். அப்பாடல் என்னிடம் வந்த பிறகு என் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பொருளாதார வசதியும், புகழும் என்னைத் தேடிவந்தன.

ஒருமுறை அண்ணாப்பிள்ளைத் தெருவில் உள்ள வசந்த விகாரில் நாடக ஒத்திகை ஒன்று நடைபெற்றது. அங்கு அழகான சிறிய வெள்ளைப் பிள்ளையார் சிலை (Paper mould) ஒன்று இருந்தது. அதன் கலையழகு பாவேந்தரைப் பெரிதும் கவர்ந்தது. நீண்டநேரம் அதையே ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு என்னை நோக்கி, 'நீ பூசை செய்வதுண்டா என்று கேட்டார். நான் 'இல்லை' என்று சொன்னேன். அதற்கு அவர், "மனிதனுக்கு ஏதாவது ஒரு பிடிப்பு வேண்டும்" என்று சொன்னார்.

நான் ஒரு முறை பாவேந்தரோடு தங்கியிருந்தபோது முத்தமிழுக்கு என்ன சின்னம் (Symbol) போடலாம் என்று பேச்சு எங்களிடையே எழுந்தது. இயற்றமிழுக்குக் கிளியும், இசைத்தமிழுக்குக் குயிலும், நாடகத் தமிழுக்கு மயிலும் சின்னங்களாக இருக்கலாம் என்று முடிவு செய்தோம். பாவேந்தர் அம்முடிவை ஒருவெண்பாவாக எழுதிமுடித்தார். கீழ்க்கண்ட வெண்பா 1955-ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

பெற்ற தமிழகம் பெற்றது கைவிலங்கோ!
அற்றதோ மேன்மை, அழகு தமிழ்?—சொற்கிளியும்
ஆடல் மயிலும் இசைக்குயிலும் ஆட்சியம்பால்
வாடல் தவிர்த்து வாழ்வோம்.

பெருங்கவிஞர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரின் பேச்சும் போக்கும் சிலசமயங்களில் விபரீத மாக இருக்கும். ஏன் இவ்வாறு நடந்து கொள்ளுகிறார் கள் என்று நாம் சிந்தித்துப் பார்த்தாலும் நமக்கு உண்மை விளங்காது. சிறு குழந்தைகள் செய்யும் செயல்களை—அவை பொருளற்றவையாக இருப்பினும் — நாம் கண்டு மகிழ்ச்சி கொள்கிறோம் இல்லையா? அப்படி இவர்கள் செயலையும் நாம்கண்டு மகிழவேண்டி யது தான். பாவேந்தர் வாழ்க்கையில் இது போன்ற சுவையான செய்திகள் எத்தனையோ உண்டு.

கவி காளமேகம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த நேரம். பாவேந்தரும் அவர் பரிவாரமும் பா. வே. மாணிக்க நாயகர் பங்களாவில் முகாமிட்டிருந்தனர். ஒருநாள் பாவேந்தர் திடீரென்று எல்லாரையும் புறப் படுங்கள் என்று சொன்னார்; எல்லாரும் புறப்பட்டனர். பங்களா வாசலில் ஒரு டாக்சி வந்துநின்றது. எல்லாரை யும் 'ஏறுங்கள்' என்று கட்டளையிட்டார். எல்லாரும் ஏறிக்கொண்டோம். பாவேந்தர் முன் இருக்கையில் காரோட்டிக் கருகில் அமர்ந்துகொண்டு 'போ' என்றார். வண்டி புறப்பட்டது.

'எங்கே போகணும்?'— இது காரோட்டியின் கேள்வி.

'போ சொல்ற' — பாவேந்தர் பதில்.

வண்டி போய்க் கொண்டிருந்தது. 'மொகம்மது இப்ராகிம் கம்பனி' அருகில் வண்டி போய்க் கொண்டிருந்தது. காரோட்டி மீண்டும் கேட்டான் 'எங்கே போகிறோம்?' என்று. பாவேந்தர் சிரித்தார்.

வண்டி 'எல்பின்ஸ்டன்' திரைப்படக் கொட்டகையை நெருங்கிக் கொண்டிருந்தது. மீண்டும் காரோட்டி 'எங்கே போகணும்?' என்று கேட்டான். உடனே பாவேந்தர் என்னைக் காண்பித்து 'இவரைக் கேளு' என்று கூறிவிட்டுச் சிரித்தார். வண்டி மூர்மார்க்கெட்டை அடைந்தது. 'எல்லாரும் கீழே இறங்குங்க' என்றார் பாவேந்தர். நாங்கள் எல்லாரும் இறங்கினோம். எல்லாரும் எவ்வளவு காசு வெச்சிருக்கீங்க?' என்று கேட்டார் பாவேந்தர். ஒருவரிடமும் காசில்லை. அருகில் 'நகரதூதன்' பத்திரிகை அலுவலகம் ஒருமாடியின் மேல் இருந்தது. அதன் ஆசிரியரான திருமலைசாமி பாவேந்தருக்கு வேண்டியவர். அருகில் நின்று கொண்டிருந்த நாவரசை அனுப்பித் திருமலை சாமியிடம் ரூ 10 வாங்கி வரச் சொன்னார். திருமலைசாமி இல்லை யென்று சொல்லி விட்டார். பாவேந்தருக்கு உடனே கோபம் வந்து விட்டது. பாதையில் இருந்தபடியே 'திருமலை சாமி என்றவனே!' என்று உரக்கக் கூப்பிட்டார். திருமலைசாமி மாடியிலிருந்து எட்டிப்பார்த்தார்.

''உன்னைப் போய் நான் பணம் கேட்ட பாரு! என் புத்தியை ஜோட்டால அடிக்கணும்!" என்று உருமி விட்டு வண்டியில் ஏறினார். வண்டி மீண்டும் புறப்பட்ட இடமாகிய பா. வே. மாணிக்கநாயகர் பங்களாவை நோக்கிச் சென்றது. பெட்டியிலிருந்து பணத்தை எடுத்து 'மீட்டர் கட்டணம்' எவ்வளவு என்று பார்த்துப் பணத்தைக் கொடுத்தார் பாவேந்தர். பாவேந்தர் வாழ்க்கையில் இதுபோல் எத்தனையோ நிகழ்ச்சிகள்.

ஒருநாள் புதுச்சேரி பெருமாள் கோவில் தெருவில் உள்ள அவர் வீட்டுத் திண்ணையில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு பாவேந்தர் அமர்ந்திருந்தார். ஒருவன் கூடையில் முட்டை விற்றுக் கொண்டு வந்தான்.

'ஏய்...முட்டை இங்க வா!' என்று கூப்பிட்டார் பாவேந்தர். முட்டைக்காரன் வந்தான்.

'கூடையில இருக்கற எல்லா முட்டையும் என்ன விலை? என்று கேட்டார். ஐந்து ரூபாய் என்று அவன் பதில் சொன்னான்.

'4 உருபா 15 அணா கொடுப்பியா?' என்றார் இவர். அவன் சரி என்றான். 'முட்டையெல்லாம் நடையிலே அடுக்கு! பழனியம்மா! முட்டைக்காரனுக்கு 4உருபா 15 அணா கொடுத்துட்டு முட்டையெல்லாம் எடுத்துவை!' என்று பாவேந்தர் கட்டளையிட்டார். இது அவர் சுபாவம். ஏன் என்று யாரும் கேட்கக் கூடாது; கேட்கவும் முடியாது.

ஒருவன் மூங்கில் கட்டு ஒன்றைப் பாதையில் தூக்கி விலை கூறி விற்றுக் கொண்டு வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். விலை கேட்பார் பாவேந்தர். அவன் 12 உருபா என்றால் இவர் 11½ உருபாவுக்குக் கேட்பார். அவனும் கொடுத்துவிடுவான். அந்த மூங்கில் தற்போது வீட்டுக்குத் தேவையா? என்று நினைக்கமாட்டார். மனைவியைக் கூப்பிட்டுப் பணம் கொடுக்கச் சொல்லுவார். மனைவி பழனியம்மாள் 'இப்போது எதற்கு மூங்கில்?' என்று கேட்டால், '...ச்சீப்...ச்சீப்' என்பார். அதற்குமேல் அவரை எதிர்த்து ஒன்றும் பேசக் கூடாது.

பாவேந்தர் மிகச்சிறந்த நகைச் சுவை ரசிகர். யாராவது நகைச்சுவையாக எதையாவது சொல்லிவிட்டால் உடம்பு குலுங்க விழுந்து விழுந்து சிரிப்பார். அவருடைய எழுத்தில் வீரச்சுவையும், நகைச்சுவையுமே விஞ்சி நிற்கும்.

ஒரு முறை பாவேந்தரும் நானும் சார்லிசாப்ளின் நடித்த திரைப்பட மொன்று பார்க்கச் சென்றோம். அது ஊமைப் படம்.

சார்லிசாப்ளின் சுவரில் ஆணி அடிப்பதுபோல் ஒருகாட்சி. அவர் மிகவும் குள்ளமாக இருந்ததால், அருகில் இருந்த நண்பர் 'எதையாவது போட்டு அடி' என்று கூறிவிட்டுப் போனார். (அதாவது எதையாவது உயரமாகப்போட்டு அதன்மேல் ஏறி நின்று அடி என்ற கருத்தில் அவர் சொன்னார்) சாப்ளின் அருகில் இருந்த செய்தி தாளைப் போட்டு அதன்மேல் ஏறி நின்று அடித்தார். இது வேடிக்கைதானே! எட்டாத காரணத்தால் அருகில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு அதன்மேல் ஏறிநின்று அடித்தார்.

சுவரில் ஆணி லேசில் இறங்கவில்லை. அதற்குள் சாப்ளினுக்கு வேர்த்து விருவிருத்துப் போய்விட்டது. விரலெல்லாம் வியர்வையினால் நனைந்திருந்த காரணத்தால் ஆணியும் நனைந்திருந்தது அந்த ஆணி ஈரம்பட்டு வழுக்கியது. எனவே கழுத்தில்அணிந்திருந்த 'டை'யில் அதைத் துடைத்தார். துடைத்தவர் அந்த டையோடு சேர்த்து ஆணியை அடித்து விட்டார். ஆணியை அடித்து முடித்தவுடன் நாற்காலியிலிருந்து கீழே குதித்தார். டை ஆணியில் மாட்டிக் கொண்டிருந்த காரணத்தால் அவர் சுவரில் தொங்கினார். இந்தக் காட்சியைப் பார்த்த பாவேந்தர் சிரிப்பை அடக்க முடியாமல் துள்ளிக் குதித்தார். அவர் கையில் இருந்த சிகரெட்நெருப்பு அருகில் உட்கார்ந்தவரைச் சுட்டுவிட்டது.

அவர் கோபத்தோடு 'என்னய்யா இது? கண்ணுகிண்ணு இருக்கா? நெருப்பாலே சுடரியே?' என்று கேட்டார்.

அதற்குப் பாவேந்தர் சிரித்துக்கொண்டே ''முண்டம்! நெருப்புச் சுடறது உனக்கு இப்பத் தெரியுதா?" என்று கேட்டார். நகைச் சுவையை மெய்மறந்து எப்படிச்

சுவைப்பார் பாவேந்தர் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

பாவேந்தருக்கு ஓவியம் தீட்ட வராது. ஆனால் ஓவியக் கலையில் நல்ல ஈடுபாடு உண்டு. ஓவியத்தைப் பற்றி அவர் கூறும் அபிப்பிராயம் சிறப்பாக இருக்கும். ஜனாதிபதி பரிசு பெற்ற திருவள்ளுவர் திருவுருவத்தை எழுதும்படி என்னை அடிக்கடி தூண்டி ஊக்கமளித்தவர் பாவேந்தரே. நான் திருவள்ளுவர் படத்தைத் தீட்டியபோது பாவேந்தர் அருகிலிருந்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார். 'இப்படியிருந்தால் நன்றாக இருக்கும்' என்று தம் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார். படம் ஓரளவு முற்றுப்பெறும் நிலையில் இருந்தது. அப்படத்தைப் பலரும் நடமாடுமிடத்தில் வைக்குமாறு எனக்குக் கூறினார். படம் போவோர் வருவோர் பார்வையில்பட்டு அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. அதைப் பார்த்த எல்லாரும் 'என்ன? திருவள்ளுவர் படம் போல் இருக்கிறதே?' என்று கேட்டனர். பாவேந்தருக்கு பரம திருப்தி. 'சர்மா? படத்தை முடித்து விடு!' என்றார்; தானும் முடித்தேன். அப்படம் அச்சேறுவதற்கும் பாவேந்தரே துணை நின்றார். அப்படம் தமிழகத்தில் பெருத்த வீளம்பரம் பெற்றதோடு எனக்குப் புகழையும். ஜனாதிபதி பரிசையும், செல்வத்தையும் வாரிவழங்கியது ஏன்? அப்படம்தான் இப்போது எனக்குச் சோறு போடுகிறது.'

பாவேந்தருக்குப் புதுக்கவிதை (Modern poem) பற்றியோ, புதிய ஓவியக்கலை (Modern Art) பற்றியோ தெரியாது. என்றாலும் புதிய ஓவியக்கலை பற்றி அவரிடம் ஒரு முறை பேசிக்கொண்டிருந்த போது மிக அழகாக ஒரு கருத்தை வெளியிட்டார்.

''மரம் அழுகிறது; கல்லும் கண்ணீர் வடிக்கிறது! என்று கவிதை எழுதுகிறோம். இதை எண்பிப்பது எப்படி? இதற்கு எப்படிப் படம் போடுவது?... இது பெரிய விஷ

யம். இதுபோன்ற கருத்துக்கு உருவம் கொடுக்கப் புதுக்கலை அவசியந்தான்" என்று கூறினார்.

பாவேந்தருக்குக் காஷ்மீர் சால்வை மீது அளவு கடந்த விருப்பம். யாராவது பாதையில் போர்த்துக்கொண்டு செல்வதைப் பார்த்தால் "தோ! அவர் போர்த்துக் கிட்டுப் போறாரே அந்தச் சால்வை நல்லாருக்கல்ல. என்ன விலை இருக்கும்?" என்று கேட்பார். அவருடைய விருப்பத்தை அறிந்த நான் திருவல்லிக்கேணி சௌக்லி யில் தேடிப்பிடித்து ஒரு நல்ல சால்வையாக வாங்கி ஒரு விழாவின் போது அவருக்கு நான் போர்த்தினேன். அவருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. எந்த விழாவுக்குப் போனாலும் அதை மூலைவாக்கில் மடித்துக் கழுத்தில் போட்டுக் கொண்டு செல்வார். அவர் சென்னையில் இருந்தபோது அச் சால்வையைக் கழுத்தில் போட்டபடி அவர் திருவுருவத்தை வண்ண ஓவியமாகத் தீட்டினேன். அந்த ஓவியம் சட்டமிடப்பட்டு இன்றும் அவர் வீட்டில் மாட்டப்பட்டுள்ளது. தமது வாழ்வின் இறுதிக் காலத் தில் அப்படத்தை ஆர்ட்தாளில் நிறைய அச்சிட்டு வைத் துக்கொண்டு தம்மைக் காண வருபவர்க்குக் கொடுப் பார்.

பாவேந்தர் கடைசி வரையிலும் என்னிடம் மிகவும் அன் பாகவும் மதிப்போடும் பழகினார். என்னைப் பார்க்க வரும் போது கட்டாயம் பழம் வாங்கி வருவார். என் னைக்கடிந்து கொண்டதில்லை. 'சர்மா! சர்மா!' என்று உயிரையே விடுவார். ஆனால் எல்லாரிடத்திலும் அவர் அவ்வாறு நடந்துகொண்டார் என்று சொல்ல முடியாது. கோபம் வந்து விட்டால் அவர் என்ன செய்வார் என்று சொல்ல முடியாது.

சுந்தரமூர்த்தி கிராமணி என்பவர் பாவேந்தரின் நண்பர். அவர் நாட்டியக் குழுவொன்று வைத்திருந்தார். நாட் டிய நிகழ்ச்சி யொன்று புதுவையில் நடத்துவதற்காக அவர் வந்திருந்தார். புயலும் மழையும் சேர்ந்தடித்த

காரணத்தால் திட்டமிட்டிருந்தபடி அந்நாட்டிய நிகழ்ச்சி நடத்த முடியாமல் போய்விட்டது. பாவேந்தர் குடியிருந்த வீட்டுக்கு எதிர்வீட்டில் நாட்டியக்குழு தங்கியிருந்தது. சமையலுக்கு வேண்டிய ஏற்பாட்டைப் பாவேந்தர் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் வீட்டில் ஒரு கட்டைப் பிரம்மச்சாரி வேலைக்கிருந்தான். அவன் ஓர் அப்பாவி. எல்லாரும் அவனைக் 'கோட்டைக் கறையான்' என்று கூப்பிடுவார்கள். சமையலுக்காக ¼ படி மிளகாய் வாங்கி வரும்படி பாவேந்தர் அவனை அனுப்பியிருந்தார். அவன் தவறுதலாக ½படி மிளகாய் வாங்கி வந்துவிட்டான். பாவேந்தருக்கு அளவு கடந்த கோபம்.

'ஏண்டா இவ்வளவு மிளகா வாங்கி வந்தே?' என்று கேட்டார் பாவேந்தர். அவன் ஏதோ அரைகுறையாகப் பதில் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

''டேய் நில்லுடா! எருமை! நா கேக்கற. நீ பாட்டுக்குப் போய்க்கிட்டே இருக்கறயே...கேலியா பண்ற...''என்று சொல்லிவிட்டு ஓங்கிக் கன்னத்தில் அறைந்தார். பல் ஒன்று அவன் வாயிலிருந்து தெறித்து விழுந்தது. ஏதோ கோபத்தில் அடித்துவிட்டாரே தவிர, பல்விழுந்ததைப் பார்த்ததும் அவருடைய கண்கள் கலங்கிவிட்டன.

பாவேந்தருடைய வாழ்க்கையில் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. அவரோடு பழகியவர்கள் அவருடைய உணவுப் பழக்கங்களைப் பற்றி அடிக்கடி கூறுவதுண்டு. அவர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடும் இயல்புடையவர். நான் மரக்கறி உணவுண்பவன். என்றாலும் நாங்கள் சேர்ந்து உணவுண்ட சில நிகழ்ச்சிகள் என் உள்ளத்தை விட்டு நீங்காமல் இருக்கின்றன.

சென்னையில் இருக்கும்போது தம்புச் செட்டித் தெருவில் உள்ள ராமபவனில் இட்டிலியைக் கட்டி வாங்கிவந்து

அறையில் உண்பது பாவேந்தர் வழக்கம். ஒருநாள் நானும் என் நண்பர் ஒருவரும் பாவேந்தரை அழைத்துக் கொண்டு ராமபவனுக்கே சென்று அங்கேயே சாப்பிட்டோம். அப்போது ராமபவனில் இட்டிலி காலணா. பாவேந்தர் சுவைத்துச் சாப்பிட்டார். சாப்பிடும் போது நடுவில் பேசுவது அவருக்குப் பிடிக்காது; பேசினால் சுவை தடைப்படும் என்பார். 'சப்ளையரை' அடிக்கடி சட்டினி கேட்டுச் சலித்துப் போய் 'இந்தா அந்தச் சட்டினித் தோண்டியை இங்கேயே வச்சுட்டுப் போ!' என்று கூறினார். அன்று எங்களுக்குச் சிற்றுண்டிச் செலவு 2 உரூபா 14 அணா ஆயிற்று. அன்று அந்த 'பில் தொகை' பெரியது.

விழுப்புரம் சந்திப்புக்கு எப்போது பாவேந்தர் போனாலும், பிளாட்பாரத்தைச் சுற்றி நோட்டமிடுவது அவர் வழக்கம். அங்கே ஒருவன் கண்ணாடிப் பெட்டியில் இட்டிலியை வைத்துக் கொண்டு விற்பான். அந்த இட்டிலி கொஞ்சம் பழையதாகவும் புளிப்பாகவும் இருக்கும். மிகவும் காரமாக மிளகாய்ப் பொடியை எண்ணெயில் கலந்து வைத்திருப்பான். அந்த இட்டிலி பாவேந்தருக்கு மிகவும் பிடிக்கும். பெட்டியையே காலி செய்து விடுவார்.

பாவேந்தர் கோபக்காரராக இருந்தாலும் சுவையான நண்பர். அவரோடு இருக்கும்போது பொழுது போவதே தெரியாது. எழுதத் தொடங்கி விட்டால் யாரிடமும் பேச மாட்டார்; எழுதிக் கொண்டே இருப்பார். கையில் 'சார் மினார்' எப்போதும் புகைந்து கொண்டே இருக்கும். கையில் ஊசி ஏறியது கூடத் தெரியாமல் அவர் எழுதிக் கொண்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

பாவேந்தருக்கும் எனக்கும் இடையிலே இருந்த நட்பு ஆத்மார்த்தமானது. அவர் நினைவுகள் எல்லாம் இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றன.

கொள்கை மறவர்

இரா. இராசகோபாலன்

○

காவிரி பாயும் தஞ்சைத் தரணி கழகக் கருத்துக்கு வளவயல். அஞ்சாநெஞ்சன் அழகிரிபோன்ற அரியேறு களைப் பெற்றெடுத்த வீர விளைநிலம். திருவாளர் இராசகோபாலன் திரா விடர்க் கழகத் தோழர்களுள் குறிப்பிடத்தக்கவர். மாவட் டத் தலைவராகவும், தஞ்சை

நகரத் திராவிடர்க் கழகத் தலைவராகவும் நீண்ட நாள் பணியாற்றியவர். இராணி உணவு விடுதியின் உரிமையாளர். பாவேந்தரிடம் பற்றோடு பழகியவர்.

○

●

நீதிக்கட்சிதமிழகத்தில் செல்வாக்கோடு இருந்த காலத்தில் நான் சிறுவன். இளமைக் காலத்தில் பட்டுக்

கோட்டை அழகிரி, குப்தா, ஐயா(பெரியார்) ஆகியோர் பேச்சில் எனக்கு ஈடுபாடு அதிகம். 1937 ஆம் ஆண்டு குப்தா தலைமையில் இந்தி எதிர்ப்புப் படையில் நான் சென்றேன்.

1946 ஆம் ஆண்டு தஞ்சைக்கு அருகில் உள்ள மாரியம்மன் கோவில் கூட்டத்துக்கு ஐயாவையும், பாவேந்தரையும் அழைத்திருந்தேன். பாவேந்தரின் கம்பீரமான தோற்றமும், துணிச்சலான பேச்சும் இளைஞனாக இருந்த என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஐயாவைப் போலப் பாவேந்தரும் எஃகு உள்ளம் படைத்தவர்; நினைத்ததை அஞ்சாமல் கூறுபவர். ஐயா கூடச் சில சமயங்களில் வளைந்து கொடுப்பார்;ஆனால் பாவேந்தர் கொஞ்சங்கூட வளைந்து கொடுக்காத கொள்கை மறவர்.மாரியம்மன்கோவில் கூட்டத்தில் புராணங்களில் புதைந்து கிடக்கும் ஆபாசங்களையும், முடை நாற்றம் வீசும் மூடத்தனங்களையும் சூறைக் காற்றைப் போல் சுழன்றடித்துத் தாக்கினார். சிறுத்தொண்டர் புராணத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, இதையெல்லாம் ஒரு கதைன்னு எழுதிட்டா... நாமும் வெட்கமில்லாம படிக்க றோம்...''என்று ஏகவசனத்தில் விளாசினார்.

கூழுக்கொருவனுக்கு உழைப்பில்லை என்றால்
கோலை முறித்திடுவோம்—

என்ற அவர் பாட்டு வரிகள் எனக்கு மிகவும் பிடித்தமான வரிகள். பேராவூருணித் தோழர் கருப்பையா பாவேந்தர் பாடல்களை மெய்சிலிர்க்கப் பாடுவார்.

மாரியம்மன் கோவிலில் கூட்டம் நடந்த அன்றே தஞ்சையில் ஒரு திருமணத்துக்குப் பாவேந்தர் தலைமைதாங்கினார். மணமகள் ஒரு கைம்பெண்; கைக்குழந்தை ஒன்றும் அவருக்கு இருந்தது. அச்சீர்திருத்தத் திருமணத்துக்குத் தலைமைதாங்கிச் சிறப்புற நடத்திக் கொடுத்தார் பாவேந்தர்.

சாதாரணக் கழகத் தோழனிடத்திலும் பாவேந்தர் தந்தை போலப் பழகினார். 'பாரதிதாசன் கவிதை'த் தொகுப்பு எனக்குப் புத்துணர்ச்சி யூட்டும் அருமருந்து. எனக்குச் சோர்வு ஏற்படும் போதெல்லாம் அதை எடுத்துத் திருப்பித் திருப்பிப் படிப்பேன். புதுச்சேரிப்பக்கம் போனால் நான் அவரை வீடுதேடிச் சென்று பார்க்காமல் திரும்பமாட்டேன். தஞ்சாவூர்ப்பக்கம் வந்தால் என்னைப் பார்க்காமல் அவரும் போக மாட்டார்.

புதுச்சேரியில் கடல்மீனே தின்று பழக்கப்பட்ட அவருக்குக் குளத்துமீன் (வரால்) என்றால் உயிர். தஞ்சை வந்தால் வரால்மீன் பொரியலும் குழம்பும் அவர் இருப்பிடத்திற்கு— பெரும்பாலும் திராவிடர் கழகக் கட்டிடம் அல்லது அரசர் சத்திரத்தில் தங்குவார்— நான் கொடுத்தனுப்புவது வழக்கம்.

மரக்கறி உணவுக்காரரைக் கண்டால், 'மூன்று மூட்டைப் பருப்புத் தின்றால் முக்கால் அணாத் தங்கச்சத்து' என்று கேலி செய்வார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் ஒருமுறை பேசிய போது, 'தெய்வந் தொழாள் கொழுநன் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற பாட்டுக்கு அவர் கூறிய புதிய விளக்கத்தைக் கேட்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

என் ஆசான் பாரதிதாசன்

புலவர். மு. மதிவாணன்

○

இக்கட்டுரையாசிரியர் புலவர் மு.மதிவாணன் மாயூரம் கூறை நாட்டைச் சேர்ந்தவர். பாவேந்தரின் மாணவர் பட்டாளத்தில் ஒருவர். இசையும் நாடகமும் கைவரப்பெற்றவர். பாவேந்தர் இசையமுதில் பல பாடல்களுக்குப் பண்ணமைத்தவர். 'பண்ணருவி' இவ

ரெழுதியுள்ள இசை நூல். 'மதிவாணன் நாடகத் தமிழ் இயக்கம்' என்ற அமைப்பை நிறுவி நாடகத் தொண் டாற்றி வருகிறார்.

○

●

எங்கள் குடும்பம் பாவேந்த ருக்கு மிகவும் வேண்டிய குடும்பம். சிங்கப்பூரில் இருந்த என்னைத் தமிழ்

நாட்டுக்கு வரவழைத்துத் தருமபுரம் ஆதினம் தமிழ்க் கல்லூரியில் சேர்த்தவர் பாவேந்தரே.

தமிழ்ப்புலவர் கல்விபயின்றிருந்தாலும் எனக்கு ஆசிரியர் பணியில் ஈடுபாடு ஏற்படவில்லை. இசைத்துறையும் நாடகத்துறையும் என்னைப் பெரிதும் கவர்ந்த காரணத்தால், இசை நாடக அரங்குகளிலே என் பொழுதைக் கழித்தேன். பாவேந்தரைச் சந்திப்பதும், அவர் பாடல்களைப் பாடுவதும் என் இனிய பொழுது போக்கு. பாவேந்தரோடு கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் சென்று அவர் பாடலைப் பாடி மகிழ்விப்பது என் வழக்கம்.

பாவேந்தருக்குப் புறாவின் இறைச்சி மிகவும் பிடிக்கும். இரவு நேரங்களில் மாயூரம் கோவில் கோபுரத்தின் மீது ஏறி அங்கு அடைந்திருக்கும் புறாக்களைப் பிடித்து ஒரு கூடையில் போட்டுத் திராவிடமணி என்ற தோழரிடம் கொடுத்துப் புதுவை அனுப்புவேன். ஒருமுறை நான் கொடுத்தனுப்பிய புறாக்கள் சற்று முற்றலானவை. 'நீ அனுப்பிய புறாக்களைப் பெற்றேன்; அத்துணையும் கிழங்கள்' என்று அடுத்தநாள் பாவேந்தரிடமிருந்து கடிதம் வந்தது. உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் வெளிப்படுத்தும் அவர் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது.

செம்பனார் கோயிலில் ஒரு சீர்திருத்தத் திருமணத்துக்குப் பாவேந்தர் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்தார். மணமகனுடைய நண்பர் ஒருவர் தலைவராக இருந்த பாவேந்தரின் ஒப்புதலைப் பெறாமல் 'வாழ்த்துப்பா' ஒன்றைப் படிக்க வந்தார். 'என் இசைவு இல்லாமல் எள்ளும் அசையக்கூடாது. நல்லது கெட்டதுக்கு நான்தானே பொறுப்பு!' என்று சொல்லி வாழ்த்துப் பாவை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டார்.

இற்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்

யான் இசை மாணாக்கனாக இருந்த காலம் அது. ஒரு நாள் பாவேந்தரிடமிருந்து ஓர் இனிய செய்தி வந்தது.

"கோவையில் நாளிது 1950 ஆம் யாண்டு 'மே'த் திங்கள் 27-28 ஆகிய நாட்களில் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு நிகழவிருப்பதால், நீவிர் இசையமுது பாடல்களைப் பாடுவதற்கு வந்து சேருக" என்று ஆணை பிறப்பித் திருந்தார்கள். காலத்தை எதிர்பார்த்துக் கொண்டி ருந்த யான் பண்ணமைத்தது போக எஞ்சியிருந்த மற்ற பாடல்களுக்கும் இசை உரு போட்டுக் கொண்டு மாநாட் டிற்குச் சென்றிருந்தேன்.

முத்தமிழ் மாநாடு பாவேந்தர் அவர்களின் 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப் பெற்றது. பாவேந்தர் அவர் களின் மாநாட்டுத்தலைமை உரையுடன் காலைநிகழ்ச்சி முடிவுற்றது. மாலையில் இசைத்தமிழ் நிகழ்ச்சி தொடங் கப்பட்டது.

பற்பல இசைஞர்கட்கு இடையிலே பாவேந்தருக்குப் பிடித்தமான பாடல்கள் பலவற்றை நான் பாடிக் கொண்டிருந்தேன். 'தலைவாரி பூச்சூடி' என்ற இசை யமுதுப் பாடலைப் பாடத் தொடங்க இருந்த என்னை நோக்கி, "இதைத்தான் எல்லாரும் பாடுகின்றார் களே. நீ 'காலுக்குப் புன்னையிலை போலும்' என்ற பாடலைப் பாடேன்" என்று அரங்கினர் அறிய அறிவித் தார் பாவேந்தர்.

அதன்படி அப்பாடலைப்பாடி ஓய்ந்ததும் எனக்குப் பின் பாடவிருந்த பாடகர் கோவை திரு அருச்சுனன் என்ப வர் "இது என்ன இசை? யார் இதை இப்படி இசைப் படுத்தியது?" என்று ஓர் வினாவினை எழுப்பினார்.

நான் ஒலிபெருக்கி முன் நின்றவாறே 'இது பாகுஆசு— வரியைச் சார்ந்த இசை: பாவலர் பெருமானுக்கு மிக

வும் பிடித்தமானது' என்று சுட்டினேன். கோவைப் பாடகர் அருச்சுனன் கேள்வி பாவேந்தர் அவர்கட்குப் பெரும் சீற்றத்தை உண்டு பண்ணியது என்று எண்ணு கிறேன். உடன் நிகழ விருந்த இசைத்தமிழ் மாநாட்டுத் தலைமையுரையாக இந்த 'பாகுஆசுவரி' இசையின் நுணுக்கத்தையே பேசத் தலைப் பட்டார்கள்.

இனிய என் மென்குரலால், பெண் இழைவது போன்று பாடிக்காட்டிய என்னையும் கடந்து, அரிமாக் குரலிலே அப்பண்ணைப் பாவேந்தர் பாடிக்காட்டினார். (ஆசுவரி —விரைந்து இசைக்கும் பாட்டு)

''இந்தப் பாகு ஆசுவரிப் பண்ணை என் பாடகர் மதி வாணன் பெண் பாடுவதுபோன்று பாகாய் இழைத்துக் காட்டினார். சர்க்கரையைப் பாகாய்க் காய்ச்சும்போது அதன்கண் ஓர் இழை தோன்றுவதுபோன்று, இப் பண்ணை இழைக்கும்போது அதிலே தோன்றும் மெல் லிய எடுப்பின் ஓசை (இதை அம்மிங் என்பர்) எல்லாரை யும் மயக்கிவிடுவதால்தான் இது 'பாகுஆசுவரி' என்ற இனிய தமிழிசைக் கூறினைப் பெற்றிருக்கிறது. இந்த இசைதான் நம் பழந்தமிழ்ப் பாணர்களால் பெரிதும் விரும்பிப் பாடப்பெற்றதாக இசை கூறு நூல்கள் இயம்பு கின்றன. இந்தப் பாகு ஆசுவரி தான் காலத்தால் கடைப்பிடிப்பாரற்றுச் சற்று இனிமை மரீஇ,பெயர்மரீஇ 'பாகேசுவரி' என்று கர்நாடக இசையில் இடம் பெற்று விட்டது.

"இங்குள்ள தமிழ்ப் பண்களையெல்லாம் வடநாட்டார் தமதாக்கிக்கொண்டு உருமாற்றி, பொருள்மாற்றிக் கொண்டுவந்து கோவில்களில் அமர்த்தியுள்ள குட்டிக் கடவுள்களின் பெயரால் 'கர்நாடக சங்கீதராகம்' என்று விளம்பரப்படுத்துகின்றனர். அப்படி மாறி வழங்குவது தான் 'பாகேசுவரி' என்ற கர்நாடக இசைப்பண். இங் குள்ள இசையாளர்கள் இதைப் புரிந்து கொள்வது சாலச் சிறந்த ஒன்றாகும்.

இப்படித்தான் தமிழில் உள்ள பல தூய சொற்றொடர்கள் பிற மொழியாளரால் கவர்ந்து செல்லப்பட்டு, உருமாறி வட சொல்லென்று நம்மிடையே திணிக்கப்படுவதும், அக் கூற்றினை ஏற்று இங்குள்ள முண்டங்கள், கூத்தாடுவதும் இன்று கொடுஞ்செயலாயிற்று. 'நிருத்தம்' என்ற சொல் ஆடலைக் குறிக்கும். ஆடும்போது வெளியிடும் முத்திரைகள் உள்ளத்தின் கூறுகளை வெளிக்கொணர்ந்து நிறுத்திக் காட்டுவதால் 'நிறுத்தம்' என்று குறிக்கப்பட்டுப்பின் 'நிருத்தம்' ஆயிற்று. ஆடல் புரியும் ஒருத்தி கை, கண், வாய், மெய், முகம் ஆகியவற்றில் தன் அகக் குறிப்புகளைக் காட்டி நிறுத்துதல் இயல்புதானே. இத்தூய தமிழ்ச் சொல்லை 'நிர்த்தனம், நர்த்தனம்' என்று பாழ்படுத்தி வடசொல்லாக மாற்றிக் கொண்டுவந்து கூறுவார் கூற்றைக் கேட்டுத் திரியும் தமிழ்த் தறுதலைகளை உதைத்தாலென்ன?'' என்று கூறி எதிரிலிருந்த ஒலி பெருக்கியை எட்டி உதைத்தார். அது இன்னும் என் மனக்கண் முன்னே காட்சியளிக்கிறது.

இத்தகைய உணர்ச்சிப் பெருக்கான மாநாட்டில் கலந்து கொண்டு ஊருக்குத் திரும்பிய எனக்குப் புதியதோர் உணர்ச்சி பிறந்தது. தமிழில் பிறழ்ந்த,மறைந்த இசைப் பண்களையெல்லாம் ஆய்ந்தறிந்து தக்கதோர் இசை வளம் தமிழுக்குப் படைக்கவேண்டும் என்ற ஆர்வம் என்னை ஆட்கொண்டது. நாங்கள் ஏறிவந்த புகை வண்டி கருரைத் தாண்டிக் கொண்டிருந்தது. உள்ளத்தில் ஏற்பட்ட என் புதிய ஆவலைப் பாவேந்தரிடம் புகலத் தலைப்பட்டேன்.

''நானும் தங்களைப்போல் இசைப்பாடல்கள் இயற்றி இசைக்க ஒரு வழியைக் காட்டுங்கள்'' என்றேன்.

பாவேந்தருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''அடா! பாடகனெல்லாம் பாவலனாக மாறினால் இசையுலகத்தை யாரப்பா காப்பாற்றுவது? தமிழ்ப்பாட்டே தலையெடுக்

காதிருக்கும் இந்தத் திரைப்பாட்டுக் காலத்தில், உன் வளரும் தமிழிசையை விடுத்துப் பாக்களத்தில் குதிக்கப் போகிறாயா? ஒரு துறையிலேனும் உருப்படியாகத் தேர்ச்சிகொள்; பிறகு பார்க்கலாம்'' என்று கூறினார்.

ஊர் வந்ததும் என் அளவிட முடியாத உணர்ச்சி வெள்ளத்தில் எழுந்த ஒரு பாடலைப் பாவேந்தர்க்கு அனுப்பி வைத்தேன். அதிலிருந்த ஒருசில சொற்களை அகற்றி அதனை அழகுபடுத்தி எழுதியனுப்பி இருந்தார்கள்.

ஒரு முறை இரண்டுவரி கொண்ட ஒரு பாடலை எழுதி அதை என் கடிதத்தாளில் (Letter Pad) அச்சிட்டு முதன் முறையாக அதில் பாவேந்தருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பாவேந்தரிடமிருந்து மறுமொழி வந்தது. என்ன?

''உன் அஞ்சல் நன்று; உடன் அத்துணை அச்சுப்படிகளையும் எடுத்துவந்து சேருக'' என்றிருந்தது.

எப்படி இருக்கும்! உடன் எல்லாக் கடிதத் தாளையும் கட்டிக்கொண்டு புதுவை போய்ச் சேர்ந்தேன். அப்போது அவர்கள் வீட்டில் இல்லை.பதிப்பகக்தில் இருப்பதாக அறிந்து அங்கு சென்றேன். ஒருவாறாக உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு எதிரில் போய் நின்றேன்.

''வாரும். எல்லாரும் நலந்தானே?'' என்றார் பாவேந்தர்.

''ஆம்! நலந்தான்!''எனறு கூறிக்கொண்டே, கொண்டு போன கடிதத் தாள் கட்டுகளை அவர்முன் வைத்தேன். அவருடைய பார்வை என்னை ஏதோ ஏசுவதாகப் பட்டது. மூக்கின் வழியாக வந்த சுருட்டுப் புகைச்சலோடு, ''அதோ அந்த மலையாளத்தான் கடைக்குப்போய் இரண்டு தேனீர் கொண்டுவரச் சொல்லிவாரும்'' என்று கூறினார். அவ்வளவுதான். தேநீர்க் கடைக்குப்போய் வருவதற்குள் அவர் எதிரில் நான் வைத்திருந்த அத்

துணைக் கடிதத் தாள்களையும் சுக்கு நூறாகக் கிழித்து முட்டாக வைத்திருந்தார்கள். அருகில் நான் வந்ததும் 'இந்தா' என்று தீப்பெட்டியை நீட்டினார்கள்.

'ஏன்?' என்றேன்.

'இவற்றைக் கொளுத்து' என்றார் பாவேந்தர்.

புரியாமல் திகைத்தேன்.

''என்ன புரியலையா? நீ பிழைபட எழுதிய பாட்டுக் குத்தான் இந்தத் தண்டனை. முதலில் இவற்றைக் கொளுத்திவிட்டு அதோ (மேசையைக்காட்டி) நீ எழுதிய அஞ்சல் தாளில் உள்ள அச்சுக் கவிதையைப் படி என்றார்கள்; படித்தேன்.

தாய்மொழி தமிழ்மொழி என்போம்—செப்பும்
தமிழை சிதையாது காப்போம்.

இது தான் தாளில் உள்ள அச்சுக்கவிதை.

''பாட்டைப்பார்! சந்திப் பிழையோடு பாட்டெழுதித் தமிழைச் சிதைத்திருக்கிறாய்! 'செப்பும் தமிழை(ச்) சிதையாது காப்போம் என்றல்லவா எழுதவேண்டும்! ஐகாரத்துக்குப்பின் ஒற்று மிகுமே. ஒற்றுப் போடாமல் தமிழின் உயிரைக் கெடுத்திருப்பது மட்டுமல்லாமல் இதைப் பலரும் அறிய இவ்வளவு கடிதத் தாள்களிலும் ஏன் அச்சிட்டாய்? ஆகவேதான் கொளுத்தச் சொன்னேன்'' என்று கூறி எழுந்து போய்விட்டார்.

நினைத்தாலே இனிக்கும் நாட்கள்

எஸ். முருகேசன்

○

இக் கட்டுரையாசிரியர் திரு எஸ். முருகேசன் தருமபுரியைச் சேர்ந்தவர்; சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு க. இராசாராம் அவர்களின் நெருங்கிய உறவினர்; இசையறிவும் நடிப்பாற்றலும் மிக்கவர்; பாவேந்தர் எழுதிய கவிகாளமேகத்திலும் நடித்த

வர். பாவேந்தரோடு பழகிய நாட்களில் இவர் கட்டளங்காளை; கொள்கை வெறியோடு கூவித்திரிந்த இசைக்குயில்! பாவேந்தரைப் பற்றிய தம் இளைய நினைவுகளைச் சுவைப்பட இக்கட்டுரையில்கூறுகிறார்.

○

●

பாவேந்தருக்கும் எனக்கும் முதல் சந்திப்பு 1938—ஆம் ஆண்டு ஏற்பட்டது. 'கவி காளமேகம்' என்ற திரைப்

படம் எடுப்பதற்குச் சேலம் மோகினி பிக்சர்ஸ் நிறுவனத் தார் முயற்சி செய்து கொண்டிருந்த நேரம். இளமையில் நான் இசையிலும், நாடகத்திலும் ஈடுபாடு மிக்கவனாக இருந்த காரணத்தாலும், படக் கம்பெனியின் பங்கு தாரர்கள் என் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர் களாக இருந்த காரணத்தாலும், எனக்கிருந்த எடுப் பான தோற்றத்தாலும் அப்படத்தில் அரசனாக நடிக் கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கவி காளமேகம் படப்பிடிப்பின் போது பாவேந்தரோடு ஏற்பட்ட நெருக்க மான பழக்கம் பின்னும் தொடர்ந்தது.

பாவேந்தரை நான் முதன் முதலில் சந்தித்த போது 'மாந்தோப்பில் மணம்' என்ற பாடலை இசையோடு பாடிக் காட்டினேன்; அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர் எழுதிய வேறு பாடல்களையும் இசையமைத்துப் பாடிக் காட்டும்படி அடிக்கடி கேட்பார்; நானும் பாடு வேன்.

'வாழ்க வாழ்கவே!' என்று திராவிட நாட்டை வாழ்த் திப் பாவேந்தர் எழுதியபாடல் இசைக்குயில் எம்.எல். வசந்தகுமாரியால் பாடப்பட்டுத் தமிழகத்தில் பெருத்த விளம்பரம் பெற்றதை யாவரும் அறிவர். இந்தப் பாடல் தோன்றுவதற்கு மூலகாரணம் நான்தான். நாடகத்தில் முதலில் 'கோரஸ்' பாடுவதற்கு நல்ல பாடலொன்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று நானும் என் நாடக நண்பர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்பாட லைப் பாவேந்தர் எழுதிக் கொடுத்தார்.

24—8—40 இல் திருவாரூரில் நீதிக்கட்சி மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் முதன் முத லாக இப்பாடல் அரங்கேற்றப்பட்டது. மாநாடு முடிந்து சேலம் திரும்பிக் கொண்டிருந்தேன். அறிஞர் அண்ணா வும், இளந்தாடி நெடுஞ்செழியனும் நான் பயணம் செய்த அதே பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந் தனர். மீண்டும் மீண்டும் இப்பாடலைப் பாடும்படி இரு

வரும் என்னை விரும்பிக் கேட்டனர். சேலம் வருவதற் குள் குறைந்தது பத்து முறையாவது அவர்களுக்கு இப் பாடலைப் பாடிக் காட்டியிருப்பேன்.

பாவேந்தர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடும் இயல் புடையவர். எப்போதும் தனியாக அமர்ந்துண்ணும் பழக்கம் இவருக்குக் கிடையாது; நண்பர்கள் குழாத் தோடு தான் சாப்பிடுவார். எது சாப்பிட்டாலும் ஒன்றே! மீனென்றால் மீன்; கறியென்றால் கறி. எதையும் நிறையச் சாப்பிடுவார். 'என்னப்பா! அள்ளிக் கிட்டு வா! வாரிக்கிட்டுவா!' என்று தான் உண்ணும் போது இவர் கட்டளையிடுவார். சேலத்தில் மாடர்ன் கேஃப் சிற்றுண்டியும், வில் வாத்திரிபவன் காஃபியும் இவருக்கு மிகவும் பிடிக்கும். இட்டிலி சாப்பிடும் போது எது இருந் தாலும் இல்லாவிட்டாலும் 'கரண்ட் சட்னி' (காரமான புளி மிளகாய்ச் சட்னிக்குப் பாவேந்தர் வைத்த பெயர்) கட்டாயம் இவருக்கு வேண்டும். மூர்மார்க்கெட் 'பானு ரெஸ்டரண்டில்' வான் கோழி பிரியாணி சாப்பிடுவார். ஆடு மனிதனுக்கு Substitute என்பார். ஆட்டின் எந்த உறுப்பை மனிதன் சாப்பிடுகிறானோ, அந்த உறுப்பு மனிதனுக்கு வலிமை பெறும் என்று கூறுவார்.

பாவேந்தர் சிறந்த சுவைஞர். ஓவியர்கள் ஸ்டுடியோ வில் படங்கள் எழுதுவதை எப்போதும் கண்கொட்டாமல் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருப்பார். முழங்கையைத் தலையணையில் ஊன்றிய வண்ணம் 'ஊம்...எழுதிக்க' என்பார்; நாங்கள் எழுதுவோம்.

பாவேந்தர் பெரிய பொதுவுடைமை வாதி. கையில் காசி ருந்தால் கேட்பவர்க்கெல்லாம் கொடுத்து விடுவார். ஒருமுறை சேலம் மார்டன் தியேட்டர்ஸ் உரிமையாளர் தமது படத்துக்கு பாட்டெழுதியதற்காக ரூ. 4000/- பாவேந்தருக்குக் கொடுத்தார். அப்பணத்தில் நூறு ரூபாயைத் தமது பணியாளனிடம் கொடுத்து 'இந்தா! இதை இன்னக்குச்செலவுக்கு வெச்சுக்க. மீதி கொண்டா

ராதே!' என்று கூறியதை நான் அருகில் இருந்து கேட்டேன். இது போல் எத்தனையோ நாட்கள்! ரிக்ஷாவில் ஏறி நாள் முழுதும் சுற்றிவிட்டு, ரிக்ஷா இழுப்பவனுக்குப் பத்தோ இருபதோ தாராளமாகக் கொடுப்பார்.

கவி காளமேகம் படப்பிடிப்பின் போது கையில் காசு தாராளமாக இருக்கும் நேரத்தில் எல்லாரையும் காரில் போட்டுக்கொண்டு எலியட் பீச்சுக்குப் போவார். கடற் கரையிலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்வார். காலியான மதுப்புட்டியில் கார்க்கை அடைத்துக் கடலுக்குள் வீசுவார். அலைமீது மிதக்கும் அப்புட்டியை நாங்கள் நீந்தி எடுத்துக்கொண்டு வரவேண்டும். பாவேந்த ரோடு பழகிய நாட்கள் நினைத்தாலே இனிக்கும் நாட்கள்.

கவி காளமேகத்தில் பாவேந்தர் எழுதிய சில திரைப் படப்பாடல்கள்:

[1]

வண்மை சேர்தமிழ் நாடெங்கள் நாடு
வாழ்த்துவோம் அன்போடு
(வண்மை)

திண்மை யாகிய தோள்வீரர்
திங்கள் முகங்கொள் பெண்கள் வாழும்நாடு
(வண்மை)

பூரிக்கும் தமிழ்க் கவிதை
வாழ்வினுக் கதேஜீவன்
பாருக்கே இன்பம் பாவிக்கும் பழநாடு
வாழ்வின் பயன்சொன்ன நாடு.

சந்தனம் கமழ்பொதிகை
சந்தப் பறவையின் கீதம்
சிந்தையில் பொங்கும் ஆனந்தம்
செந்நெல் வயல் சிறக்கின்ற நாடு.

வண்ணம் பாடியே நடக்கும்
வைகை காவிரி பெண்ணை
தண்ணருந் தென்றல் பூஞ்சோலை
சாகாத இன்பம் தழைக்கின்ற நாடு. (வண்மை)

□

[2]

காதலென்றே முழங்கே— முரசே
காதலென்றே முழங்கே (கா)

மேவும் ஆண்பெண் காதலி னாலே
விளைந்திடும் ப்ராணன் இலையெனில் மேலே
வினைதான் ஏது விளைவுகள் ஏது
விற்பனா சக்தியும் காதலா லன்றோ
யாவுமே அதனால் ஆவி (கா)

வாழ்க்கை உடம்பினில் காதலே ஜீவன்
மலரினில் நறுந்தேன் வீணையின் நாதம்
தேக்கிய அமுதில் சுவையின் சேர்க்கை
தென்றலின் குளிர்ச்சி காதலே யன்றோ
யாவுமே அதனால் ஆவி (கா)

□

[3]

பூலோக மெல்லாம் அவள்ரூபம்
புதிதாகிய சோபித தீபம் (பூ)

முகமா நிலவா காணேனே
முழங்காதோ மணி மொழிதானே மானே
நகைசிந்துகிறாய் எனை மாய்க்க
மதுரித வேலாம் மதனது கணைதான்
வதைபுரிந் திடுதே மனதுநைந் திடுதே (பூ)

தக தக தேஜோன் மயதேகன்
த்யாகன் கவிதா மோகன்
தீரன் தமிழ்யூகன்
தழுவிட அரிதாம்
அழகிய இருதோள்
மதிநிறைந் திடுதே மனதுநைந் திடுதே
சமயமும் வருமோ தழுவிக் கொளவே. (பூ)

மதமா காதலா
மதாபி மானமே பெரிதெனும்
விசாரம் மதிதனை மயக்குதே
காதலாம் அதிசய ஒளி
தேன் பாயும்நதி மேலானபதம்
யார்தான் தருவர் (மத)

எழில் மோகனா மேல் வைத்த
ஆசைதான் மேலானதோ
எல்லாம் தரும்பெரும்
வைணவ விலாசன் இணையடி பெரிதா
மோகனா எனதரும் பொருள்
ஸ்ரீ காந்தன் எனை ஆட்கொண்ட
பொருள்—யாதோ பெரிது (மத)

அவள்மேல் பழி

சேலம்
வேலுச்சாமி கவி

○

இக்கட்டுரையாசிரியர் திரு. வேலுச்சாமி கவி சேலத்தில் வாழும் பழம்புலவர். ஐம்பது ஆண்டுகள் திரைப்படத் துறையில் தொடர்பு உள்ளவர்; முதியவர். பாவேந்தர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களுக்கு எழுதிக் கொண்டிருந்த போது அவரிடம் நெருங்கிப்பழகி அவர் அன்புக்குப் பாத்திரமானவர். பாவேந்தரோடு பழ

கிய நாட்களை நினைவு கூர்ந்து இலக்கியச் சுவை பட இக்கட்டுரையை எழுதி யிருக்கிறார். பாவேந்தரின் சுவையான படத்துறை அனுபவங்களும், அவர் விருப்பு வெறுப்புக்களும் இதில் நிரல்படத் தொகுத் துத் தரப்பட்டிருக்கின்றன.

○

●

'அவள்மேல் பழி' என்ற பாடல் பாவேந்தர் எழுதி யுள்ள 'காதல் நினைவுகள்' என்னும் நூலில் இடம் பெற்

றுள்ளது. படித்தவுடன் உள்ளத்துக்கு உணர்ச்சியூட்டி நம்மைச் சுவை மயக்கத்தில் ஆழ்த்தும் கற்பனை வளம் பெற்ற பாடல் அது. எத்தனை முறைபடித்தாலும் சலிப் புணர்ச்சி தோன்றாது. அப்பாடல் பாவேந்தருக்கும் எனக்கும் இடையே விளங்கிய நட்புக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

எனக்கும் பாவேந்தருக்கும் கி.பி. 1944ஆம் ஆண்டு வாக்கில் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. எனக்குச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பிரபந்தக் கவி ஞர்களிடமும், அவர்கள் படைப்புக்களிடமும் பற்றும் ஈடு பாடும் அதிகம். உடுமலை முத்துசாமிக் கவிராயரின் பழக்கமும், அவர்எழுதியுள்ள இராமாயணக் கீர்த்தனை களில் நல்ல பயிற்சியும் எனக்குண்டு. யமகம், திரிபு, சிலேடை, சந்தம் ஆகிய சொல் விளையாட்டுக்களில் வியப்பும் விருப்பும் எனக்குண்டு. இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி, பாரதிதாசன் பாடல்களை நான் அவ் வளவாக மதித்ததில்லை. புரியும்படி எளிய சொற்க ளால் எழுதப்பட்ட இவர்கள் பாடலை வெள்ளைப்பாடல் கள் என்றுவெறுத்து ஒதுக்குவது என்வழக்கம். பாவேந் தரைச் சந்தித்தபோது எனக்கு முப்பது வயதிருக்கும்; சேலம் மாடர்ன்தியேட்டர்ஸில் கதை இலாகாவில் நல்ல சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

பாவேந்தரின் 'இன்ப இரவு' நாடகம் சேலம் சென்ட்ரல் டாக்கீசில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பாவேந் தர் ஒரு நாள் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவுக்கு வந்தார். 'என்னுடைய கவிதை நூல்களைப் படித்திருக் கிறாயா?' என்று என்னைக் கேட்டார். நான் அவர் கவிதை நூல்களைக் கண்ணால் கூடப்பார்த்ததில்லை. என்றாலும் சிலவற்றைப் படித்திருப்பதாகத் தலை யசைத்தேன். மாடர்ன் தியேட்டர்ஸ் அலுவலகத்தி லி ருந்து அப்போது வெளியாகிக் கொண்டிருந்த 'சண்ட மாருதம்' என்ற சினிமாப்பத்திரிகை என் பொறுப்பில்

இருந்தது. அப்பத்திரிகையில் வெளியிட ஒரு பாடல் தரும்படி அவரைக் கேட்டுவைத்தேன். அடுத்தநாளே 'அவள் மேல் பழி' என்ற பாடலை எழுதி என்னிடம் கொடுத்தார். அதைப்படித்ததும் பாவேந்தர் மீது அளவு கடந்த மதிப்பும், அவர் ஆற்றல் மீது அளவு கடந்த மரியாதையும் என் உள்ளத்தில் ஏற்பட்டன. அவர் பாடல்களை விரும்பி வாங்கிச் சண்டமாருதத்தில் தொடர்ந்து வெளியிட்டேன்.

1945ஆம் ஆண்டிலிருந்து சேலம் மாடர்ன் தியேட்டர் ஸுக்கும் பாவேந்தருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அபூர்வசிந்தாமணி, சுபத்ரா, சுலோசனா, பொன்முடி, வளையாபதி ஆகிய படங்களுக்குக் கதை வசனம் பாடல் எழுதினார். அவருடைய காதல் காப்பியமான எதிர்பாராத முத்தம், பொன்முடி என்ற பெயரில் திரைப்படமாவதற்குத் துணையாக இருந்தவன் நான்.

'ஸ்ரீ ஆண்டாள்' என்ற திரைப்படத்தை நான் எடுத்தேன். அப்போது சுத்தானந்த பாரதியார் பத்திரிகைகள் மூலமாக மிக்க விளம்பரம் பெற்றிருந்த காரணத்தால், அவரை அப்படத்திற்குப் பாட்டு எழுதக் கேட்டுக் கொள்வதற்காக நான் புதுச்சேரி சென்றேன். சுத்தானந்தபாரதியார் அப்போது அரவிந்தஆசிரமத்தில் தங்கியிருந்தார். அவருடைய கீர்த்தனைகள் சில அப்போது இசையுலகில் எல்லாராலும் பாடப்பட்டு மிக்க விளம்பரம் பெற்றிருந்தன. ஆண்டாள் படத்துக்குச் சில பாடல்கள் எழுதித் தரும்படி அவரை நான் கேட்டேன். 150 பாடல்கள் அடங்கிய ஒரு காகிதக்கட்டை என் முன்னால் எடுத்துப் போட்டு 'இவற்றிலிருந்து தேவையான வற்றைப் பொறுக்கிக் கொண்டு போ' என்று சொன்னார். மூன்றுபாட்டை எடுத்துக் கொண்டு அதற்குரிய தொகையை அவருக்குக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தேன்.

புதுச்சேரி வந்துவிட்டுப் பாவேந்தரைப் பார்க்காமல்

செல்லக் கூடாது என்று எண்ணி அவர் வீட்டுக்குச் சென்றேன். என்னிடம் மிக்க அன்போடு பழகினார். இதற்கு முன் என்னை அவர் 'தம்பி' என்று அழைத்ததில்லை. ஆனால் இப்போது 'தம்பி! தம்பி!' என்று நொடிக்கொரு தரம் அவர் அன்பொழுக அழைத்தார். புதுவையில் இரண்டுநாள் தங்கிச் செல்லுமாறு வற்புறுத்தினார். இதில் ஏதோ 'விஷயம்' இருக்கிறது என்று புரிந்து கொண்டு நானும் இரண்டுநாள் தங்கினேன். அவருடைய காதற் காப்பியமான எதிர்பாராத முத்தத்தை எடுத்து என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்; படித்துப் பார்த்தேன். 'திரைப்படத்துக்கு மிகவும் ஏற்ற கதை! டி. ஆர். சுந்தரத்தைக் கலந்து கொண்டு உங்களுக்குத் தெரிவிக்கிறேன்' என்றேன் நான்.

'என்ன நான்கு... ஐந்து ரூபாய் வாங்கித் தருவியா?' என்று கேட்டார்.

'முயற்சிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு எதிர்பாராத முத்தத்தோடு சேலம் திரும்பினேன். சேலம் வந்ததும் அன்றே டி. ஆர். எஸ்ஸைச் சந்தித்து எதிர்பாராத முத்தம் கதையை எடுத்துச் சொன்னேன். கதை அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. ரூ 10,001 கொடுப்பதாகச் சொன்னார். அப்படத்துக்குப் பாவேந்தரே வந்து வசனம் எழுதினார். அப்படம் ஒரு திரைக்காவியம்! சிறந்த வெற்றிப்படங்களில் ஒன்று! அவர் எழுதிய 'சுபத்ரா'வின் திரைக்கதை வசனம் புத்தகமாக வெளிவந்து டிமாண்டாக விற்றது. அந்நூலை நான்தான் 'எடிட்' செய்தேன்.

பாவேந்தர் மாடர்ன் தியேட்டர்ஸில் சுலோசனாவுக்கு வசனம் எழுதிய போது சில சுவையான நிகழ்ச்சிகள் நடை பெற்றன. சுலோசனா இந்திரஜித்தின் மனைவி. அப்போது நடிகர் சின்னப்பா புகழேனியின் உச்சியில் இருந்த நேரம். அவர் நடித்த கண்ணகி, மனோன்மணி ஜகதலப்ரதாபன் போன்ற வெற்றிப் படங்கள் தமிழக

மெங்கும் சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தன. இந்திரஜித் வேடத்தில் நடிக்கச் சின்னப்பாவும், சுலோசனா வேடத்தில் நடிக்க கே.எல்.வி. வசந்தாவும் 'புக்' செய்யப்பட்டிருந்தனர். சின்னப்பாவுக்குரிய தொகை ரூ 50,000. முன்பணமாக ரூ. 10,001 அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

சுலோசனா திரைப்படமாக எடுத்த நேரத்தில் திராவிட இயக்கம் வலுவாகத் தமிழ்மண்ணில் வேரூன்றிக் கொண்டிருந்தது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சியால் தமிழ் விரைந்த மறுமலர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தது. இராவணன், இரணியன், இந்திரஜித்போன்ற இதிகாசப் பாத்திரங்கள் தமிழ் வீரர்களாக மக்கள் முன் நிறுத்தப்பட்டனர். மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் டி.ஆர். சுந்தரம் இங்கிலாந்தில் படித்துப் பட்டம் பெற்றுத் திரும்பியவர்; ஆங்கில மாதைத் திருமணம் செய்து கொண்டு மேலை நாட்டுப் பாணியில் வாழ்ந்து கொண்டிருந்தவர். என்றாலும் அவருக்குத் தமிழ் இலக்கியங்களில் அலாதியான பற்றும் ஈடுபாடும் உண்டு. ஐம்பெருங்காப்பிய வரிசையைச் சேர்ந்த குண்டலகேசியையும், வளையாபதியையும் வெற்றித் திரைப்படங்களாக எடுத்து வெளியிட்ட பெருமை அவரையே சாரும். சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீய நாடகத்தையும் திரைப்படமாக்கினார். அன்று புரட்சிகரமாகவும், விறுவிறுப்போடும் எழுதிய கலைஞர் கருணாநிதியையும், கவிஞர் கண்ணதாசனையும் ஆதரித்து வளர்த்தவர் இவரே!

இந்திரஜித்தின் வீர வாழ்க்கையை நல்லதோர் திரைப்படமாக உருவாக்கவேண்டும் என்பதில் டி.ஆர்.எஸ். மிக்க ஆர்வம் காட்டினார். பாவேந்தரும் அப்படத்துக்கு உணர்ச்சிததும்ப வசனம் எழுதியிருந்தார். வரலாற்றுக் கதாநாயகனாகவும், புராணக் கதாநாயகனாகவும் பல படங்களில் நடித்துத்தம் திறமைக்கு முத்திரை குத்திக் கொண்டிருந்த சின்னப்பா இந்திரஜித்தாக நடித்தால்

மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று டி. ஆர். எஸ். கருதினார். ஆனால் அவர் நினைத்தது நடைபெற வில்லை.

சின்னப்பா மிகச்சிறந்த நடிகர். அவருக்கு 'ரிகர்ஸலே' தேவையில்லை. நடிக்க ஆரம்பித்தால் மளமளவென்று 'டேக்' எடுத்துவிடலாம். நடிக்க வரும்போது இளம் போதையில்தான் வருவார். போதை சற்று அதிகமாக இருந்து, அவர் நடிப்பில் யாராவது குறுக்கிட்டால் தகராறுதான். அவர் நடிக்கும் போது நான் எப்போதும் அருகில் இருக்க வேண்டும். அடிக்கடி பி.யூ சி. (பி யூ. சின்னப்பாவின் சுருக்கம்) பி.யூ.சி. என்று சொல்லித் தட்டிக்கொடுத்து வேலை வாங்கிவிடுவேன்.

சுலோசனா படத்துக்குப் பாடல் 'ரெகார்டிங்' ஆகிக் கொண்டிருந்தது. சர்வ ஜீவ தயாபரனே' என்ற பிலகரி ராகப் பாடலைச் சின்னப்பா பாடிக்கொண்டிருந்தபோது தகராறு ஏற்பட்டது. டி.ஆர்.எஸ். கடுமையாகக் கண் டித்தார். கோபம் வந்துவிட்டால் பெரிய நடிகர்களை யும் 'அடே' என்று தான் திட்டுவார். சின்னப்பா கோபித்துக்கொண்டு போய்விட்டார். பிறகு அவர் மாடர்ன் தியேட்டர்ஸ்க்குள் நுழையவில்லை.

சின்னப்பா வீரவசனம் பேசி நடிப்பதில் மிகவும் வல்ல தர். அவரை உள்ளத்தில் நினைத்துக்கொண்டுதான் இந்திரஜித்துக்கு பாவேந்தர் வசனம் எழுதியிருந்தார். சின்னப்பா போனபிறகு அப்பாத்திரத்திற்கு யாரைப் போடுவது என்பது பெரும் பிரச்சனையாகிவிட்டது. கடைசியில் டி.ஆர்.எஸ். தாமே இந்திரஜித் பாத்தி ரத்தை ஏற்று நடிக்க முடிவு செய்தார். பாவேந்தருக்கு இந்த முடிவு பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. அவர் நேராக டி.ஆர்.எஸ். அலுவலகத்திற்குச் சென்று 'நீ தான் ஹீரோ பண்ணப் போறயாமல்ல?' என்று கேட் டார். அவரும் 'ஆ...மா' என்றார். டி.ஆர்.எஸ்ஸை 'நீ' என்று ஒருமையில் பேசும் தகுதி பாவேந்தர் ஒரு

வருக்குத்தான் இருந்தது. வேறு யாரும் அவரை 'நீ' என்று ஒருமையில் சொல்லி நான் கேட்டதில்லை.

டி.ஆர்.எஸ்ஸை சந்தித்த பிறகு பாவேந்தர் வெளியில் வந்தார். நானும் அவரும் மெதுவாக ஸ்டுடியோ வாயிலை நோக்கிப் பேசிக்கொண்டே நடந்தோம். டி.ஆர்.எஸ். தமிழை ஆங்கில பாணியில் பேசிப் பழக்கப் பட்டவர். அவர் பாவேந்தரின் சந்தத் தமிழைப் பேசி னால் எப்படியிருக்கும்?

பாவேந்தர் சொன்னார்:

''இந்திரஜித் மண்டோதரியின் வயிற்றிலிருந்து பிறந்து வெளியே வந்ததும் அழுதான். அவன் அழுத குரல் இடி இடிப்பது போல இருந்தது. அக்குரலைக் கேட்டுத் தேவர்களெல்லாம் அஞ்சி நடுங்கி ஓடி ஒளிந்தனர். அவ் வளவு Harshtone! இவ (டி.ஆர்.எஸ்) எப்படி என் வசனத்தைப் பேசித் தொலைக்கப் போறானோ?'' என்று கூறி வருத்தப்பட்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. இந்திரஜித் இராவணனிடம் பேசும் போது வெள்ளைக்காரப் பாணியில் 'தா... ந்தையே!' என்று தான் திரைப்படத்தில் அழைத்தான். அப்படத்தில் தந்திரக் காட்சிகள் மிக அருமையாக எடுக்கப்பட்டிருந் தன, என்றாலும் படம் தோல்வியடைந்தது.

பாவேந்தர் மாடர்ன் தியேட்டர்ஸுக்குக் கடைசியாக எழுதியபடம் வளையாபதி. பாவேந்தரின் நீண்ட வசனங் களைக் கதாநாயகனாக நடித்த முத்துகிருஷ்ணனால் (பின்னர் வளையாபதி முத்துகிருஷ்ணன் என்று அழைக் கப்பட்டார்) பேச முடியவில்லை. அப்படத்தின் இயக்கு நரான ரகுநாத் அவ்வசனத்தைச் சில இடங்களில் இவ ரைக் கலக்காமலேவெட்டி (cut short) விட்டார். இச் செய்தி பாவேந்தர் காதுக்கு எட்டியதும் அளவு கடந்த கோபம் கொண்டார். ''என் வசனத்தை வெட்ட ணும்னா என் காண்ட்ராக்டையே கேன்ஸல் செய்யுங்க''

என்று சத்தம் போட்டார். அதற்குப் பிறகு பாவேந்தருக்கும் டி.ஆர்.எஸ்ஸுக்கும் ஒத்துவரவில்லை. தமது விருப்பத்துக்கு மாறாக யார் நடந்து கொண்டாலும் டி.ஆர்.எஸ். ஸ்டூடியோவுக்குள் வைத்துக்கொள்ள மாட்டார். தமது விருப்பத்துக்கு மாறாக எது நடந்தாலும் பாவேந்தர் அங்கு இருக்க மாட்டார். எனவே பாவேந்தர் பாண்டி திரும்பினார். அதன் பிறகு மாடர்ன் தியேட்டர்ஸுக்குள் அவர் காலடி எடுத்து வைக்கவில்லை.

ஏழெட்டு ஆண்டுகள் கழித்துச் சென்னையிலிருந்து எனக்குப் பாவேந்தர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவருடைய பாண்டியன் பரிசின் காப்பியத் தலைவனான வேலன் பாத்திரத்துக்கு நான் ஏற்கனவே 'ட்ரீட் மெண்ட்' எழுதியிருந்தேன். சேலத்தில் இருந்த போதே அதை அவரிடம் காட்டினேன். ''இதைப்படமாக சுந்தரம் எடுத்தால் எடுக்கட்டும்; இல்லாவிட்டால் கிடக்கட்டும். வை பார்க்கலாம்'' என்று அப்போது கூறிவிட்டார்.

இப்போது அந்த 'ட்ரீட்மெண்டை' எடுத்துக் கொண்டு எழும்பூர் விக்டோரியா ஹோட்டலுக்கு உடனே வரும்படி கடிதம் எழுதியிருந்தார்; நானும் அவ்வாறே சென்றேன். என்னைச் சந்தித்ததும் படத்துக்கு யார் யாரைப் போடலாம் என்று கேட்டார். காப்பியத் தலைவன் வேலன் பாத்திரத்திற்கு சிவாஜியைப் போடலாம் என்றேன்; அவர் சற்றுத் தயங்கினார். படத்துக்கு 'ஸ்டார் வேல்யூ' தேவை என்று நான்வற்புறுத்தினேன். உடனே அப்போது முதலமைச்சராக இருந்த காமராசரைத் தொலை பேசியில் கூப்பிட்டுத் தம் படத்தில் நடிக்கும்படி சிவாஜிக்குச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். காமராசரும் உடனே சிவாஜிக்குத் தொலைபேசியில் அக்கருத்தைத் தெரிவித்தார். சிவாஜியும் ஒப்புக் கொண்டார்.

அடுத்த நாள் காலை பாவேந்தர், முருகதாசா, நான் ஆகிய மூவரும் சிவாஜியின் வீட்டுக்குப் போனோம்.

அங்கு எங்களுக்கு நல்லவரவேற்பு கிடைத்தது. பாண்டியன் பரிசுக் கதையைப் பற்றிப் பாவேந்தர் சொன்னார். 'நான் பல முறை படித்திருக்கிறேன்; நானே வேலன் பாத்திரத்தில் நடிக்கிறேன். நாளைக்குப் பேசுவோம்' என்று கூறிச் சிவாஜி எழுந்தார். நாங்களும் விடுதி அறைக்குத் திரும்பினோம். 'சிவாஜி, நாளைக்குன்னு ஏ சொன்னா...?' என்று கேட்டார் பாவேந்தர். நாங்கள் 'தெரியவில்லை' என்றோம்.

அடுத்த நாள் பாவேந்தர் தனியாகவே சிவாஜியின் வீட்டுக்குச் சென்றார். சிவாஜி அவரைப் பார்த்து, ''வசனம் பாட்டு எல்லாம் நீங்களே எழுதுங்கள். மற்ற படி டைரக்ஷன், இசையமைப்பு, ஒளிப்பதிவு ஆகியவற்றுக் கெல்லாம் நான் சொல்லுபவர்களைத்தான் போட வேண்டும்" என்று கூறினாராம். பாவேந்தர் 'ஏன்?' என்று கேட்டிருக்கிறார்.

'' எல்லாருமே என்னிடத்தில் இருக்கிறார்கள். வேறு டைரக்டர்களைப் போட்டால் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ,அதன்படி என்னை நடிக்கச் சொல்லுவார்கள். ஆனால் நான் எப்படி நடிக்கிறேனோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் டைரக்டர் தான் எனக்கு வேண்டும். ஆகையால் பீம்சிங்கைப் போடுங்கள்!'' என்று சிவாஜி சொன்னாராம். 'சரி பார்க்கலாம்!' என்று சொல்லி விட்டுப் பாவேந்தர் எழுந்து வந்து விட்டார்.

அன்றைக்கு அவர் திரும்பியபோது அவர் நல்ல மன நிலையில் இல்லை. வழக்கத்துக்குச் சற்று அதிகமாகவே மதுவருந்தினார். 'அவன் என்ன பெரிய நடிக...! அவன் நடிக்காட்டி என்ன?' என்று வருத்தத்தோடும் கோபத்தோடும் பேசினார். நானும் முருகதாசாவும் அவரைச் சமாதானப்படுத்தி பீம்சிங்கையே டைரக்டராகப் போடும்படி சொன்னோம். அவரும் ஒப்புக் கொண்டார்.

பீம்சிங் அப்போது சுறுசுறுப்பான டைரக்டர்களுள் ஒரு

வர். அப்போது 'விடிவெள்ளி' என்ற படத்தை இயக்கும் வேலையில் மும்முரமாக மூழ்கியிருந்தார். அப்போது அவரைத் தேடிப்பிடிப்பதே மிகவும் சிரமமாக இருந்தது. ஒருநாள் பாவேந்தர் தொலைபேசியில் தொடர்புகொண்டு பீம்சிங்கை வரும்படி சொன்னார்; அவரும் வந்தார். பாண்டியன் பரிசைக் கொடுத்து அதற்கு ட்ரீட்மெண்ட் எழுதிக் கொண்டு வரும்படி சொன்னார். பேச்சு வாக்கில் "ஆமா, நீ எத்தனாவது படிச்சிருக்கே?" என்று பீம்சிங்கைக் கேட்டார். 'நான் தமிழே படிக்கல. பூனாவிலே படிச்சேன்' என்று பீம்சிங் சொன்னார். கொஞ்சநாளில் 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற பெயரில் முதல்மைச்சர் காமராசர் பாவேந்தரின் படக் கம்பெனியைத் துவக்கி வைத்தார். பாண்டியன் பரிசுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு இவ்வளவுதான். பிறகு சென்னை செல்லும்போது பாவேந்தரைச் சந்தித்துப் பேசிவிட்டு வருவது வழக்கம்.

பாவேந்தரோடு பழகியவர்களுக்கு அவருடைய உணவுப் பழக்கங்கள் நன்றாக நினைவிருக்கும். அவர் சேலத்தில் தங்கியிருந்தபோது அடிக்கடி மீன் கேட்பார். செவ்வாய்ப் பேட்டைச் சந்தையிலும், பனைமரத்துப்பட்டி ஏரியிலிருந்தும் வரால் மீன் வாங்கிவந்து கொடுப்பேன். வரால் என்றால் அவருக்கு உயிர்; அதன் சுவைபற்றி விரிவாகப் பேசுவார். மீன் குழம்பை மூன்று நாள் சுண்டவைத்துச் சாப்பிடுவார். சேலம் நண்பர் ஒருவர் கரடி வற்றலும், புதுக்கோட்டை நண்பர் ஒருவர் புலி வற்றலும் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவற்றைச் சமையல்காரனிடம் எண்ணிக் கொடுத்து வறுக்கச் சொல்லுவார். கருவாடும் அவருக்குப் பிடிக்கும். பரிமாறப்பட்ட வாழை இலையின் பக்கவாட்டில் அமர்ந்து கொண்டு எங்களிடம் பேசியவண்ணம் சாப்பிடுவார். இப்படிச் சாப்பிட்டு வேறு யாரையும் நான் பார்த்ததில்லை.

சென்னை போகிஸ் ரோட்டில் இருந்த டைரக்டர் கோட்

னிஸ் வீட்டின் ஒரு பகுதியில் பாவேந்தரின் அலுவலகம் இருந்தது. ஒருநாள் பாவேந்தரும் நானும் இரண்டாவது படம் பார்க்கச் சென்றோம். முதல் ஆட்டம் இன்னும் அந்தக் கொட்டகையில் விடவில்லை. பாவேந்தர் வெளியில் ஒட்டியிருந்த சினிமா போஸ்டர்களையெல்லாம் மெதுவாகப் பார்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். அங்கே நின்று கொண்டிருந்த வாயில் காப்பாளன் 'யாரது? வெளியே போய்யா!' என்று அவரை விரட்டினான். 'யாரைப் பார்த்து வெளியே போகச் சொல்ற' என்று சொல்லி அவனை அடித்து விட்டார். உடனே உள்ளே இருந்த கொட்டகை முதலாளி, மேனேஜர் எல்லாம் ஓடி வந்து இவரைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஒருநாள் ஒரு 35 வயதுப் பெண்ணொருத்தி இவர் அலுவலகத்துக்கு வந்தாள். அவள் ஆந்திராக்காரி. ஏதோ கோவில் கட்டுவதற்கு நன்கொடை கேட்டாள். 'இருக்கற கோயிலுக்குப் போறதுக்கே ஆளைக்காணம். நீ வேற கோயில் கட்டறயா? அது கிடக்கட்டும். உனக்குச்சமைக்கத் தெரியுமா?' என்று பாவேந்தர் கேட்டார்.

''தெரியும்?'' என்றாள் அவள்.

''சரி ஒருவேளை சமை பார்ப்போம்! ஆந்திராக்காரி... கொஞ்சம் காரம் அதிகமா இருக்கும். பரவாயில்லை!'' என்று சொன்னார். பிறகு அவளைச் சமையல் காரி ஆக்கிவிட்டார்.

பாவேந்தர் முன்கோபக்காரர் என்பது நாடறிந்த செய்தி. என்றாலும் நண்பர்களிடம் பழகும் போது மிகவும் எளிமையானவர். அன்போடு உபசரிப்பார். சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். தமக்குத் தெரியாத செய்தியை வேறு யாராவது சொன்னால் வியப்போடு கேட்பார். அதை மற்றவர்களிடமும் கூறிப் பாராட்டுவார். சில புலவர்களிடம் காணும் குற்றங்களைச் சுட்டிக் காட்டி

னால் உடனே கோபப்படுவார்கள்; அக்குற்றத்தை ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பாவேந்தர் அதற்கு நேர் மாறானவர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் செட்டில் உட்கார்ந்திருக்கும் போது அவருடைய திரைக்கதை வசனத்தைப் பற்றி அவரையும் வைத்துக் கொண்டு நாங்கள் விமர்சனம் செய்வதுண்டு. பொதுவாகப் பாராட்டித்தான் பேசுவோம். இரண்டோர் இடங்களில் குறையேதுமிருந்தால் அதையும் குறிப்பிடுவோம். சரி என்று பட்டால் உடனே அதைத்திருத்திக் கொள்வார்.

சுலாசனா படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. தேவேந்திரன், வாயு, வருணன் முதலிய தேவர்களையெல்லாம் இந்திரஜித் பிடித்து வந்து இலங்கையில் சிறை வைத்தான். பிரம்மதேவன் இலங்கை வந்து இராவணனை நோக்கி, 'இராவனேஸ்வரா! தோல்வி அடைந்தவரின் வாழ்வைக் குலைப்பது மேல்வலி படைத்த வீரர்க் கழகல்லவே! அடைக்கலம் புகுந்தோரை ஆதரிப்பதல்லவா அரச தர்மம்? தேவேந்திரன் இல்லாவிட்டால் தேவலோகமே அழிந்து விடும். என் பொருட்டாவது அமரேசனை விடுவித்து அளகாபுரியை அழியாமல் காப்பாற்ற வேண்டும்! என்று கேட்டுக்கொண்டார். பிரம்மாவாக சேலம் தேவராஜநாயுடு என்பவர் நடித்துக்கொண்டிருந்தார். அவர் இலக்கியங்களில் ஓரளவுஈடுபாடுகொண்டவர். தேவேந்திரன் தலைநகர் அமராபதி. குபேரன் தலைநகர் அளகாபுரி. இந்த வேறுபாட்டை அறிந்த அவர் 'அளகாபுரி' என்று இருப்பது தவறு என்று 'செட்டில்' கூறிக்கொண்டிருந்தார். சிறிய சலசலப்பு அங்கு ஏற்பட்டது.

''என்னய்யா அங்கே தகராறு?'' என்று டி.ஆர்.எஸ் கோபத்தோடு வந்தார். பிரம்மாவை அடிக்கக் கை யோங்கினார். அப்போது நாயுடு அவரைப் பார்த்து, "நான் நடிகனாயிருந்தால் படித்திருக்கக் கூடாதா? நான்

சொன்னதில் என்ன தவறு? வேண்டுமானால் பாவேந்தரையே கேளுங்கள்!'' என்று கூறினார்.

அடுத்த கட்டிடத்தில் எழுதிக்கொண்டிருந்த பாவேந்தர் செட்டுக்கு அழைக்கப்பட்டார். நாயுடுவின் குற்றச்சாட்டைப்பற்றி அவரிடம் கூறிய போது அவர் சிறிதும் கோபப்படவில்லை. ''ஆமய்யா! ஆமய்யா!'' என்று அன்போடு கூறியதோடு நாயுடுவையும் பாராட்டினார். பிறகு அளகாபுரி அமராபதி என்று திருத்தப்பட்டது.

இதேபோலச் சுபத்ரா படப்பிடிப்பிலும்ஒருநிகழ்ச்சி நடைபெற்றது. சுபத்ராவின் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் துவாரகையில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அவற்றை மேற்பார்வை செய்து கொண்டிருந்த பலராமன் அருகிலிருந்த அமைச்சரை நோக்கி ''என்ன? திருமண ஏற்பாடுகள் யாவும் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா?'' என்று கேட்டான். அதற்கு அந்த அமைச்சன் ''அரசே? பாட்டில் சிறந்த பாடகிகளையும், ஆட்டத்தில் சிறந்த அணங்குகளையும் மிகநீட்டாய் ஏற்பாடு செய்திருக்கிறேன். கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள்!'' என்று பதில் சொன்னான். Neat என்பது ஆங்கிலச் சொல்.

பக்கத்தில் இருந்த நடிகர்ஒருவர் பாவேந்தரைப்பார்த்து 'ஐயா! இராவணன் காலத்தில் 'நீட்' என்ற சொல் இருந்ததா?' என்று கேட்டார். அதைக் கேட்டுப் பாவேந்தர் கோபித்துக் கொள்ளவில்லை; சிரித்தார்.

நோபிள் பரிசு கிடைத்திருக்கும்

மதுரை
தனுஷ்கோடி ராஜு

○

பாவேந்தர் படை வரிசையில் எத்தனையோ இளஞ் சிங்கங்களுள் தனுஷ்கோடி ராஜுவும் ஒருவர். இன்றைய பரபரப்பான அரசியல் சந்தடியில் இலக்கிய ஆர்வாரத்தில் இவர் பெயர் தெரியாமல் இருக்கலாம். பாவேந்தரது புகழ் மாளிகையின் கடைக்கால் கற்களில்

இவரும் ஒருவர்; சுறுசுறுப்பான இளமைப் பருவத்தின் சிலஆண்டுகளைப் பாவேந்தரின் திருத்தொண்டுக்கு முழுமையாக ஒப்படைத்தவர். இவர் மனைவி பூபதி மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மேலாளர். பாவேந்தர் கனவில் வாழும் குடும்பம் இவர்கள் குடும்பம்!

○

●

நான் தேசியவாதி; இளமையிலிருந்தே எனக்கு முதலாளித்துவம் பிடிக்காது. கோவை பீளமேட்டில் மாண

வனாக இருந்தபோது சமதரும வாதிகளான என்.ஜி. ராமசாமி, ரமணி ஆகியோரின் தொடர்பு ஏற்பட்டது. தேசிய வாலிபர் சங்கம் (National Youth league) என் பதைத் துவக்கி இளைஞர் அணியைத் திரட்டினேன். பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்திலும் பங்குபெற்றுப் பணியாற்றினேன். பின்னர் இச்சங்கங்கள் திரு வி.வி.கிரி தலைமையில் இயங்கிய ஏ.ஐ.டி.யூ.சி. யோடு இணைந் தன.

1942-இல் நடைபெற்ற ஆகஸ்டுப் போராட்டத் தில் பங்கு கொண்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப் பட்டேன். பள்ளி கொண்டான் சாம்பசிவம் ஆசாரி, ஈரோடு கோவிந்தசாமி ஆகிய இருவரும் என்னோடு ஒன்றாகச் சிறையில் இருந்தவர்கள். ஈரோடு கோவிந்த சாமி பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களை இசையோடு பாடுவார். சாம்பசிவம் அப்பாடலுக்கு விளக்கம் கூறு வார். இதனால் பாவேந்தர் பாடல்களில் எனக்கு ஈடு பாடு ஏற்பட்டது. சிறையிலிருந்து வெளிவந்ததும் முதல் வேலையாகப் 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியொன்றை வாங்கிக்கொண்டு நேராகப் புதுச் சேரி புறப்பட்டேன்.

புதுவையில் கால்வைத்ததும் 'புரட்சிக் கவிஞர் வீடு' எது வென்று கேட்டேன். யாருக்கும் தெரியவில்லை. நீண்ட நேரம் சுற்றியலைந்த பிறகு எதிரில் வந்த ஒருவரை அணுகி விளக்கமாகக் கூறிக் கேட்ட போது 'ஓ! வாத்தி யார் வீடா?' என்று சொல்லிப் பெருமாள் கோவில் தெரு வைக் காட்டினார். தாடி, மீசை, கதர்ச் சட்டை, கதர்ப் பை ஆகிய சிறைக் கோலத்தோடு பாவேந்தர் எதிரில் போய்நின்றேன். அப்போது ஏ.கே.செட்டியார், முல்லை முத்தையா ஆகியோர் பாவேந்தருடன் பேசிக் கொண் டிருந்தனர். நான் நின்று கொண்டிருந்தேன்.

தமது பேச்சைச் சாவகாசமாக முடித்துவிட்டு என் பக்கம் திரும்பி 'யார் நீ? என்ன வேணும்?' என்று கேட்டார்.

நான் நேராகச் சிறையிலிருந்து வருவதாகச் சொன்ன தும் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. என்னைப்பற்றி எல்லாச் செய்திகளையும் பொறுமையாகக் கேட்டார். ஒரு வாரம் அவரோடு புதுச்சேரியிலேயே தங்கியிருந்தேன். இடை யிடையே சுத்தானந்த பாரதியார், பொதுவுடைமைக் கட்சிப் பிரமுகர் சுப்பையா ஆகியோரையும் பார்த்து விட்டு வருவேன். புதுவையிலிருந்து புறப்படும்போது பாவேந்தருக்கும் எனக்கும் நெருக்கமான பழக்கம் ஏற் பட்டிருந்தது.

அலிப்பூர் சிறையில் பொதுவுடைமை வாதிகளின் கூட்ட மொன்று இருந்தது. பாண்டி சுப்பையா, நாகப்பட்டினம் முருகேசன், கோவை ரமணி, கேரளா இம்பிச்சி பாபா ஆகியோர் அக்கூட்டத்தில் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் சிறைக்குள்ளேயே அரசியல் வகுப்புகள் நடத்துவது வழக்கம். நான் சிறைக்குள் இருக்கும் போதே அவர்களின் தொடர்பால் பொதுவுடைமைக் கட்சிஉறுப்பினன் ஆனேன். அப்போது பொதுவுடைமைக் கட்சியும் சமதருமக் கட்சியும் காங்கிரசுக்குள்ளேயே அதன் அங்கங்களாக இயங்கிக்கொண்டிருந்தன.

நான் புதுவையிலிருந்து ராஜபாளையம் திரும்பினேன். ராஜபாளையத்தில் காங்கிரஸ் கூட்டம் நடந்தால், என் நண்பர் வசந்தன் 'நீங்களே சொல்லுங்கள்' (சித்திரச் சோலைகளே என்று தொடங்கும் பாடல்) 'உலகப்பன் பாட்டு' ஆகிய பாவேந்தர் பாடல்கள் இரண்டையும் முதலில் பாடுவார். அதன் பிறகு கூட்டம் துவங்கும்.

பாவேந்தர் ஒரு முறை செட்டிநாடு வந்தபோது கானாடுகாத்தான் வை. சு. சண்முகஞ் செட்டியார் வீட்டிற்கு வரும்படி எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். வை. சு. சண்முகம் செட்டியார் கானாடு காத்தானின் குறிப்பிடத்தக்க பெருஞ் செல்வர்களில் ஒருவர். நான் அவர் வீட்டிற்குச் சென்று பாவேந்தரைப் பார்த்தேன். அதன்பிறகு பாவேந்தர் தெற்கு மாவட்டங்களுக்கு எப்

போது வந்தாலும் எனக்குக் கடிதம் எழுதுவார். நான் சென்று அவரோடு இருப்பது வழக்கம். என்னைப் பார்க்காமல் செல்லமாட்டார். 'பாவேந்தர் பக்தி' என்னை ஆட்கொண்டது.

ராஜபாளையத்தில் பாவேந்தர்மீது பற்றுக் கொண்ட ஓர் இளைஞர் அணியைத் திரட்டினேன். பாவேந்தருக்கு ஒரு விழா எடுத்து அவருக்குப் பண முடிப்பு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டேன். விழாவுக்கு ஒரு நாள் குறிப்பிட்டு அறிஞர் அண்ணாவையும், எழுத்தாளர் வ. ரா. வையும் அழைக்க முடிவு செய்தேன். அண்ணாவைச் சந்திக்கச் சென்னை புறப்பட்டேன். முல்லை முத்தையா அண்ணாவுக்குக் கடிதம் கொடுத்தார். கடிதத்தை எடுத்துக்கொண்டு அண்ணாவை பண்ருட்டியில் சந்தித்தேன். அண்ணா ஒத்துக்கொண்டார். வ. ரா. வைச் சந்தித்துக் கேட்டதும் அவரும் ஒத்துக்கொண்டார்.

விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கினேன். விழா இராஜபாளையம் வடிவேல் ரைஸ்மில்லில் நடைபெற்றது. விழாவில் அறிஞர் அண்ணா, கவிஞர் வாணிதாசன், முருகையன், பாவலர் பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஸ்த்துமாத் தொல்லையால் வ. ரா. வரவில்லை. பாவேந்தருக்குப் பொன்னாடை போர்த்தி ரூ. 2000/- பணமுடிப்பும் வழங்கப்பட்டது. விழா முடிவுற்றதும் நான் ராஜபாளையத்திலிருந்து மதுரைக்குக் குடிபெயர்ந்தேன்.

மதுரையிலும் பாவேந்தர் பணியைத் தொடர்ந்து செய்ய விரும்பிப் 'பாரதிதாசன் மன்றம்' என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினேன். அம்மன்றத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பு தொடங்கப்பட்டது. திருக்குறள் வகுப்பு யூனியன் கிறிஸ்டியன் ஹைஸ்கூலில் நடைபெற்றது. திருக்குறள் வகுப்பு நடைபெறத் தமிழாசிரியர் இராமையாப்பிள்ளை துணைபுரிந்தார். திருக்குறள்

வகுப்புக்கு ஒருவாரம் நாவலர் சோமசுந்தர பாரதி தலைமை தாங்கினார். மூன்று நாள் பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் தலைமை தாங்கினார். பத்து நாள் பாவேந்தர் தொடர்ந்து பேசினார். பாவேந்தர் பேச் சைக்கேட்க மக்கள் திரண்டு வந்தனர்; பெருங்கூட்டம்.

பாவேந்தர் திருக்குறளுக்கு அப்போது புத்துரை எழுதிக் கொண்டிருந்த நேரம். தலைமை தாங்கிய நாவலர் சோமசுந்தரபாரதியாருக்கும், பாவேந்தருக்கும் 'தெய் வந்தொழாஅள்' என்ற திருக்குறள் உரையில் கருத்து வேறுபாடு தோன்றியது. இருவருமே விட்டுக் கொடுக் காத கொள்கை வாதிகள். நாவலர் அக்கருத்து வேறு பாட்டுக்குப் பிறகு திருக்குறள் வகுப்புக்கு வரவில்லை. தமிழகஅளவில் பாவேந்தருடைய அன்பர்களைத்திரட்டி மதுரையில் அவருக்கு மணிவிழா எடுக்கப் பாரதிதாசன் மன்றத்தில் முடிவு செய்தோம். 'டவுன்ஹாலில்' மணி விழாவுக்கு அமைப்புக்குழு கூடியது. கீழ்க்கண்டவர்கள் மணிவிழாப் பொறுப்பாளர்களாக இருக்க அவ்வமைப்புக் குழு முடிவு செய்தது.

தலைவர்: நாவலர் சோமசுந்தர பாரதியார்.
துணைத்தலைவர்கள்: ம.பொ.சி, ஜீவானந்தம், நாரண. துரைக்கண்ணன், கல்கி
பொதுச் செயலாளர்: தனுஷ்கோடி ராஜு
துணைச்செயலாளர்கள்: நாவலர் நெடுஞ்செழியன், பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம்.
பொருளாளர்: அறிஞர் அண்ணா.

பிறகு திரைப்பட நடிகர் யதார்த்தம் பொன்னுசாமியின் தலையீட்டால் மணிவிழாக் குழு திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் தலைமையில் வேறொரு மணிவிழாக்குழு அமைக்கப்பட்டது. கவிஞர் திருலோக சீதாராம், அ.வெ.ர. கிருஷ்ணசாமி செட்டியார், ராம. சுப்பையா, காதல் அரு. ராமநாதன் ஆகியோர் அக்

குழுவில் இடம் பெற்றனர். நானும் திருச்சி சென்று மணிவிழாப் பணியில் ஈடுபட்டேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடுவின் மகன் ஸ்ரீராமுலுக்குப் பாவேந்தரிடத்தில் நல்ல ஈடுபாடு உண்டு. அவர் நன்கொடையாக ரூ 500/- முதலில் கொடுத்தார். மலேயாத் தமிழ் முரசு ஆசிரியர் சாரங்கபாணி ரூ 200/- நன்கொடை வழங்கினார். ஆனால் அவ்விழா முயற்சி குழப்பத்தில் முடிந்து அரைகுறையாகத் திருவானைக் காவலில் ஒரு சத்திரத்தில் நடைபெற்றது.

திருவானைக்காவலில் மணிவிழா நடந்த போது திரு. குமாரசாமிராஜா தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். மணிவிழா அழைப்பு அவருக்கும் அனுப்பப்பட்டது; வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். ஒருமுறை குமாரசாமி ராஜா அவர்களை நான் சந்தித்த போது பாவேந்தரைப் பற்றிப் பேச்செழுந்தது. பாவேந்தரைப் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

''நான் அவர் கவிதைகளைப் படித்திருக்கிறேன். குறிப்பாக அவர் எழுதியுள்ள 'அழகின் சிரிப்பு' என் உள்ளத்தைப்பெரிதும் கவர்ந்தது. அவருக்கு ஆங்கிலம் தெரியாத குறை; தெரிந்திருந்தால் நோபீள் பரிசு கிடைத்திருக்கும். பாரதி சிறந்த தேசிய கவி என்பதில் ஐயமில்லை. ஆனால் இளங்கோ கம்பருக்குப் பிறகு பாரதிதாசன்தான். சென்னை வந்தால் ஒருமுறை அழைத்து வா!'' — என்றார்.

திரு.குமாரசாமிராஜா கூறியதை அடுத்தமுறை சந்தித்த போது பாவேந்தரிடம் கூறினேன். சென்னையில் இருக்கும் போது பாவேந்தரும் நானும் குமாரசாமிராஜாவை ஒருநாள் சென்று பார்த்தோம். அப்போது ஜெயின் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். பாவேந்தரைக் கண்டதும் கட்டித்தழுவிக் கொண்டார். கல்லூரி நிகழ்ச்சியைச் சற்று நேரம் ஒத்திவைக்

கும்படி தொலை பேசியில் கூறிவிட்டுச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

''உங்கள் கருத்துக்கள் சிலவற்றில் எனக்கு மாறுபாடு உண்டு. ஆனால் உங்கள் அழகின் சிரிப்பிலும், குடும்ப விளக்கிலும், பாண்டியன் பரிசிலும் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன்'' என்று குறிப்பிட்டார்.

நான் கொஞ்ச காலம் கல்கி, தினத்தந்தி பத்திரிகைகளின் விற்பனை ஏஜென்டாக இருந்தேன். எனவே கல்கி கிருஷ்ணமூர்த்தியிடம் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. ஒரு நாள் கல்கி என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது, பாரதி படைப்புக்களில் பாஞ்சாலி சபதந்தான் வேகம். பாரதிதாசன் பாட்டு வரிக்குவரி வேகம். அவர் சார்ந்துள்ள இயக்கம் அவரைக் குடத்து விளக்காக ஆக்கியுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

கடலூர் திருக்குறள் அச்சக(திருக்குறள் முனுசாமி யுடையது) முகவரியிலிருந்து உடனே புறப்பட்டு வரும்படி பாவேந்தர் ஒரு நாள் தந்தியடித்திருந்தார். ஏதோ முக்கியமான அலுவல் போலிருக்கிறது என்று எண்ணி நானும் என் மனைவி பூபதியும் புறப்பட்டோம். கையில் அப்போது போதிய பணமில்லாததால் கடன் வாங்கிக் கொண்டு மதுரையிலிருந்து புறப்பட்டோம். கடலூர் திருக்குறள் அச்சகத்துக்குப் போனபோது பாவேந்தர் முதல்நாளே புதுவை சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். உடனே புதுவைக்குப் போனோம். புதுவை வீட்டில் பாவேந்தரைச் சந்தித்ததும் 'ஒன்றும் அவசரமான வேலை எதுவுமில்லை. கொஞ்சம் worried ஆ இருந்தேன் ... அதுதா... சும்மா பேசிக்கிட்டிருக்கலாமுன்னு கூப்பிட்ட... அவ்வளவுதா...'' என்றார். நான் அப்போது பாவேந்தரைப் பார்க்கவில்லை. ஒரு குழந்தையைத் தான் பார்த்தேன்.

என் மனைவி பூபதி மீனைத் தொடாதவள். பாவேந்தருக்காகத் தொட்டுச் சமைத்துப் பழகினாள். சாப்பாடு

பரிமாறும்போது என் மனைவியைப் பார்த்து "மீனை நிறையவை. தொட்டுக்கக் கொஞ்சம் சாப்பாடு வை. நீயும் சாப்பிடு. உடம்புக்கு நல்லது" என்று கூறுவார்.

கவிதை அவர் சொல்ல நான் எழுதுவேன். பிறகு திருத்துவார். துண்டு துண்டாக வேடிக்கைக்குச் சில கவிதைகள் சொல்வார். நான் எழுதி முடித்ததும் படித்துப் பார்த்துவிட்டுக் கிழித்துப் போட்டுவிடுவார். திருச்சி வானொலி நிகழ்ச்சிக்காகத் 'தொழில்' என்ற தலைப்பில் பாவேந்தர் கவிதை சொல்ல என் மனைவி எழுதினாள். அக்கவிதை பாரதிதாசன் கவிதைகள்—இரண்டாம் தொகுதியில் உள்ளது.

விருதுநகரில் திருக்குறள் மாநாடு. பெரியார் பேசும் போது, மற்ற புராண இதிகாசங்களைப் போலத் திருக்குறளும் மோசந்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காட்டுமிராண்டிக் காலத்தில் எழுதப்பட்ட இந்நூல் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. இதுவும் தமிழருக்கு ஒவ்வாத நூலே!'' என்று கூறினார். பெரியாருக்குப்பின் பேச எழுந்த பாவேந்தர் பெரியார் பேச்சை மறுத்தார். லேசாகக் கூட்டத்தில் அதிருப்திக்குரலும், ஆரவாரமும் எழுந்தது. பாவேந்தர் பேச்சை முடித்துக் கொண்டார். பிற்பகல் நிகழ்ச்சிக்குப்போக வேண்டாம் என்று கூறி இவரைத் தடுத்து நிறுத்தி விட்டோம். விருதுநகரிலிருந்து திரும்பும் போது நாங்கள் ஏறிவந்த புகைவண்டி திருப்பரங்குன்றத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இருப்புப்பாதை அருகில் தொழிலாளர் குடியிருப்பு கட்டப்பட்டிருந்தது. பெட்டிபோல் இருந்த அந்தச் சிறிய வீடுகளைப் பார்த்த பாவேந்தர் 'நூறு புறாக்கள் குடியிருக்கலாம்' என்று குறிப்பிட்டார்.

மணிவிழாச் சமயத்தில் ஒருநாள் கவிஞர் திருலோக சீதாராம் பாவேந்தர் தங்கியிருந்த அசோகாலாட்ஜ் அறைக்கு வந்தார். 'சுப்ரமணிய பாரதியாரின் மனைவி செல்லம்மாள் திருச்சியில்தான் இருக்கிறார். போய்ப் பார்த்து

விட்டு வரலாம்' என்று கூப்பிட்டார். 'ஐயரின் மனை வியா?' என்று கூறிவிட்டு அவசரமாக எழுந்தார். நானும் உடன் சென்றேன். செல்லம்மாளின் முன் விழுந்து வணங்கினார் பாவேந்தர். ''யாரு, சுப்புரத்தனமா? மொரட்டுப்பயலாச்சே! பிள்ளை குட்டி நாலைஞ்சு ஆயி டுச்சல்ல... இன்னம் மொரட்டுத்தனமா இருக்காதே!'' என்றார் செல்லம்மாள். 'இல்லம்மா!' என்று பணி வாகச் சொன்னார் இந்த நல்ல பிள்ளை!

தேனருவி

கவியரசு கண்ணதாசன்

○

பாவேந்தர் என்னும் பாட்டுத் தேனருவி சேலம் சேர்வராயன் மலையடிவாரத்தில் நுங்கும் நுரையுமாகச் சுழித்து ஓடிக்கொண்டிருந்த நேரத்தில், அதன் சுழலில் சிக்காமல் கரையோரமாகக் குளித்துக்கொண்டு அதன் அழகில் உள்ளத்தைப் பறி

கொடுத்தவண்ணம் நின்று கொண்டிருந்த துடிப்புள்ள இளைஞர் கவியரசு கண்ண தாசன். அவர் பேச்சு வாக்கில் பாவேந்தரைப் பற்றிச் சிதறிய சில முத்துக்கள் இங்கு சிறிய மாலையாகக் கட்டப்பட்டுள்ளன. இம் மாலையில் உள்ள முத்துக்கள் மூன்றுதான்; என்றாலும் அவை ஆணிமுத்துக்கள்.

○

●

பாவேந்தர் பாரதிதாசன் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் சில படங்களுக்குப் பாட்டும் வசனமும் எழுதிக்

கொண்டிருந்த நேரம். அப்போது மாடர்ன் தியேட்டர்ஸ் அலுவலகத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த 'சண்ட மாருதம்' என்ற பத்திரிகையில் மாதம் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எதிர்காலக் கனவுகள் ஏக்கங்களாக என் கண்களில் தேங்கியிருந்தன. பாவேந்தர் அப்போது புகழேணியின் உச்சியில் இருந்தார். அப்போது அவருடைய சிறிய அசைவுகளும் எனக்கு வரலாறாகப்பட்டன. நினைவில் நின்ற ஓரிரு நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியை மாடர்ன் தியேட்டர்ஸ் திரைப்படமாக உருவாக்கிக் கொண்டிருந்தனர். பாவேந்தர் அதற்குப் பாட்டும் வசனமும் எழுதிக்கொண்டிருந்தார். அவர் எழுதிய பாடல்களுக்கு தட்சணாமூர்த்தி இசையமைத்துக் கொண்டிருந்தார்.

கமழ்ந்திடும் பூவிலெல்லாம்
தேனருவி கண்டதனால்
வண்டு காதலினால்—நாதா
தாவிடுதே இன்பம் மேவிடுதே

என்ற பாடலுக்கு 'ரெகார்டிங்' நடந்து கொண்டிருந்தது. 'கமழ்ந்திடும்' என்ற சொல் உச்சரிப்பு கடினமாக இருந்தது. இன்னும் எளிய சொல்லாக இருந்தால் ரெக்கார்டிங்கில் அது தெளிவாக இருக்கும் என்று இசையமைப்பாளர் கருதினார். உடனே அங்கிருந்த பரவேந்தரை அணுகிக் ''கமழ்ந்திடும்'' என்ற சொல் ரெகார்டிங்கில் தெளிவாக இல்லை. அதை மாற்றி இன்னும் எளிமையான சொல்லொன்றைப் போட்டுக் கொடுங்கள்'' என்று கேட்டார்கள். அதற்குப் பாவேந்தர் வாயிடுக்கில் சிகரெட்டை இடுக்கிய வண்ணம், ''அதெல்லாம் மாத்த முடியாது. ரெக்கார்டிங் தெளிவா இல்லைன்னா சுந்தரத்துக்கிட்ட சொல்லி ரெகார்டிங் மெஷினை மாத்தச் சொல்லு!' என்று கூறினார். பிறகு

இசையமைப்பாளர் என்னிடம் வந்து அச்சொல்லை மாற்றிக் கொடுக்கும்படி கேட்டார். நான் 'குலுங்கிடும் பூக்களெல்லாம்' என்று மாற்றிக் கொடுத்தேன். இதைக் கேள்விப்பட்டதும் பாவேந்தருக்கு என் மேல் கோபம். இந்த நிகழ்ச்சியின் எதிரொலியாகச் சென்னை ஏ.வி.எம் ஸ்டுடியோவில் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை ஏ.வி.எம்.மில் 'பராசக்தி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. பராசக்திக்குரிய பாடல்கள் 'ரெகார்டிங்' செய்து கொண்டிருந்தனர். பாவேந்தர் ரெகார்டிங் நடந்த இடத்தில் ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருந்தார். அவரைப் பேசாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டனர். அதற்குப் பாவேந்தர் 'ஏ... என்பேச்சும் ரெகார்ட் ஆயிடும்னுபயப்படறியா. ரெகார்டிங் மெஷின் என்னோட பாட்டில 'கமழ்ந்திடும்'கற சொல்லை ரெகார்டு பண்ண முடியல... எம் பேச்சைத்தா ரெகார்டு பண்ணப் போவுதா... போப்பா...'' என்று சலிப்போடு சொன்னார்.

மாடர்ன் தியேட்டர்ஸில் 'கல்யாணி' என்ற படத்துக்கு Wire Recording நடந்து கொண்டிருந்தது, இசையமுதில் உள்ள பாவேந்தரின் 'அதோ பாரடி' என்றுதொடங்கும் 'வண்டிக்காரன் பாட்டு' ரெகார்டிங் ஆகிக் கொண்டிருந்தது. பதிவாகி முடிந்ததும் அப்பாட்டை 'ரெகார்டிங்' அறைக்குள் வைக்கச் சொல்லி வெளியில் இருந்து கேட்டார் பாவேந்தர். அதன்இசையமைப்பு அவருக்குத் திருப்தி தரவில்லை. பாவேந்தர் அருகில் இருந்தவர்களைப்பார்த்து, 'ஏப்பா! சங்கீதம் போட்றவ வண்டியோட்டி இருக்கானா? தூரத்திலே இருந்து வண்டிக்கார பாட்டைக் கேட்டிருக்கணும்... ஊம்'' என்று சலித்துக் கொண்டார்.

'அபூர்வ சிந்தாமணி' என்ற படத்துக்குப் பாவேந்தர் வசனம் எழுதியிருந்தார். அப்படத்துக்கு வெளிப்புறக் காட்சிகளை எடுப்பதற்காக நடிகர் குழு ஏர்க்காடு மலை

யடிவாரத்துக்குச் சென்று கொண்டிருந்தது; பாவேந்தரும் உடன்வந்து கொண்டிருந்தார். அவர் ஏறிச்சென்ற காரின் குறுக்கே ஒரு வாத்துக் கூட்டம் சரேலென்று வந்தது. காரோட்டி எவ்வளவு முயன்றும் வண்டியை நிறுத்த முடியவில்லை. ஏழெட்டு வாத்துகள் வண்டியில் அடிபட்டு இறந்து விட்டன. உடனே பாவேந்தர் அங்கிருந்தவர்களிடம், 'செத்துப்போன வாத்துக்கெல்லாம் சுந்தரத்தைப் பணம் கொடுக்கச் சொல்லு' என்று சொல்லிவிட்டு அவ்வாத்துக்களைச் சேலத்தில் அப்போது குடியிருந்த நகைச்சுவை நடிகை பி.எஸ். ஞானத்தின் வீட்டுக்கு அனுப்பிச் சமைக்கச் சொன்னார்; இரண்டு நாள் சுவைத்துச் சாப்பிட்டார்.

கோவையில் தமிழ்த் தேசியக்கட்சி மாநாடு நடைபெற்றது. அதில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனும், பாவேந்தரும், நானும் கலந்து கொண்டோம். நடுப்பகல் உணவு கோவை அறிஞர் ஜி.டி. நாயுடு இல்லத்தில் ஏற்படாகி இருந்தது. இலையில் உணவு பரிமாறப்பட்டது. ஜி.டி. நாயுடு சைவ உணவுக்காரர் ஆயிற்றே. இலையில் உப்பு, பருப்பு, சோறு, நெய், புடலங்காய் பரிமாறப்பட்டிருந்தன. அந்த சாப்பாட்டைப் பார்த்தவுடனே பாவேந்தருக்கு ஓர் 'அலெர்ஜி'. ஜி.டி. நாயுடு அருகில் நின்று கொண்டிருந்தார். பாவேந்தர் அவரைக் கூப்பிட்டு, ''ஏப்பா நாயுடு! இதைச் சாப்பிட்டுத்தா உயிரோட இருக்கறயா?" என்று கேட்டார். நாயுடு சிரித்தார். பிறகு அருகில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்து "கண்ணதாசா! எந்திரி! நமக்கு இதெல்லாம் ஒத்து வராது" என்று சொன்னார். நானும் பாவேந்தரும் பெங்களூர் பிரியாணி ஓட்டலுக்குச் சென்றோம்.

பாவேந்தர் மாரடைப்பால் தாக்கப்பட்டுச் சென்னை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாக செய்தி கிடைத்தது. சென்னை அரசாங்க மருத்துவ மனையில்

சேர்க்கப்பட்டிருந்தார். தமிழ்மலை கட்டிலில் சாய்ந்து கிடந்தது. மூக்கின் வாயிலாகப் பிராணவாயு செலுத்தப்பட்டிருந்தது. கொஞ்சம் நினைவு வந்ததும் எழுந்து உட்கார்ந்தார். மாரடைப்பால் தாக்கப்பட்டவர் படுக்கையில் கூட அசையாமல் கிடக்க வேண்டும். ஆனால் பாவேந்தர் எழுந்து உட்கார்ந்தார். பாத்ரூம் போக ணும் என்றார். அருகில் இருந்த அன்பர் ஒருவர் ''எழுந்திருக்காதீர்கள்? இங்கேயே போகலாம்!' என்று கூறித்தடுத்தார். பாவேந்தருக்குச் சுள்ளென்று கோபம் வந்தது. 'ஏ! நீயார் என்னைத் தடுக்க! மரியாதையைக் கெடுத்துக்காதே!' என்று அந்த நிலையிலும் சத்தம் போட்டார். பாவேந்தர் பிறரை அதட்டியே பழக்கப் பட்டவர். அவரை யார் அதட்ட முடியும்? பிறகு அருகில் இருந்தவர்கள் அவரைப் பிடித்து மெதுவாகப் பாத்ரூமுக்கு அழைத்துச் சென்றனர். அன்றே அவர் ஆவி பிரிந்தது. புதுவைக் குயிலின் குரல் ஒடுங்கியது.

பாவேந்தர் மாடர்ன்தியேட்டர்ஸ் 'சுபத்ரா'வுக்கு வசனம் எழுதினார். போருக்குப் புறப்பட்ட காதலன் அருச்சுனனைச் சுபத்ரா வைத்தகண் வாங்காமல் பார்க்கிறாள். அருகில் இருந்த அவள் அரண்மனைத் தோழி அதை ஓர்நாள் நினைவு கூர்ந்து 'சுபத்திரை? அன்று போருக்குச்சென்ற பார்த்தனை, நீ வைத்த கண் வாங்காமல் பார்த்தனை?' என்று குறிப்பிடுகிறாள். இந்த வரிகளைக் கேட்டு முப்பது ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும் இன்றும் அவ்வரிகள் என் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தமையன்

திருமதி மஞ்சுளா பாய்

திருமதி வை. சு. மஞ்சுளா பாய் அம்மையார் மராட்டிய ராவ்ஜி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் தஞ்சை மரர்ட்டிய மன்னர் அரண்மனையில் மெய்காப்பாளர் தலைவராகப் பணி புரிந்தவர். அப்பதவிக்கு Dignity Inspector என்பது அன்றைய பெயர். ஏழுவயதில் திருமணமாகி இளமையிலேயே கணவனை இழந்த இவர் சுயமரியாதை இயக்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்டார். சுயமரியாதை இயக்கம் இவரையும்

செட்டி நாட்டுச் செல்வர் வை.சு.சண்முகம் செட்டியாரையும் காதலால் இணைத்தது. கவிதை பாவேந்தரையும் இவரையும் சகோதர பாசத்தால் இணைத்தது. திருச்சிராப்பள்ளி பெரியார் பயிற்சிப் பள்ளி மாணவியர் விடுதிப் பொறுப்பாளராக இருக்கும் இவர் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளை உணர்ச்சியோடு இக் கட்டுரையில் கூறியிருக்கிறார்.

○

●

1936 ஆம் ஆண்டு, இளமையில் கணவனை இழந்து, சமுதாயக் கொடுமையென்னும் சூறாவளியில் சிக்கி,

பாய்மரம் உடைந்த மரக்கலம் போல் வாழ்க்கை அலை மலையில் திக்குத் தெரியாமல் மிதந்து கொண்டிருந்த என்னைச் சுயமரியாதைத் தென்றல், ஈரோடு நாகம்மாள் காலனித் துறைமுகத்தில் கொண்டுவந்து சேர்த்தது. சமுதாயக் கொடுமைகளால் நைந்து போயிருந்த எனக்குச் சுயமரியாதை இயக்கம் ஏற்ற புகலிடமாய் அமைந்தது. ஒரு பெண் தன்மதிப்போடும் பாதுகாப்போடும் வாழ நாகம்மாள் காலனியைவிட ஏற்ற இடம் வேறு எதுவுமில்லை என்பதை உணர்ந்தேன். சுயமரியாதை இயக்கப் பணியில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டேன். பெரியாரோடு நானும் கூட்டங்களுக்குப் போவேன். 'பாரதிதாசன் பாட்டைப் பாடு' என்று ஐயா கட்டளையிடுவார்கள். இனிய குரல் வளம் பெற்றிருந்த நான் பாவேந்தர் பாடல்களைக் கணீரென்று மேடையில் பாடுவேன். அப்போது நான் பாடிய பாடல்களுள் 'கண்கள் நமக்குண்டு'‡ என்று தொடங்கும் பாடல் எனக்கு மிகவும் விருப்பமான பாடல். ஒவ்வொரு மேடையிலும் நான் அதைத் தவறாமல் பாடுவேன்.

நீதிக்கட்சி தேர்தல் பிரசாரம் முடிந்து பெரியார் ஈ.வெ.ரா. கொடைக்கானலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். நானும், பூவாளூர் பொன்னம்பலனாரும், வேறு சில இயக்கத் தொண்டர்களும் கானாடுகாத்தான் வை சு. சண்முகஞ் செட்டியார் இல்லத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தோம்.

அந்தக் காலத்தில் வை.சு. சண்முகம் செட்டியாரைச் செட்டிநாட்டில் ராஜா சர் அண்ணாமலை செட்டியாருக்கு அடுத்த செல்வராகச் சொல்லலாம். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் அவருக்குப் பல கடைகள் இருந்

---

‡ கைம்மைக்கொடுமை — என்பது பாடலின் தலைப்பு. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் உள்ளது.

தன. மலேயா வத்துப்பகாரில் 2000 ஏக்கர் பரப்புள்ள ரப்பர்த் தோட்டம் அவருக்குச் சொந்தமாக இருந்தது. கானாடுகாத்தானில் அவருக்குப் பெரிய வளமான (Bangalow) இருந்தது. அதற்கு 'இன்பமாளிகை'¶ என்பது பெயர். அம்மாளிகையின் நடுவில் ஒரு பெரிய கூடம் உண்டு. அக்கூடத்தில் மிகப் பெரிய நிலைக் கண்ணாடி மாட்டப்பட்டிருக்கும். அக்கண்ணாடியின் எதிரில் ஓர் ஊஞ்சல் போடப்பட்டிருக்கும். அவ் ஊஞ்சலில் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் அமர்ந்து கொண்டு' பாண்டியா!' என்று வை.சு.ச.வைக் கூப்பிடுவாராம். பாரதியார் புதுவையிலிருந்து மீண்டுவந்து கடையத்தில் தங்கியிருந்தபோது மிகவும் வறுமையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். வை.சு.ச. அப்போது பாரதியாருக்குத் திங்கள்தோறும் ரூ. 40/- தவறாமல் அனுப்பிக்கொண்டிருந்தாராம். வை.சு.சா. மீது பாரதியார் ஒரு பாடலும் எழுதியிருக்கிறார்.

வை.சு.ச. சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளர். சு. ம. தொண்டர்கள் தெற்கு மாநிலங்களுக்குப் பிரசாரத்துக்குப் போனால் கானாடு காத்தான் இன்பமாளிகையில் தான் பொதுவாகத் தங்குவது வழக்கம். அது தான் அப்போது எங்கள் தெற்குக் கேந்திரம். வை.சு.ச. இளமையில் தேசியவாதி. காந்தியார் தென்னாடு வந்தபோது இன்ப மாளிகையில் இரண்டுமுறை தங்கியிருக்கிறார். காந்தியார் ஒருமுறை கூட்டத்தில் ஏலம் விட்ட1 கெஜம் கதர்த்துணியை ரூ. 10,000 கொடுத்து வாங்கினார். இன்ப மாளிகையில் இரண்டு கார்கள்

¶ திருமதி மஞ்சுளாபாயைச் சந்தித்துப் பாவேந்தர் பற்றிய குறிப்புகளைக் கேட்டுக்கொண்டு கானாடுகாத்தானை விட்டுப் புறப்படும் நேரத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற அந்த இன்பமாளிகை இருந்த இடத்தைக் காணச் சென்றேன். அங்கு ஒரு மண்மேடு மட்டும் இருந்தது. அக்காட்சி என் இதயத்தைச் சுட்டது —முருகு.

எப்போதும் நின்று கொண்டிருக்கும். ஒரு காரை(Study Baker) பெரியாருக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார். இந்தி எதிர்ப்பின்போது அரசாங்கம் பெரியாரிடமிருந்து பறிமுதல் செய்த கார் அதுதான்.

நானும் இயக்கத்தோழர்களும் இன்பமாளிகையில் தங்கியிருந்த போது வை. சு. சார். ஒரு வழக்கின் பொருட்டு மலேயா சென்றிருந்தார். வை.சு.ச.வின் துணைவியார் பார்வதி அம்மாள் அப்போது நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தார். அந்த அம்மையாரைக் கண் காணிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன், நோயினால் வருந்திக் கொண்டிருந்த அம்மையார் திடீரென்று ஒருநாள் உயிர்விட்டார். வை. சு. ச. விற்கு உடனே செய்தி அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் கானாடு காத்தான் வந்து சேரப் பத்து நாள் ஆகி விட்டது. செட்டிநாடு முறைப்படி சமபந்தி விருந்து மிகவும் ஆர்ப்பாட்டமாகப் பெரிய அளவில் நடத்தப்பட்டது. பெரியார் விருந்துக்கு நேரில்வரவில்லை; கடிதம் மட்டும் எழுதியிருந்தார்.

வை.சு.ச. வந்த பிறகு அவருக்குத் துணையாக நானும் சில நண்பர்களும் கொஞ்ச நாட்கள் கானாடு காத்தானில் தங்கியிருந்து ஆறுதல் கூறினோம். மனைவியை இழந்த நிலையில், குழந்தைகளோடு தனியாக இருந்த அவருக்கு ஒரு பெண்துணை தேவைப்பட்டது. கொள்கையால் ஒன்றுபட்டிருந்த நாங்கள் இருவரும் நீண்ட நேரம் நன்கு சிந்தித்து வாழ்க்கையிலும் ஒன்றுபடுவது என்று முடிவு செய்தோம். நீதிக்கட்சிப் பிரமுகர் திருவாளர் சௌந்திர பாண்டியன் முன்னிலையில் மதுரையில் எங்களுக்குப் பதிவுத்திருமணம் நடைபெற்றது.

பாவேந்தர் பாடல்களில் எனக்கு இளமையிலிருந்தே ஈடுபாடு அதிகம். என்கணவர் ஏற்கனவே பாரதியாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்; இலக்கியப்பற்று மிக்கவர். எனவே சுயமரியாதை இயக்கத்தின் இதயக்

குரலாக,சங்கநாதமாக விளங்கிய பாவேந்தர் தொடர்பு எங்கள் குடும்பத்துக்கு இன்றியமையாததாகி விட்டது. தென்தமிழ் நாட்டுக்கு வந்தால் இன்பநிலையமே அந்தப் புதுவைச் சிறுத்தையின் பாசறையாக விளங்கும். ஆசான் பாரதி அமர்ந்திருந்த எங்கள் கூடத்து ஊஞ்சல் அவர் மாணவரையும் தாலாட்டியது. எப்போது வந்தாலும் சில நாட்கள் இன்பநிலையத்தில் தங்கியிருந்து ஓய்வு பெற்றுச் செல்வார். செட்டிநாட்டு இளைஞர் பட்டாளம் தேனீக்களாக அப்புதுவைத் தேனடையைச் சூழ்ந்து கொள்ளும். மாடியிலிருக்கும் அவருக்கு ஓடி ஓடிப் பணிவிடை செய்வேன். என்னை அவருடைய உடன் பிறவாத் தங்கையாகப் போற்றி மதித்தார். 'அம்மாடி!... கண்ணு!' என்று தான் அன்பொழுக அழைப்பார்.

''ஆகா என்ன தங்கை மேலே உருக்கம்!'' என்று என் கணவர் கேலி செய்வார்.

''பின்ன என்ன? ஏன்னால என் தங்கைக்கு எவ்வளவு தொல்லை! சிட்டு மாதிரி மாடிக்கும் கீழ்க்கட்டுக்கும் பறந்திக்கிட்டிருக்காளே!" என்று கூறி வருந்துவார்.

ஒருநாள் இன்ப நிலையத்தில் தங்கியிருந்த அவரைக் கோனாப்பட்டிலிருந்து பேசுவதற்காக அழைக்க வந்தனர். கோனாப்பட்டு முத்தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் என்று எண்ணுகிறேன். கோனாப்பட்டில் 'சிறுத்தொண்ட நாயனார்' என்ற தலைப்பில் பாவேந்தர் பேசினார். கூட்டத்தில் இருந்தவர்களைப் பார்த்து ''குழந்தை. அதுவும் ஒரே குழந்தை. தாய் மடியில் கிடத்தித் தந்தையே அக் குழந்தையின் கழுத்தை அறுத்தா இந்த நாளிலே சும்மா இருப்பீர்களா?" என்று உருக்கமாகக் கேட்டார். அக்கூட்டத்தில் இருந்த துடிப்பான திருப்பத்தூர் மாணவர் இருவர் (பெயர்கள்: சு.மகாலிங்கம்,நூர்முகம்மது)'கொல்லுவோம்! கொல்லுவோம்!' என்று கூச்சலிட்டனர். கொஞ்சநாள் கோனாப்

பட்டுக் குழந்தைகள் எலைாம் கோயில் பக்கமே போக வில்லை. பகுத்தறிவுச் சிந்தனைக்குப் பக்குவப்படாத மக்களிடையில் பாவேந்தர் அன்று பேசிய துணிச்சலான பேச்சு மிகப்பெரிய புரட்சியாகும். இந்தக் கோனாப் பட்டுப் பேச்சு துடிப்பான செயல் திறமை மிக்க இளை ஞர் சிலரை இவர் எதிரில் கொண்டுவந்து நிறுத்தியது. அவர்களுள் பள்ளி ஆசிரியராகக் கோனாப்பட்டில் இருந்த கா. அப்பாதுரையும். முருகு சுப்பிரமணியமும் குறிப்பிடத் தக்கவர்கள். இந்த இருவரும் பன்மொழிப் புலவராகவும், பொன்னி ஆசிரியராகவும் எதிர்காலத் தில் வளர்ச்சியுற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. எங் கள் இன்ப நிலையத்தில்தான் இச் செட்டிநாட்டு இளை ஞர்கள் துணையோடு 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது, பாவேந்தருடைய முத் தமிழையும் 'இன்ப இரவு' என்ற பெயரில் அது நாடக மாக அரங்கேற்றம் செய்தது.

1944ஆம் ஆண்டு பாவேந்தரின் மூத்தமகள் சரசுவதி யின் திருமண முயற்சிகள் நடைபெற்றன. இம்முயற்சி யில் எனக்கும் கணிசமான பங்கு உண்டு. மணமகன் கண்ணப்பர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புல வர் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தார்; சுயமாரி யாதை இயக்கத்திலும் ஈடுபாடு மிக்கவர். இவரைப் பற்றிக் கேள்விப்பட்ட நான் நேராகப் புதுவை சென்று பாவேந்தரைக் கலந்து கொண்டு சிதம்பரம் சென்றேன். அன்பழகன் அப்போது மாணவர் என்றுஎண்ணுகிறேன். அன்பழகன் வீட்டுக்குக் கண்ணப்பரை வரச்சொல்லி நேரில் பார்த்தேன்: அழகும் அடக்கமும் மிக்க இளைஞ ராக அவர் விளங்கினார். பார்த்தவுடன் அவரை எனக் குப்பிடித்து விட்டது. அவருடைய இசைவைக் கேட்டுக் கொண்டு பெண்பார்க்கும் அடுத்த கட்டத்துக்கு ஏற்பாடு செய்தேன்.

புதுவையில் பெண்பார்க்க நாளும் குறிக்கப்பட்டது. என் சுமையைச் (நகைகள்) சரசுவதியின் உடம்பில் ஏற்றி

அவளை அலங்கரித்தேன். கண்ணப்பர் வந்தார்; பெண்ணுக்கும் பிடித்தது. பெண்ணும் கண்ணப்பர் கண்ணுக்கு பிடித்தது. திருமணம் உறுதி செய்யப்பட்டது.

மாப்பிள்ளை கண்ணப்பர் கரூருக்குப் பக்கத்தில் உள்ள கட்டிப்பாளையத்தைச் சேர்ந்தவர். நிலபுலன்களோடு கூடிய வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரே பிள்ளை. அவர்களுடைய பதிவுத் திருமணம் திருச்சியிலும், பாராட்டுக்கூட்டம் கட்டிப் பாளையத்திலும் நடைபெற்றது. பாராட்டுக் கூட்டத்துக்குச் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர் தலைமை தாங்கினார். பெரியாரும், அறிஞர் அண்ணாவும் வேறு பல இயக்கத் தலைவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

இத்திருமணத்தில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தமிழ்நாட்டுப் பெண்ணுலகுக்கு நான் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். பாவேந்தர் மூத்த மகள் சரசு தந்தையிடம் அதிக ஈடுபாடு கொண்டு அவருக்குப் பணிவிடைகள் புரிந்தவள். ஒரு வீட்டில் ஆண்கள் எவ்வளவு சீர்திருத்தக்காரர்களாக இருந்தாலும் பெண்கள் கட்டுப்பெட்டிகளாகவே இருப்பர். 'அவர்களுக்கு அடுப்பே திருப்பதி; ஆம்படையானே குல தெய்வம்!' வேறு சமுதாயச் சிந்தனைகள் அவர்களை அவ்வளவாக பாதிப்பதில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்டுச் சீர்திருத்தச் சிந்தனையில் ஈடுபட்ட தமிழ்நாட்டுப் பெண்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்பெண்களில் சரசும் ஒருத்தி.

திருமணத்துக்கு முன்பு தாலி செய்வதைப் பற்றிப் பேச்சு எழுந்தது. உடனே சரசு என்னைப் பார்த்து †"ஏன் அத்தை! நான் என்ன மாடா? முனிசிபாலிடியில் கட்டு

---

‡ மஞ்சுளாபாயைப் பாவேந்தர் மக்கள் எல்லாரும் அத்தை என்றே அழைப்பர்

வதுபோல் எனக்கும் லைசென்ஸா கட்டப் போறாங்க?" என்று கேட்டாள். நான் வியப்பினால் விக்கித்துப் போனேன். தமிழ்நாட்டின் புரட்சிக் கவிஞனுக்கு ஏற்ற புரட்சிப் பெண்தான் இவள் என்று நான் மிக்க மகிழ்ச்சி யடைந்தேன். உடனே நாங்களே அதற்கு ஒரு முடிவு கண்டோம். தமிழரின் சின்னமான புலியில்கயல் பொறித்த பதக்கமொன்று தாலிக்குப் பதிலாகத் திரு மணத்தின் போது அணிவிக்கப்பட்டது. அவர்கள் குடும் பத்தில் எல்லாத் திருமணத்திலும் அப்பழக்கம் இன்றும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. திருமணம் முடிந்தபிறகு மணமக்கள் இருவரும் கானாடு காத்தான் வந்து சிலநாட்கள் தங்கியிருந்து விட்டு மகிழ்ச்சியோடு திரும்பினர்.

சரசுவதியின் திருமணத்துக்குப் பிறகு ஒரிரு ஆண்டு களில் எங்கள் குடும்பத்தில் சில குழப்பங்கள் நிகழ்ந் தன. மலேயாவில் நடந்து கொண்டிருந்த எங்கள் வாணி பம் சீர்குலைந்தது. அங்கிருந்த சொத்துக்கள் சம்பந்த மான வழக்குகளில் வை.சு.ச. ஓயாமல் ஈடுபட்டிருந் தார். 10 லட்சம் ரூபாய் அளவுக்கு வரவேண்டிய செல் வம் வழக்கின் காரணமாகத் தடைப்பட்டுக் கிடந்தது. வை.சு.ச. அமைதியிழந்தார். அடிக்கடி சீற்றத்துக்கு ஆளானார். அவர் கடைப்பிடித்துவந்த சீர்திருத்தக் கருத்துக்களும் ஆட்டம் கண்டன. பகுத்தறிவு வாதிகள் தங்கியிருந்த இன்பநிலையம் சாமியார்களுக்கு இடம் கொடுத்தது. சாமியார்களுக்கு ஏற்பச் சமைக்கும்படி என்னை என் கணவர் வற்புறுத்தியதால் நான் அவர் பால் கருத்து வேறுபாடு கொண்டு புதுவைக்குச் சென் றேன். பாவேந்தர் அப்போது சென்னைக்குக் கதை யெழுதப் போயிருந்தார். என் கணவர் புதுவைக்குக் கடிதம் மேல்கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். குழந்தை களுக்கு அம்மை கண்டிருக்கிறது என்று அவரிடமிருந்து கடிதம் வந்ததும் நான் கானாடு காத்தான் திரும்பி விட் டேன்.

பிறகு எங்கள் குடும்பம் கானாடு காத்தானிலிருந்து குடி பெயர்ந்து திருவானைக்காவலில் கொஞ்ச நாள் தங்கி யது. அப்போது பாவேந்தர் குடும்பத்தோடு வந்திருந்து எங்களுடன் தங்கியிருந்தார். கண்ணப்பரும் சரசுவதி யும் வந்திருந்தனர். அந்தச் சமயத்தில் தான் பாவேந் தருக்குத் திருச்சியில் மணி விழா எடுக்கும் முயற்சி நடை பெற்றது. ஆனால் நடுவில் சில குழப்பங்கள் ஏற்பட்டுச் சிறிய அளவில் திருவானைக்காவல் சத்திரம் ஒன்றில் 30—4—1951 இல் அவ்விழா எடுக்கப்பட்டது.

திருவானைக் காவலிலிருந்து எங்கள் குடும்பம் மீண்டும் கானாடு காத்தானுக்குத் திரும்பியது. எங்கள் வாழ்க் கையில் ஏற்பட்ட நொடிப்புகள், துன்பங்கள் எங்களை இன்ப நிலையத்திலிருந்து வெளியேற்றின. எனது பொது வாழ்க்கை ஈடுபாடு குறைந்தது. பாவேந்த ருடைய தொடர்பும் குறைந்தது. அன்புக்குரிய என் கணவரையும், தகுதி மிக்க தமிழ்த்தமையனையும் பிரிந்து தனித்திருக்கும் இவ்வேளையில், அவர்களுடைய பழைய நினைவுகள் என் கண்களை அடிக்கடி பனிக்கும் படி செய்கின்றன. என் வாழ்க்கையில் நான் சந்தித்த இரண்டு பெரிய மேதைகளுள் ஒருவர் பெரியார்; மற் றொருவர் பாவேந்தர்.

என் அறிவுத் தந்தை

பாரதி சுவாமிநாதன்

○

பாவேந்தர் கவிதைக்குத் தமிழகமெங்கும் சுவைஞர்களும் உண்டு; சுற்றத்தார்களும் உண்டு. அச் சுற்றத்தாரில் சிலர் பாவேந்தரைத் தந்தையாக மதித்து நடந்து கொண்டனர். சிலர் உடன் பிறந்த தமையனாகமதித்து நடந்து கொண்டனர். இப் பட்டியல் தமிழகமெங்கும் உண்டு.

மதுரைப் புத்தகக்கடை உரிமையாளர் பாரதி சுவாமி

நாதன் பாவேந்தரின் இலக்கியக் குடும்பப்பிள்ளை. தந்தைக்குரிய பாசத்தோடும் உரிமையோடும் பாவேந்தர் இவரிடம் பழகிவந்திருக்கிறார். பாவேந்தரின் இதய வீணையின் ஏற்ற இறக்கத்திற்கேற்ற நரம்பின் வித்தியாசமான அதிர்வுகளையும் குறிப்பிடத்தக்க குடும்ப நினைவுகளையும் சுவைபடச் சுட்டிக் காட்டுகிறார் சுவாமிநாதன் இக்கட்டுரையில்.

○

●

1949 ஆம் ஆண்டு பாவேந்தர் மதுரை வந்தார். 'பாரதிதாசன் மன்றம்' நடத்திய திருக்குறள் வகுப்பில் சொற்

பொழிவாற்றுவதற்காக வந்தார். அம்மன்றத்தில் நான் ஓர் உறுப்பினன். அப்போது ஏற்பட்ட தொடர்பு அவர் இறக்கும் வரையில் நீடித்தது. மதுரை வந்தால் வழக்கமாக சங்கர் & கோ மருந்துக் கடை மாடியில் தங்குவார். என் பேரில் அவருக்கு ஓர் ஈடுபாடு. மதுரையில் தங்கும் போது என்னை வந்து பார்ப்பார்; அடிக்கடி வெளியே கூட்டிக் கொண்டு போவார். மதுரையிலும் திருச்சிராப்பள்ளியிலும் மேற் கொண்ட மணிவிழா முயற்சிகளில் எனக்கும் பங்குண்டு.

1953 ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் எனக்குத் திருமணம். காதல் மணம்; கலப்பு மணம். டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் திருமணத்தை நடத்த விரும்பினேன். அப்போது மு.வ. வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காரணத்தால் அ.கி. பரந்தாமனார் தலைமையில் நடத்திக் கொள்ளும்படி கூறிவிட்டார். ஆனால் மதுரை முத்துவும், தங்கப்பழ மும், பாரதிதாசன் தலைமைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினர். பாவேந்தரும் தலைமைதாங்க ஒத்துக் கொண் டார். திருமணம் இனிது நடைபெற்றது. திருமணம் முடிந்த அடுத்த நாள் மணமக்களாகிய எங்களை மதுரை முத்து தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

1957 ஆம் ஆண்டு 'பாரதி புத்தக நிலையம்' என்ற பெயரில் புத்தகக் கடை ஒன்று துவக்கினேன். அத்திறப்பு விழாவுக்குத் தலைவர் பாவேந்தர். திறப்பாளர் முத் தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம். திருச்சி மணி விழாவின் போது பாவேந்தருக்கும், கி. ஆ. பெ. அவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. அக் கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்த அவர் கள் என் கடை திறப்பு விழாவில் மீண்டும் கூடினர். திறப்பு விழாமுடிந்ததும் ரீகல் டாக்கீசில் இரண்டுபேரும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர். 'அகலாது அணு காது தீக்காய்வார் போல்க'—என்பது முத்தமிழ்க் காவ லர் தலைப்பு. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

—என்பது பாவேந்தர் தலைப்பு. நான் வரவேற்புரை நிகழ்த்தினேன்.

முத்தமிழ்க் காவலர் முதலில் பேசினார்: பேசி முடித்தது ம் 'நான் சைவன்? எனக்கு முதலில் சோறு போடு' என்று சொல்லிவிட்டுச் சாப்பிடப் போய்விட்டார். அவர் புறப்பட்டுப்போனதும், ''கி.ஆ.பெ. விசுவநாதம் அணா பைசா கணக்குப் பார்க்கக் கூடியவர். நான் என்ன பேசி விடுவேனோ என்ற பயம். அதனால் தான் முன்னாலேயே புறப்பட்டு விட்டார்'' என்று கூறினார் பாவேந்தர்.

மதுரை வந்தால் தொடர்ந்து 15 அல்லது 20 நாள் என் வீட்டில் தங்கியிருப்பார். என்னை அவருடைய மகனாகப் பாவிப்பார். வீட்டிற்குள் நுழைந்ததும் என் மனைவியைப்பார்த்து 'தம்பி வந்துட்டானா?' என்று பரிவோடு கேட்பார். என்னைக் கண்டதும் 'அய்யா! வாய்யா!' என்று அன்பொழுகக் கூப்பிடுவார். பாவேந்தர் மதுரையில் இருக்கிறார் என்ற செய்தி தெரிந்தால் எப்போதும் என் வீட்டில் பத்து இருபது பேர் கூடிவிடுவர். எல்லாருக்கும் விருந்து நடக்கும்.

மீன், கறி, புறா சூப் விரும்பி அவர் உண்ணும் உணவுகள். ரசத்திலே மோர்விட்டுக் குடிப்பார்; முட்டை நிறையச் சாப்பிடுவார். இரவில் கடுக்காக மிளகு ரசம் கேட்பார். இடியாப்பம் அவருக்கு நிறையப் பிடிக்கும். இந்தோ—சிலோன் ஓட்டலுக்கு அடிக்கடி போவோம். அங்கு கைம்மா விரும்பிச் சாப்பிடுவார்.

என் மனைவி டோக் பெருமாட்டி கல்லூரியில் தமிழ் இலக்கியப் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தாள். பாவேந்தரைக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று பேச வைக்க வேண்டும் என்பது அவள் விருப்பம். கல்லூரியிலிருந்து அழைக்க வந்தனர். பிற்பகல் 4-30 மணி வரை மறுப்பு. அதற்குமேல் ஒப்புக்கொண்டு பேசப் புறப்பட்டார்.

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பாரதி விழா. பாவேந்தர் என் வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து அவரையும் விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர். அப்பள்ளி ஆசிரியர் வி.ஜி. சீனிவாசன் பாவேந்தரை அழைக்க வந்திருந்தார். அவர் பாரதி மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவர். பாவேந்தரைச் சுற்றியிருந்த தி.க. நண்பர்கள் 'சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஒரே பார்ப்பனக் கூட்டம். அங்கே போகாதீர்கள்' என்று கூறிவிட்டனர். அவரும் மறுத்துவிட்டார். சீனிவாசன் என்னிடம் வந்தார். 'என்ன? சேதுபதி உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல மறுத்துவிட்டீர்களா? பாரதி பணிசெய்த இடமாயிற்றே!' என்று பாவேந்தரிடம் கேட்டேன்.

"நான் மறுப்புச் சொல்லலையே! அவ்வளவு தூரம்..... கூடப் பேசிக்கிட்டுப்போக ஆளில்லை. சரி வா!" என்று சொல்லிப் புறப்பட்டார். கூட்டத்திற்குப் பேராசிரியர்கள் ரா.ஸ்ரீ. தேசிகன், ரம்போலா மஸ்கரனேஸ் ஆகியோர் வந்திருந்தனர். பாவேந்தர் உள்ளே நுழைந்தது ம் ஒரே கரவொலி. மற்றவர்கள் பேச்சை நிறுத்தி விட்டனர். 'நான் கண்ட பாரதி என்பது இவர் பேசிய தலைப்பு. பேச்சு மிகவும் உருக்கமாக இருந்தது. பாரதியை நேரில் கொண்டுவந்து தம் பேச்சில் நிறுத்தினார்.

மதுரை வந்தால் கார்மேகக் கோனாரைப் பார்க்கப் போவார். அவர்மேல் இவருக்குப் பற்று அதிகம். கோனாரும் இவரைப் பார்க்க வருவார். கோனாரைப் பார்க்கப் போகும் போது பழம், மாலை சகிதமாகத்தான் போவார். மாலையைப் போட்டுவிட்டுக் கோனாரின் கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொள்வார்.

ஒருமுறை மதுரையில் இருந்து வெளியான தமிழ்நாடு நாளிதழின் சார்பாக மலர் ஒன்று வெளியிட்டனர். அதற்குக் கவிதையொன்று வேண்டுமென்று பத்திரிகை

சார்பில் கேட்பதற்கு டி.ஏ.வி. நாதன் வந்திருந்தார். தமிழ்நாடு பத்திரிகைக்கு புதுவை ஏஜெண்ட் பாவேந்தரின் மகன் மன்னர் மன்னன். பத்திரிகைக்குச் சேர வேண்டிய தொகையை அனுப்பக் காலதாமதம் ஏற்பட்டதால் தமிழ்நாடு அலுவலகத்திலிருந்து ஒரு முறை வக்கீல் நோட்டீசு அனுப்பப்பட்டது. உடனே அத் தொகைக்கு 'செக்' போட்டு அனுப்பும்படி மன்னர் மன்னனிடம் கூறினார் பாவேந்தர். அந்நிகழ்ச்சி அவர் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. எனவே மாணிக்கவாசகம் பார்க்க வந்தபோது அவரிடம் பேச வில்லை பாவேந்தர். டி.ஏ.வி. நாதன் இரண்டு மூன்று தடவை நடந்து மலருக்குக் கவிதை வாங்கிச் சென்றார். இரவு கவிதை எழுதிப் போட்டு விட்டுப் பாவேந்தர் தூங்கி விட்டார். என் மனைவி ரகுபதி அதைப் பெயர்த்து எழுதி வைத்தாள்.

ஒரு முறை சைக்கிள் ரிக்ஷாவில் வீட்டுக்கு வந்தார் பாவேந்தர். நியாயமாக அவனுக்கு எட்டணா கொடுத்தால் போதும்; ரூ 2½ கொடுக்கச் சொன்னார். எதற்கு அவ்வளவு தொகை என்று கேட்டேன். 'எவ்வளவு தூரம் தெரியுமா? மேலமாசி வீதியெல்லாம் சுத்திக்கிட்டு வந்தா...ம்...கொடுப்பா' என்றார். பேசாமல் கொடுத்தேன். மறுபடி ஒரு முறை அதே இடத்திலிருந்து வரும் போது ரிக்ஷாக்காரனுக்கு 6 அணா தான் கொடுத்தோம். பாவேந்தர் உலகியலைப் பொறுத்தவரையில் குழந்தை.

ஒரு முறை முருகுசெழியன் என்ற நண்பர் பாவேந்தரை விருந்துக்கு அழைத்திருந்தார். போகும்போது நானும் அவரும் பேசிக் கொண்டே நடந்து போனோம். வரும்போது பாதிவழியிலேயே நின்று விட்டார். 'இனி வண்டி நகராது, வண்டி கூப்பிடு?' என்றார். கூப்பிட்டேன். மதுரை வந்தால் திரைப்படம் பார்க்க அழைத்துச் செல்வேன். பாதியிலேயே எழுந்து வந்து விடுவார்.

பாவேந்தரின் மகன் கோபதி (மன்னர்மன்னன்)யின் திருமணம். நான் குடும்பத்தோடு திருமணத்துக்குப் புதுவை சென்றேன். எனக்கு வேட்டி சட்டையும், என் மனைவிக்கு வெல்வெட் பையும் கொடுத்தார். நான் திருமணத்துக்குப் பட்டிவீரன்பட்டி மலைப்பழம் வாங்கிச் சென்றேன். சேலம் நண்பர் ஒருவர் குண்டுமாம்பழம் வாங்கி வந்தார். பண்ருட்டி நண்பர் ஒருவர் பலாப்பழம் வாங்கி வந்தார். காலையில் சுவையான சர்க்கரைப் பொங்கலும் பழமும் சிற்றுண்டியோடு வழங்கப்பட்டது. காலை 10 மணிக்கு பந்தலில் அமர்ந்திருந்த நண்பர்களுக்குப் பாதாம்கீர் வழங்கப்பட்டது. பாவேந்தர் சமையற்காரனைக் கூப்பிட்டு 'எல்லோருக்கும் முட்டை ஆம்லேட் போட்டுக்கொடு... இல்லை அவிச்சுக்கொடு' என்று கட்டளையிட்டார். திருமண வீட்டில் முட்டை ஆம்லட்டா! சமையல்காரன் திருதிருவென்று விழித்தான். செய்தி பெண்கள் கூட்டத்துக்கு எட்டியது. மூத்த மகள் சரசுவதி ஓடி வந்தாள். 'என்னப்பா திருமண வீட்ல இப்ப யாராவது முட்டை சாப்பிடுவாங்களா?' என்று கேட்டாள். 'ஏ... சாப்பிட்டா என்ன? எனக்கு வேணும்! சாஸ்திரமா பேசற சாஸ்திரம்...' என்று சத்தமிட்டார். அவருக்கு மட்டும் முட்டை அவித்துத் தட்டில் வைத்துக் கொடுக்கப்பட்டது; அறைக்குள் சென்று சாப்பிட்டார்.

திருமணத்துக்கு மறுநாள் அவரைப் புதுவைச் சட்ட மன்றத் தேர்தலுக்கு மக்கள் முன்னணியின் சார்பில் நிற்கும்படி வற்புறுத்தினர். இந்தத் தொகுதியில் பாவேந்தர் நிற்பதுதான் சரி என்று புதுவைச் சுப்பையாவும் சொல்லி அனுப்பினார். தேர்தலுக்கு நிற்கலாமா வேண்டாமா என்று பாவேந்தர் உள்ளம் ஊசலாடியது என்னை அபிப்பிராயம் கேட்டார். 'தேர்தலில் வெற்றி பெறுவது உறுதியென்றால் கையெழுத்துப் போடுங்கள்' என்றேன். போட்டார்; வெற்றியும் பெற்றார்.

இராமநாதபுரம் புலவர் குழுவுக்குப் போய்விட்டுப்

பாவேந்தர் வயிற்றோட்டத்தோடு மதுரை வந்தார். டாக்டர் மா. இராசமாணிக்கனார் அழைத்து வந்து வீட்டில் விட்டுவிட்டுச் சென்றார். மருத்துவரிடம் அழைத்துச் சென்று ஊசி போட்டோம். வயிற்றோட்டம் குறைந்தது; நிற்கவில்லை. டாக்டர் காமேஸ்வரனி டம் சீட்டு வாங்கிக் கொஞ்சம் 'பிராந்தி' வாங்கிக் கொடுக்கச் சொன்னார். 'எனக்கு ஊசி வேண்டாம். கொஞ்சம் குடிச்சாச் சரியாப் போயிடும்' என்று பல தடவை குழந்தை போலக் கேட்டார்.

''மதுவா! அது மட்டும் உங்களுக்கு நான் வாங்கிக் கொடுக்க மாட்டேன். என் அப்பா குடியாலயே என் குடும்பத்தைக் கெடுத்தார்'' என்று சொல்லிக் கட்டாய மாக மறுத்து விட்டேன்.

''சரி சரி! டிக்கெட் வாங்கிக் குடு. நான் ஊருக்குப் போறே" என்று கோபமாகக் கேட்டார். வாங்கிக் கொடுத்தேன். ஊருக்குப் புறப்பட்டு விட்டார்.

பாவேந்தர் கடைசியாக மதுரை வந்த போது மனைவி யோடு வந்தார். பழனியம்மாள் மீனாட்சியம்மன் கோவிலைப் பார்க்க வேண்டும் என்று கேட்டார் பாவேந்தர் என்ன சொல்லுவாரோ? என்ற அச்சம் எனக்கு.' அப்பா‡ அனுமதி கொடுத்தால்தான் அழைத் துப் போவேன்' என்று சொல்லிவிட்டுப் பாவேந்தர் முகத்தைப் பார்த்தேன்.

''அழைச்சுப் போ! என்னை ஏன் பாக்கற. இவ ஒரு சாமியை விடமாட்டா. எத்தனை தூணுன்னு எல்லாத் தூணையும் எண்ணிட்டு வந்திடுவா. எல்லாத் தூணை யும் காட்டு'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் பாவேந்தர். அதன் பிறகு தான் நான் அழைத்துச் சென் றேன்.

---

‡ சுவாமிநாதன் பாவேந்தரை 'அப்பா' என்று தான் அழைப்பது வழக்கம்.

பாண்டியன் பரிசு படப்பிடிப்புக்காகப் பாவேந்தர் சென்னை தியாகராயநகர் இராமன் தெருவில் தங்கியிருந்தார். நானும் என் மனைவியும் அவரைப் பார்க்கச் சென்றோம். மகிழ்ச்சியோடு வரவேற்றார். பிறகு என் மனைவியின் கையைப்பிடித்து 'இந்தக் கையில் சுவையாகச் சாப்பிட்டு நீண்டநாள் ஆயிற்று' என்று சொன்னார். பாவேந்தரை அழைத்துப்போய் எழுத்தாளர் அகிலன் வீட்டில் ஒரு நாள் சைவ உணவும், ஓவியர் மணியம் வீட்டில் இரண்டு நாள் புலால் உணவும் என் மனைவியைச் சமைத்துப் போடச் சொன்னேன். விருப்புடன் உண்டார்.

ஆனந்த விகடன் இதழிலிருந்து ஒருமுறை மலருக்குப் பாடல் வேண்டுமென்று எழுதிக் கேட்டிருந்தனர். 'பார்ப்பான் பத்திரிகைக்கா! மாட்டேன்' என்றார். 'கவிதை எழுதி அனுப்புங்க. பத்திரிகை பார்ப்பான் பத்திரிகைதா! படிக்கறவ எல்லாம் தமிழந்தானே?' என்று நான் சொன்னேன். 'அப்படியா! சரி!' என்று சொல்லிக் கவிதை எழுதிக் கொடுத்தார். ரூ. 501/-க்குச் செக் எழுதிக் கொடுத்துவிட்டுப் பாவேந்தரிடம் கவிதை வாங்கிக் கொண்டு போனார்கள்.

'எண்ணூல் தமிழனது நூல்' அது இலங்கை போய் சாங்கியம் என்ற பெயரோடு திரும்பி வந்தது. தமிழன் கொடுத்ததைச் சாங்கியக்காரர் திருப்பிச் சொல்கிறார்' என்று பாவேந்தர் ஒருமுறை கூறினார்.

குதிரை வண்டியில் செல்லும் போது காலைக் கீழே தொங்கப் போட்டுக் கம்பியைப் பிடித்துக்கொண்டு வருவார். இது அவரிடத்தில்உள்ள ஒரு குழந்தைத்தனம்.

ஆஸ்தி நாஸ்தி

அணுகுண்டு
எஸ். வி. பொன்னையா

○

திருவாளர் அணுகுண்டு எஸ். வி. பொன்னையா ஆத்தூர்க்காரர்; தீவிர தி.க; கருஞ்சட்டைக்காரர்; தாடியோடு திரியும் ஆத்தூர் சாக்ரட்டீஸ். இவர் சாக்ரட்டீஸ் போல எதிர்ப்படும் எல்லாரையும் கேள்விகள் கேட்கிறார்; மனிதனைச் சிந்திக்க வைக்கும் கேள்விகளாகத் தொகுத்து ஒரு பிரசுரமே வெளியிட்டிருக்கிறார். ஆத்

தூர்க் கடைத் தெருவில் இருக்கும் இவருடைய சைக்கிள் கடை ஒரு சிந்தனைப் பட்டறை. நீங்கள் போனாலும் உங்களைக் கட்டாயம் கேள்விகள் கேட்காமல் விட மாட்டார்; வேண்டுமானால் போய்ப்பாருங்கள். 1953-இல் பாவேந்தரை ஆத்தூரில் சந்தித்து உரையாடியதை நினைவு கூர்ந்து இக் கட்டுரையில் சொல்கிறார் பொன்னையா.

○

●

1953-ஆம் ஆண்டு, ஆத்தூரில் சேர்மன் ஆறுமுகனார் மன்றத் திறப்பு விழாவின் போது பாவேந்தர் வந்

திருந்தார். அவருக்கு வேண்டிய நண்பர் வெங்கடாசலம் வீட்டில் தங்கியிருந்தார். விழாவில் பேசினார். நானும் என் நண்பர் குலாமும் அவரைச் சந்தித்து உரையாடினோம்.

இசுலாமிய நண்பர் குலாமை நாங்கள் அறிஞர் குலாம் என்று அன்புடன் அழைப்போம். அவர் ஆத்தூர் ஹாஜிஜி அச்சகத்தின் உரிமையாளர்: பெரியாரிடத்தில் நீண்ட நாள் தொடர்புடையவர். சீர்திருத்தவாதி; சுயமரியாதை இயக்கத் தொண்டர். அவர் பாவேந்தரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ''இந்து மதத்தைப் போலத்தான் இசுலாம் மதத்தையும் கருதுகிறீரா? சுயமரியாதை இயக்கம் வற்புறுத்தும் சீர்திருத்தக் கருத்துக்களைக் குரானும் சொல்லுகிறது. குரான் கருத்துக்களை ஏற்று நடைமுறைப் படுத்தியவர் முகம்மது நபி. சேசு, முகம்மது, சிவன் எல்லாம் உங்களுக்கு ஒன்று தானா?" என்று கேட்டார் அவர்.

''ஆமாம்!'' என்ரூர் பாவேந்தர்

''அது எப்படி? உங்கள் கருத்துத் தவறு!" என்றார் குலாம். பாவேந்தருக்குச் சுள்ளென்று கோபம் வந்து விட்டது.

''என்னைப் பொறுத்த வரையில் மதம் என்பது கழுதை லத்திக்குச் சமானம். கழுதை போட்ட முதல் லத்திக்கு ஒரு மரியாதையும், இரண்டாவது லத்திக்கு மற்றொரு மரியாதையும் என்னிடத்தில் கிடையாது'' என்று வெடுக்கென்று சொன்னார் பாவேந்தர்.

அடுத்தநாள் திருவண்ணாமலையில் ப. உ. சண்முகம் தலைமையில் பாரதி விழா. பாவேந்தர் பேசினார். ''பாரதி பற்றிப் பேச எனக்குத்தான் தெரியும். அவரைப் பற்றிப் பேச என்னைவிடத் தகுதி இந்த நாட்டில் வேறு எவனுக்கும் இல்லை!''

''எட்டைய புரத்தில் பாரதிக்கு மணிமண்டபம் திறக்கப் பட்டது. ஜெமினிகணேசன் என்ற நடிகர் முன்னாலி ருந்து அவ்விழாவை நடத்தினாராம். இந்த நாட்டில் நான்தான் பாரதியின் இலக்கிய வாரிசு. எனக்கும் அழைப்பில்லை; பாரதியின் மகளுக்கும் அழைப்பில்லை. பாரதியின் தங்கை, மகள், மனைவி—இவர்களுக்குக்கூட விழாப்பந்தலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. மிகவும் முயன்று தான் அவர்கள் உள்ளே சென்றிருக்கி றார்கள்'' என்று காட்டமாகப் பேசினார்.

மறுநாள் நாராயண குப்பத்தில் தி. க. தோழர் கெங்கப் பன் மகளுக்கு இவர் தலைமையில் திருமணம் நடை பெற்றது. மணமக்களுக்கு அறிவுரை, அறிவுரை வழங் கியதோடு கடவுளைப் பற்றியும் 1½ மணி நேரம் பேசி னார். அப்போது ஆஸ்திகம்—நாஸ்திகம் பற்றி அவர் சொன்ன விளக்கம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

"ஆஸ்தி என்றால் செல்வம்; நாஸ்தி என்றால் அழிவு. பொருளை வீணடிக்காமல் காப்பவன்ஆஸ்திகன். ஆண்ட வன் பேரால் பால், தயிர், நெய், தானீயம் ஆகியவற்றை அவிர்ப்பாகம் என்று தீயில் கொட்டி நாசம் செய்பவன் நாஸ்திகன். காலப்போக்கில் இக்கருத்து எதிரெதிராகத் திருத்தப்பட்டுவிட்டது. உந்து வண்டி நிலையத்தில் மூட்டை சுமப்பவன் பேருந்திலிருந்து இறங்கும் மக்க ளைப் பார்த்துக் 'கூலிகூலி' என்று கத்துகிறான். வெளி நாட்டுக்காரன் இதை எதிரிலிருந்து பார்த்தால் என்ன நினைப்பான்? வண்டியிலிருந்து இறங்குபவர்களைத் தான் 'கூலி' என்று பெயரிட்டுக் கூப்பிடுவதாக நினைப் பான். ஆஸ்திகம் நாஸ்திகமானது இதைப் போலத்தான் நூற்றுக் கணக்கான டின் எண்ணெயையும் நெய்யையும் ஊற்றி நாஸ்தி செய்து கார்த்திகைத் தீபம் கொளுத்து பவன் தான் நாஸ்திகன்'' என்றார் அவர்.

அத்திருமணத்தில் குடும்பக்கட்டுப்பாட்டை வற்புறுத்

திப் பேசும்போது.'' ''நரன் திருச்சிராப்பள்ளியில் ஒரு தமிழறிஞர் வீட்டுக்குச் சென்றிருந்தேன்: குடிப்பதற் குத் தண்ணீர் கேட்டேன். வீட்டுக்குள்ளிருந்து அவரு டைய பையன் தண்ணீர் கொண்டு வந்தான்.'குழந்தை எத்தனை?' என்று நான் அவரைக் கேட்டேன். 'வீட்டில் கேட்டுச் சொல்கிறேன்' என்றார். கேட்டதில் பத்துக்குமேல் இருக்கும் என்று தெரியவந்தது. மண மக்களுக்குச் சொல்கிறேன். இப்படிப் பிள்ளை பெறக் கூடாது. பெரியார் 'கர்ப்ப ஆட்சி' என்ற பெயரில் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி நூல் எழுதியிருக்கிறார். மணமக்கள் இதைக் கட்டாயம் படிக்க வேண்டும்!" என்றார். பின்னர் தமது 'தவிப்பதற்கோ பிள்ளை' என்ற பாட்டை நகைச்சுவையோடு விளக்கினார்.

''திருக்குறள்தான் தமிழர் பண்பாட்டு நூல். திருக் குறளின் அடிப்படையில் தமிழர் வாழ்க்கை நெறியை யும் பண்பாட்டையும் வகுத்து அமைக்க வேண்டும். திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து முடிவு செய்தால் அதற்கேற்ப நான் குறளுக் குப் புதிய உரை எழுதுகிறேன்" என்று கூறி முடித் தார்.

இரு துருவங்கள்

ஒளவை
சு. துரைசாமி பிள்ளை

○

உரைவேந்தர் ஒளவை சு. துரைசாமி பிள்ளை பழுத்த சைவர்; ஆத்திகர். பாவேந்தர் பாரதிதாசன் பழுத்த சீர்திருத்தவாதி; நாத்திகர். என்றாலும் தமிழ் இந்தஇரு துருவங்களையும் இணைக்கும் பாலமாக இருந்து, இவர்கள் நட்பை வளர்த்தது. கொள்கை வேறுபாடு

எப்போதும் இவர்கள் குறுக்கே நின்றதில்லை. இத் திருநீற்றுச் செல்வர் தம்உள் ளத்தில் பாவேந்தருக்காக ஒதுக்கியிருந்த இடத்தை நம் பார்வையில் படும்படி இக்கட்டுரையில் திறந்து காட்டுகிறார்.

○

●

என் சொந்தவூர் வடவார்க் காடுமாவட்டத்தைச்சேர்ந்த ஒளவையார் குப்பம். நான் செய்யாற்றில் ஆசிரியராகப்

பணிபுரிந்த நேரத்தில் பாவேந்தர் புதுவையில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். மயிலம் முருகன் பேரில் எனக்கும் ஈடுபாடு; அவருக்கும் ஈடுபாடு. அவர் மயிலம் முருகன் மீது 'சுப்பிரமணியர் துதியமுது' பாடினார். நானும் முருகனைப்பற்றிப் பாடல் எழுதும் பண்புடையேன். மயிலம் கோவிலில் அவரும் நானும் சந்தித்து அளவளாவுவோம்.

நான் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நூலகராக இருந்து கொண்டு கரந்தைக் கவியரசு வெங்கடசாலம் பிள்ளையிடம் தமிழ்ப் பயின்றேன். அப்போது பாரதிதாசனார் தஞ்சாவூர் வரும்போதெல்லாம் தமிழ்ச் சங்கத்துக்கு வருவார். எங்கள் நட்பு வளர்ந்தது.

சுயமரியாதைக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் நான் செல்வதுண்டு; ஆனால் தீவிரமாகப் பங்கேற்பதில்லை. திருவாரூர்ச் சுயமரியாதை மாநாட்டில் சந்தித்தோம்; ஒன்றாகத் தங்கியிருந்தோம். நான் உரை எழுதிய ஐங்குறு நூறு—மருதத்திணை வெளிவந்தபோது பாரதிதாசனாரின் பாடல் முதல் தொகுதி வெளியாயிற்று.

ஞானியார் சுவாமிகள் தலைமையில் சைவ சமாஜக் கூட்டம் புதுவையில் நடைபெற்றது. நானும் மணி. கோடீசுவரனும்¶ கூட்டத்துக்குச் சென்றிருந்தபோது பாரதிதாசனார் வீட்டில் தங்கியிருந்தோம். தமிழைப் பற்றியும் சைவத்தைப் பற்றியும் ஆர்வத்தோடு பேசுவார்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த போது, அடிக்கடி மனைவியோடு எங்கள் வீட்டுக்கு வரு

பச்சையப்பர் கல்லூரிப் பேராசிரியரும் மறைமலையாரின் மாணவருமான மணி. திருநாவுக்கரசின் தம்பி மணி. கோடீசுவரன். வேலூர் மகந்தை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்; ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளர்.

வார். அவர் மனைவிக்கும் என் மனைவிக்கும் நெருங்கிய நட்பு. தங்கள் சுகதுக்கங்களை நீண்டநேரம் பரிமாறிக் கொள்வர். சில சமயங்களில் மனைவியை எங்கள் வீட்டில் விட்டுவிட்டு இரண்டொருநாள் வெளியூர் சென்று விட்டு மீண்டும் வந்து அழைத்துப் போவார்.

தஞ்சை, நாகர்கோவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெற்ற புலவர் குழுவில் நாங்கள் ஒன்றாகக் கூடியிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாகர்கோவில் புலவர் குழுவுக்குச் சென்றிருந்த போது என் மாணவன் நாஞ்சில் ஆரிது வீட்டில் தங்கியிருந்தோம். காலையில் கன்னியாகுமரி சென்று எழுகதிரின் அழகைக் கண்டு களித்துத் திரும்பினோம்.

நாங்கள் தனியாக இருக்கும்போது 'நான் பாடும் பாட்டிலுள்ள குறை பற்றிச் சொல்லு பார்ப்போம். நீர் சொன்னால் சரியாக இருக்கும்' என்று கேட்பார்.

'நான் குறை சொல்லமாட்டேன்; குறையும் இல்லை' என்று நான் சொல்லுவேன்.

'புதுவையிலே ஆட்சிக்குவரும் தலைவர்களெல்லாம் நீங்கள் திட்டினால் பொறுத்துக் கொள்கிறார்களே! ஏன்?' என்று நான் கேட்பேன்.

'எல்லாத் தலைவனும் 1932லிருந்தே எனக்குப் பழக்கம்' என்று அவர் சொல்லுவார்.

நாங்கள் அரசியல் வாதிகளாயிருந்தால் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புண்டு; நாங்கள் இலக்கிய வாதிகள். எப்போதாவது இலக்கியக் கூட்டங்களில் சந்திப்போம். சந்திக்கும்போது ஒருவரையொருவர் கேலிசெய்து சிரித்துப்பேசி மகிழ்வது எங்கள் வாடிக்கை. நாங்கள் கூடியிருப்பதையும் பேசிமகிழ்வதையும் எல்லாரும் வியப்போடு பார்ப்பார்கள்.

மறத் தமிழன்

தருமபுரி செல்லையா

○

தருமபுரியில் நாட்டுவைத்தி யராக விளங்கும் திரு. செல் லையாவை எல்லாரும் அறி வர். வயது முதிர்ந்த கட் டைப் பிரம்மச்சாரி. தமிழ், தமிழர், சீர்திருத்தம் இவர்

உயிர் மூச்சு. யாழ்ப்பாணத்துத் தமிழரான இவர் பாவேந்தரோடு பழகியநாட்களை நினைவுபடுத்தி இக்கட்டுரையில் கூறுகிறார்.

●

○

நான் பிறந்தது கி.பி. 1892. யாழ்ப்பாணத்துச் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். என்

தாயார் சீனியர் கேம்பிரிட்ஜ்மீம், புலவர் தேர்வும் படித்தவர். என் உரிமையுணர்ச்சிக்கு என் தாய் தான் காரணம். இளமையிலிருந்தே எளிதில் உணர்ச்சி வசப் படும் நான், யாழ்ப்பாணத்தில் ஜூனியர் கேம்பிரிட்ஜ் படித்துக் கொண்டிருந்த போது, புத்தகத்தைக் கல்லூரி முதல்வர் முகத்தில் விட்டெறிந்துவிட்டுக் கல்வியை முடித்துக் கொண்டவன்.

கண்டியில் மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது. அது சிங்களவருக்கும் பத்தினிக் கோட்டம். அதற்குப் பக்கத் தில் ஒரு மசூதி உள்ளது. கோயிலும் மசூதியும் அரு கருகே இருந்த காரணத்தால் இந்து—முஸ்லீம் சச்சரவு அடிக்கடி எழுவது வழக்கம். ஒரு முறை அது பெரிய கலவரமாக மூண்டுவிட்டது. அதில் எனக்கும் முக்கியப் பங்குண்டு. அந்தக் கலவரத்தில் 200 இசுலாமியர்கள் கொல்லப்பட்டனர்; சில இந்துக்களும் சிங்களவர்களும் உயிரிழந்தனர். திரு. இராமநாதன் இலண்டன் சென்று வாதாடி எங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். என்றாலும் நான் நாடு கடத்தப்பட்டேன்.

நாடு கடத்தப்பட்டதும் நான் நேராகத் தமிழகம் வந்து நாகப்பட்டினத்தில் தங்கினேன். ஆறு மாதங்கள் கழித்து ஒருமுறை கள்ளத்தோணியில் இலங்கை சென்று திரும்பி வந்தேன். என் மாமா அப்போது ரூ. 8000/- கொடுத்து, ''இதை வைத்துக்கொண்டு தமிழ் நாட்டிலேயே ஏதா வது தொழில் செய்து பிழைத்துக்கொள்'' என்று அறி வுரை கூறினார். அப்பணத்தை எடுத்துக்கொண்டு இந்திய நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்தேன்.

1942 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நான் பாவேந்தரை முதன் முதலில் சந் தித்தேன். பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனைகளைக் கேட்டு அவ்வீயக்கத்தின்பால் அதிக ஈடுபாடு கொண்டி ருந்தேன். பாவேந்தரின் புரட்சிக் கவிதைகளைப் படித்துப் பாராயணம் செய்தவன் நான். பாவேந்தரின் எடுப்பான

தோற்றமும், சிங்க முகமும், துணிச்சலான பேச்சும் என் னைப் பெரிதும் கவர்ந்தன. என்னையறியாமல் அவர் பால் நான் ஈர்க்கப்பட்டேன். பாவேந்தர் சேலம்—தரும புரிப் பக்கம் எப்போது வந்தாலும் நான் உடனிருப்பேன். எப்போது வந்தாலும் 'எங்கே செல்லையா?' என்றுதான் முதலில் தேடுவார்.

திருச்சி தி. க. மாநாட்டுக்கு நான் சென்றிருந்த போது அவரும் வந்திருந்தார். ஏதோ ஒரு விடுதியில் தங்கி யிருந்தார். என்னை நாள்தோறும் காலையில் வந்து சந்திக்கச் சொல்லுவார். இருவரும் ஆற்றுக்குக் குளிக் கச் செல்லுவோம். சிந்தாமணியில் ஒரு குடிசையில் ஓர் அம்மாள் பிட்டு, ஆப்பம், இடியாப்பம் மூன்றும் சுடு வாள். நேராக அங்கு சென்று சாப்பிடுவோம். பாவேந் தருக்கு ஆப்பமும், இடியாப்பமும் மிகவும் பிடிக்கும். வழக்கமாகக் காலையில் ஆறு பிட்டு, நான்கு இடியாப் பம், இரண்டு ஆப்பம் சாப்பிடுவார். இடியாப்பத்துக்குப் பழைய பாகற்காய்ப் புளிக் குழம்புதான் அவளிடம் இருக்கும். 'செல்லையா! பழைய குழம்பு இடியாப்பத் துக்கு மிகப் பொருத்தம்!' என்று கூறிச் சுவைத்துச் சாப் பிடுவார். இடை வேளையில் வேறு யாருடனாவது பிரி யாணி சாப்பிடப் போய்விடுவார். நான் சைவ சாப் பாட்டுக்குப் போய்விடுவேன். சாப்பாடு அப்போது 6 அணா. இலையை அப்போது நாமே எடுத்துப் போட வேண்டும். இரவுச் சாப்பாட்டுக்குப் பாவேந்தரை மணி யம்மையிடம் அழைத்துப் போவேன். மீன் குழம்பும் கறி வறுவலும் மணியம்மை உணவோடு பரிமாறுவார். பாவேந்தர் எப்போதும் நிதானமாகவே சாப்பிடுவார். அவர் சாப்பிடும் வரையிலும் நான் அருகில் அமர்ந் திருக்க வேண்டும்.

சொந்தச் சிந்தனையாளர்

பென்னாகரம்
நஞ்சையா

திருவாளர் பென்னாகரம் நஞ்சையாவைத் திராவிட இயக்கத் தோழர்கள் நன்கறிவர். இவர் தருமபுரி மாவட்டப்பெரு நிலக்கிழார். நீதிக்கட்சிக் காலந் தொட்டுப் பெரியாருக்குத் தொண்டர்: துணிச்சல்காரர். 1938 ஆம் ஆண்டிலிருந்து பாவேந்தரிடத்தில் தொடர்புகொண்

டவர். கவிகாளமேகம் திரைப் படத்தை எடுத்த 'மோகினி பிக்சர்ஸ்' உரிமையாளர் களுள் ஒருவர். சேலம் மாவட்டக் கழகத் துணைத் தலைவராகத் (Vice President, Salem District Board) தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல ஆண்டுகள் பணி புரிந்தவர்.

○

●

எனக்கும் பாவேந்தருக்கும் முதல் தொடர்பு 1938 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. சேலம் மாவட்டத்தைச்

சேர்ந்த என் நண்பர்களெல்லாம் கூடி 'மோகினி பிக் சர்ஸ்' என்ற பெயரில் ஒரு திரைப்படக் கம்பெனியைத் துவக்கிக் 'கவிகாளமேகம்' என்ற படத்தை எடுத்தோம். அக் கம்பெனியில் கீழ்க்கண்டவர்கள் பங்குதாரர்கள்.

1) திருவாளர் டி. கிருஷ்ணமூர்த்தி
(நீதிக்கட்சிப் பிரமுகர், சேலம் மாவட்டக் கழகத் தலைவர்)
2) » கனகசபாபதி உடையார்
3) » கி. ஆ.பெ. விசுவநாதம்
4) » டி.என்.ராமன்
5) நான்

நடிகர்கள்:

1) திரு. என். எஸ். கிருஷ்ணன்
2) திரு. திருவாவடுதுறை ரராஜரத்தனம் (குழலிசை வேந்தர்)
3) திரு காளி என். ரத்தனம்
4) திரு சி.வி.வி. பந்துலு
5) திருமதி டி.ஏ. மதுரம்
6) » எஸ். பி. எல். தனலட்சுமி
7) » பி. எஸ். ஞானம்
8) » பி. ஆர். மங்களம்

கதை வசனம் பாட்டு பாவேந்தர் பாரதிதாசன். அவருக்குத் துணையாகச் 'சினிமா உலகம்' பத்திரிகை ஆசிரியர் பி. எஸ் செட்டியாரும், ஜலகண்டாபுரம் ப. கண்ணனும் இருந்தனர். எல்லிஸ் ஆர். டங்கன், மொய்லன் ஆகிய இருவரும் படத்தின் இயக்குநர்கள். திருவாரூர் இசைக் கல்லூரியில் பணியாற்றிய டி.வி. நமசிவாயம் (டி.என். ராமனின் தங்கை மகன்) இசையமைப்பாளர்.

மோகினி பிக்சர்ஸ் அலுவலகம் முதலில் சேலம் சந்திப்பில் (சூரமங்கலம்) இருந்தது; பின்னர் சென்னைக்கு மாறியது. சென்னையில் பொறிஞர் பா.வே. மாணிக்க

நாயக்கர் பங்களாவில் படக்கம்பெனியின் அலுவலகம் இருந்தது.

கவிகாளமேகம் படப்பிடிப்பு கோடம்பாக்கம் பிராக் ஜோதி ஸ்டுடியோவில் நடைபெற்றது. நடுவில் பணத் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால் மதுரைதண்டபாணி பிலிம்ஸோடு கூட்டுச் சேர்ந்து படத்தை முடிக்க வேண் டிய சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டு முதலாளிகள்! இரண்டு டைரக்டர்கள்! ஏகப்பட்ட செலவு! படம் வெளி வந்ததும் சுமாராக ஓடியது. இழப்பு ஏதுமில்லை! குறைந்த லாபமே கிடைத்தது.

இப்படத்திற்குப் பாவேந்தர் பாரதிதாசன் திரைக்கதை, வசனம், பாடல் எழுதவேண்டும் என்று நாங்கள் விரும்பி னோம். அவரை நேரில் கண்டு பேசி இதைப்பற்றி முடிவு செய்யப் புதுச்சேரி புறப்பட்டோம். புராணப்படம் என்றவுடன் பாவேந்தர் முதலில் மறுத்தார். 'சினிமாத் துறைக்குப்போய் புராணப்படம் எழுதித்தான்சம்பாதிக்க வேண்டுமா?' என்று கேட்டார். 'உங்கள் திறமை வெளிப்பட வேண்டும்' என்று வற்புறுத்திக் கூட்டி வந் தோம். பாவேந்தருக்கு ரூ 3000/- கொடுக்கப்பட்டது. திரைப்பட எழுத்தாளருக்கு அந்தக் காலத்தில் அது பெரிய தொகை. சேலத்தில் படக்கம்பெனி இருக்கும் வரையில் பெரியார் வந்தாலும், பாவேந்தர் வந்தாலும் கம்பெனிக் கட்டிடத்திலேயே தங்குவர். படக்கம்பெனி சென்னைக்கு மாற்றப்பட்ட பிறகு கம்பெனிக்கு எதிரி லேயே ஒரு வீடெடுத்து அதில் குடும்பத்தோடு பாவேந் தர் குடியிருந்தார். வீட்டில் புலால் உணவு செய்தால் என்னை விருந்துக்கு அழைப்பார். சமையல்காரன் சேலத்தைச் சேர்ந்தவன்; நன்றாகச் சமைப்பான்.

படப்பிடிப்பின் போது டி. என். ராஜரத்தனம் குடித்து விட்டுவருவார். ஒரு நாள் அதிக போதையோடு வந்து படுத்துவிட்டார். அவரை எழுப்ப முடியவில்லை. படப் பிடிப்புத் தடைப்பட்டது. 'பத்துக்குடம் தண்ணீரைத்

தலையில் ஊற்றுங்கள்' என்றார் பாவேந்தர். அப் படியே செய்து துவட்டிப் போதையைத் தெளிய வைத் தோம்.

பாவேந்தர் இரவில்தான் நீண்ட நேரம் எழுதுவார். அப்போது பிராந்தியைக் கொஞ்சங் கொஞ்சமாக ஊற் றிச் சோடாவில் கலந்து குடிப்பார். துணைக்குக் கறி வேண்டும். 'இரவுதான் எழுதுவதற்கு அமைதியான நேரம்' என்று கூறுவார். விடிந்த பிறகு குளித்துச் சிற் றுண்டி அருந்திவிட்டுத் தூங்குவார்.

கவி காளமேகம் படப்பிடிப்பின் போது அவருக்கும் எனக் கும் ஏற்பட்ட நட்பு அவர் இறக்கும் வரையில் தொடர்ந் தது. தருமபுரிப் பக்கம் வந்தால் என் வீட்டில் வந்து ஓரிருநாள் தங்காமல் போகமாட்டார். பெனினாகரத் தில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களிலும் அடிக்கடி வந்து பேசியிருக்கிறார்.

பாவேந்தர் எப்போதும் ஆரவாரமாகப் பேச மாட்டார். நிதானமாகப் பேசி சுருக்கென்று குத்துவார். இவர் பாணியே தனி. பெரியாரைப் போல அஞ்சாமை மிக்க வர்; சொந்த சிந்தனைக்காரர். (Original Thinker) பென்னாகரம் தமிழ்ச் சங்கத்தில் பேசியபோது, "தமிழர சர்களால் தான் வைதீகம் வளர்ந்தது; நாடு கெட்டது. ஓரி, காரி, பேகன் எல்லாருமே மடையர்கள். பத்து சதுர மைலை ஆண்டுகொண்டு பத்துக் கூத்தியா வைத்திருந் தார்கள்" என்று புலவர்கள் நடுவிலே துணிச்சலோடு பேசினார்.

சில செய்திகளை ஒளிவு மறைவு இல்லாமல், உள்ளத் தில் பட்டதை—பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் — பச்சையாகப் பேசக்கூடிய வர்கள் எனக்குத் தெரிந்தவரை இரண்டு பேர்தான். ஒருவர் பெரியார்: மற்றொருவர் பாரதிதாசன்.

ஒருமுறை உடலுறவைப்பற்றிப் பேச்சு வந்தது. 'என்ன

இதைப்பற்றிப் பெரிசா அலட்டிக்கறீங்க...மலஜலங் கழிக்கற மாதிரி இது உணர்ச்சிக்கு ஒரு கழிவாய்!" என்று ஒரு போடு போட்டார். இந்த நாட்டில் அகமும் புறமும் படித்த எந்தத் தமிழாசிரியனும் துணிந்து இதைச் சொல்லப் பயப்படுவான்.

இவரிடத்தில் உள்ள ஓர் ஆபூர்வ குணத்தைக் கவனித்திருக்கிறேன். பெரியார் ஒருவருக்குத்தான் இவர் கையெடுப்பார்; பெரியார் வந்தால் ாடி வரவேற்பார். மற்றவர் கையெடுத்தால்தான் இவர் எடுப்பார். இதைப் பலமுறை கவனித்த நான் ஒரு நாள் 'ஏன்' என்று கேட்டேன். 'எனக்குத் தலைவர் பெரியார்தான்' என்று சொன்னார். அறிஞர் அண்ணாவையே பாவேந்தர் மிகவும் சாதாரணமாக மதித்தார்.

''பெரியாரும் அண்ணாவும் இரண்டு பெரும் தமிழர்கள்'' என்பார். 'பெரியார் எதைச் சேர்த்தாலும் தமிழனுக்குத்தான் கொடுப்பார். இந்த யானைக்கு (பெரியாருக்கு) ஈடு யார்?' என்பார்.

''பார்ப்பனீயம் இந்த நாட்டின் நச்சுப்பாம்பு'' என்று பெரியார் அடிக்கடி சொல்லுகிறார். நீங்கள் பாரதியைப் போற்றும் காரணம் என்ன?'' என்று ஒரு நாள் கேட்டேன்.

''பாரதியிடத்தில் பார்ப்பனத்தன்மை எள்ளளவும் கிடையாது. 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!' என்று பெரியாருக்குமுன் முரசு கொட்டிச் சொன்னவன் பாரதி. நான் புரட்சிக் கவிதைகள் எழுதக் கற்றுக் கொண்டதே அவரிடம்தான். என்னை முதன் மூதலில் மனமுவந்து பாராட்டியவரும் அவரே; விளம்பரப்படுத்தியவரும் அவரே. என் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்து நாளேட்டில் வெளிவர ஏற்பாடு செய்தார். இந்தக் காலத்தில் எந்தப் பார்ப்பான் நமக்கு இப்படி உதவி செய்வான்? அதனால் தான் நான் பாரதி

யாரைப் போற்றுகிறேன்; பாரதிதாசன் என்று புனை பெயரும் வைத்துக் கொண்டேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

ஒருமுறை சேலம் கோயம்புத்தூர் லாட்ஜில் பாவேந்தர் தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றேன். நாங்கள் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது கோவைப் பட அதிபர் ஜூபிடர் சோமு திடீரென்று உள்ளே வந்தார். தாம் எடுக்கும் திரைப்படத்துக்கு உடனே பாடல் ஒன்று வேண்டுமென்றும் இப்போதே எழுதித்தர முடியுமா என்றும் கேட்டார்.

''ஏ எழுதாம...? Sequence சொல்லு!'' என்றார் பாவேந்தர். பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தைச் சோமு சொன்னதும் சரியாகப் பத்து நிமிஷத்தில் பாட்டை எழுதிக் கையில் கொடுத்துவிட்டார். உடனே ரூ. 1000/-க்குச் செக் ஒன்று கொடுத்துவிட்டுப் பாடலை வாங்கிச் சென்றார் ஜூபிடர் சோமு. நான் மலைத்துப் போனேன்.

ஒருமுறை பொங்கல் சமயத்தில் தருமபுரிச் சுற்றுப் பயணம் வந்திருந்தார் பாவேந்தர். பொங்கல் நாளன்று பென்னாகரம் வரும்படி அழைத்தேன். அவரும் அழைப்பை ஏற்று வந்தார். அவர் விரும்பும் உணவு வகைகளைச் சமைத்து விருந்து வைத்தேன். அவரும் மகிழ்ச்சியோடு உண்டார். பிறகு என்னைப் பாராட்டி 'அஞ்சாத நஞ்சையா' என்று கவிதை எழுதினார். ஊருக்குத் திரும்பும்போது கடத்தை மானின் உப்புக் கண்டம் நான்கைந்து படி ஒருபையில் போட்டுக் கொடுத்தேன்; அதை எடுத்துச் சென்றார்.

பாரதிதாசன் இந்த நூற்றாண்டில் பெரிய மேதைகளில் குறிப்பிடத்தக்கவர். அவருடைய நட்பு என் வாழ்வில் கிடைத்த அரும்பேறு.

சில அரும்புகள்

பேச்சுவாக்கில்
பேராசிரியர் பற்றி

பேராசிரியர் அன்பழகன் பேச்சைக் கேட்ட பாவேந்தர் கூறியது: ''பலர் பிறந்து பேசக்கற்றுக் கொள்கிறார்கள்; அன்பழகன் பேசிக்கொண்டே பிறந்துவிட்டான்."

1943ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் ஒரு பேச்சுப்போட்டி நடைபெற்றது, அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக அப்போது இருந்த பேராசிரியர் அன்பழகன் அப் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதல்பரிசு பெற்றார். பாண்டிச்சேரி ஆளுநர் அன்று மாலை வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பதாக இருந்தார். அன்று மாலை அன்பழகனுக்கு பூட்ஸ் வாங்க அவரைப் பாவேந்தர் அழைத்துச் சென்றார். பூட்ஸ் வாங்கிக் கொண்டு திரும்புவதற்குள் பரிசளிப்பு விழா முடிந்து விட்டது.

பாலும் தெளிதேனும்

விழுப்புரத்துக்குப் பக்கத்தில் ஒரு சிற்றூர். அவ்வூரிலிருந்த உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்குப் பாவேந்தர் பாட்டில் அளவுகடந்த ஈடுபாடு. பள்ளி இலக்கிய விழாவில் பேசப் பாவேந்தருக்கு அழைப்பு விடுத்து எழுதியிருந்தார். பாவேந்தரும் ஒப்புக் கொண்டார். அவ்வூரில் வாழ்ந்தவர்களுள் பெரும்பாலோர் செல்வாக்குமிக்க காங்கிரஸ்காரர்கள்; பழுத்த வைணவர்கள். பெருங்கவிஞர் பேச வருகிறாரே என்று ஊர்ப் பிரமுகர்கள் திரண்டு வந்திருந்தனர். கூட்டம் துவங்குவதற்குச் சற்றுமுன்பாகப் பாவேந்தர் பள்ளிக்கு வந்தார். நெடிய தோற்றம், பருத்த வெளவால் மீசை, லாங்

கோட், கையில் சிகரெட்—டின் நெருப்புப் பெட்டி ஆகிய திருக்கோலத்தோடு உள்ளே நுழைந்தார் பாவேந்தர். விழா துவங்கியது. பாவேந்தர் பேச எழுந்தார்.

பாலும், தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் — கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா —

என்ற ஔவையார் பாடல் அவர் வாயில் சிக்கிக் கொண்டது.

''பாட்டை எழுதியிருக்கறதைப் பாரு... மூண்டம். முத் தமிழும் அவ்வளவு ச்சீப்பா என்ன? அவ அவ தமிழில புலமை பெறுவதற்கு எத்தனை ஆண்டுகள் கஷ்டப்பட வேண்டியிருக்கு... எத்தனை பேராசிரியர் கிட்டப் பாடங் கேக்க வேண்டியிருக்கு. ஓரணாவுக்கு பாலும், பழமும் சுண்டலும் வாங்கிப் பிள்ளையாருக்குக் கொடுத்துட்டாத் தமிழ் வந்துருமா...இது என்ன காண்ட்ராக்டா? உதைக் கணும்'' என்று பேசிமுடித்து விட்டுக்கீழே இறங்கினார். அடுத்த வாரத்தில் அந்தத் தலைமையாசிரியர் தண்ணீர் கிடைக்காத ஓர் ஊருக்கு மாற்றப்பட்டார்.

பழம் பால்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் குழுக் கூட்டம். விருந்து நடந்து கொண்டிருந்தது. விருந்தை முடித்துக் கொண்டு வெளியில் வந்தார் பாவேந்தர். வெளிமுற்றத்தில் மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் துரைசாமி ஐயா நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் இரவில் உணவு உண்பதில்லை; பழமும் பாலும் சாப்பிடுவார். அவரைச் சாப்பிட அழைத்தார்கள். அருகிலிருந்த பாவேந்தர், 'துரைசாமிஐயா இரவில் சாப்பாடு சாப்பிடறதில்லை. அவருக்குப் 'பழம்பால்' இருந்தாக் கொடுங்க' என்று சொன்னார். அத்தொடரின் சிலேடை நயத்தைப் புரிந்து கொண்டு எல்லாரும் சிரித்தார்கள்.

பாவேந்தரைப்பற்றிக் குமரிமலர் ஆசிரியர்
ஏ. கே. செட்டியார்

பாவேந்தருக்கு. வாழ்க்கையில் இரண்டே விருப்பம் தான் உண்டு. ஒன்று கவிதை; மற்றொன்று மீசை.

காடைக் கனவு

வாணியம்பாடியில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. இராவண காவிய ஆசிரியர் புலவர் குழந்தையும் கலந்து கொண்டார். பாவேந்தர் முதல்நாளே வந்துவிட்டார். பாவேந்தர் புலால் விருப்பம் உடையவர் என்பதை அறிந்து விழாக் குழுவினர் 'ஐயா இப்பக்கம் காடை அதிகமாகக் கிடைக்கும். நாளை உங்களுக்குக் காடைக் கறி சமைத்துப் போடுகிறோம்' என்று கூறினர்.

அடுத்த நாள் மதியம் உணவு பரிமாறப்பட்டிருந்தது. இலை முன் அமர்ந்த பாவேந்தர் 'இதில் எது காடைக் கறி?' என்று கேட்டார்.

'ஐயா! இன்று காடை கிடைக்கவில்லை. அதனால்...! என்று பயத்தோடு கூறினர் விழாக்குழுவினர்.

பாவேந்தர் கோபத்தோடு இலையைத் தூர இழுத்து விட்டார்; மீசை துடித்தது. இன்று கட்டாயம் காடை கிடைக்கிறதா இல்லையா என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் என்னிடம் ஏன் சொன்னாய்! நான் அதையே நினைத்துக்கொண்டிருந்தேனே!" என்று சீறினார். அவரைச் சமாதனம் செய்து சாப்பிட வைப் பது பெரும்பாடாகிவிட்டது.

கண்ணால் பருகினார்

1956ஆம் ஆண்டு குழித்தலையில் 'தமிழ் ஆட்சி மொழி மாநாடு' நடைபெற்றது. இளமுருகு — பொற்செல்வி இம்மாநாட்டை முன்னின்று நடத்தினர். குன்றக்குடி

அடிகளார், பாவாணர், ஜீவானந்தம், இராசமாணிக்கனார், ப. நடராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். பாவேந்தர் மாநாட்டுத் தலைவர். முதலமைச்சர் காமராசர் தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டசபையில் தீர்மானம் செய்தது, இம்மாநாட்டின் எதிரொலி; பாவேந்தர் தலைமையின் வெற்றி!

மாநாடு முடிந்து இளமுருகு பொற்செல்வியின் வீட்டுக்கு உணவருந்தச் சென்றார் பாவேந்தர். உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் மது அருந்தக் கூடாது என்று மருத்துவர்கள் பாவேந்தருக்குக் கட்டளையிட்டிருந்தனர். 'குடித்தால் விரைவில் இறந்து விடுவீர்!' என்று எச்சரிக்கையும் கொடுத்திருந்தனர். என்றாலும் அனுபவித்த சுகம் அவ்வளவு எளிதில் மறக்கக் கூடியதா?' 'கொண்டா பிராந்தி பாட்டிலை' என்றார் பாவேந்தர். தயக்கத்தோடு அவர் இலைமுன்னால் மதுப்புட்டி வைக்கப்பட்டது. எதிரில் இருந்த மதுப்புட்டியைக் கண்ணால் பார்த்துக் கொண்டே சாப்பிட்டார்.

எங்கள் ரெட்டியார்!

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ரிஹர்சல்ஹாலில் பாவேந்தருக்குத் தனி அறை வழங்கப்பட்டிருந்தது. அவருடைய ஏவல் கேட்க ஒரு பணியாளரும் அமர்த்தியிருந்தார் டி. ஆர். எஸ். ஒரு நாள் காலை செல்லப்பச் செட்டியார் அவரைப் பார்க்க வந்தார். பாவேந்தர் தம் வாழ்க்கையில் அதிகம் மதித்த நண்பர்களுள் அவரும் ஒருவர். பாவேந்தர் அப்போது தான் முகம் மழித்துக் கொண்டு எழுந்தார். ரெட்டியாருக்கும் முகம் மழிக்கச் சொல்லி நாவிதனுக்குக் கட்டளையிட்டு விட்டுக் கழிப்பறைக்குச் சென்றார். கழிப்பறையிலிருந்து அவர் திரும்பி வந்தபோது ரெட்டியாரை நாற்காலியில் உட்கார வைக்காமல் கீழே உட்கார வைத்து மழித்துக் கொண்டிருந்தான் நாவிதன். அக்காட்சியைப் பார்த்த

தும் பாவேந்தருக்கு அளவு கடந்த கோபம் வந்து விட்டது.

'ராஸ்கல்! நீ எப்படி ரெட்டியாரைக் கீழே உட்கார வைத்து மழிக்கலாம்?' என்று சொல்லி அடிக்கப் போய் விட்டார். ரெட்டியார் தலையீட்டால் அன்று நாவிதன் பிழைத்தான். உள்ளே இருந்த நாற்காலியை எடுத்து வரச் சொல்லி அதிலே ரெட்டியாரை உட்கார வைத்து முகம் மழிக்கச் சொன்னார் பாவேந்தர்.

வசதிப்படாது

சேலத்தில் 'இன்பஇரவு' நாடகம் நடந்து கொண்டிருந்த நேரம். பாவேந்தர் அரிசிப்பாளையத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தார். பெருஞ்செல்வரும், சேலத்தில் சிறந்த திரைப்படக் கொட்டகை ஒன்றின் முதலாளியுமாக இருந்த ஒருவர் பாவேந்தரைப் பார்க்க விரும்பினார். அவர் தம் பணியாள் ஒருவனைப் பாவேந்தரிடம் அனுப்பி "எங்கள் முதலாளி உங்களை இப்போது பார்க்க விரும்பு கிறார். வரலாமா? இப்போது வசதிப்படுமா?— என்று கேட்டுவரச் சொன்னார்" என்றான்.

உடனே பாவேந்தர் 'வசதிப்படாது' என்றார். அப்பணி யாள் சென்று விட்டான். அவன் சென்ற பிறகு பாவேந் தர் சிரிசிரியென்று சிரித்தார். 'நாமென்ன திரைபோட் டுக்கொண்டு ஒவ்வொருவராகவா பார்க்க உள்ளே விடு கிறோம்? பார்க்க வருபவன் வருவது தானே? இவன் முதலாளி என்பது நமக்குத் தெரிய வேண்டுமாம்!" என்று அருகிலிருந்த நண்பரிடம் கூறிச் சிரித்தார்.

கவிஞர் முருகுசுந்தரத்தின்
பிற நூல்கள்

பாவேந்தர் நினைவுகள்	7-00
அரும்புகள் மொட்டுகள் மலர்கள்	10-00
கடைதிறப்பு	5-00
பனித்துளிகள் (அச்சில்)	

குயில் கூவிக் கொண்டிருக்கும்

ஈரோடு காமராசர் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும் முருகுசுந்தரம் தமிழ் இலக்கிய மேடைதொறும் தம் கவிதைகளை மெல்லிய பூங்காற்றுப் வீச வைத்த புதுமைக்கவிஞர். பாவேந்தர் 'குயில்'லும் சுரதாவின் கவிதை இதழ் களிலும் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட முருகு 'கடைதிறப்பு' என்னும் தொகுதி மூலம் கவிதையின் நல்லழகை எவரும் எளிதில் வசப்படும் வகையில் அறிமுகப் படுத்தியவர். 'பனித்துளிகள்'—தமிழக அரசின் பரிசுபெற்ற இவரது மற்றொரு தொகுதி. பாவேந்தரின் பரம்பரையைச் சேர்ந்த இவர் பாவேந்தரைக் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளைப் 'பாவேந்தர் நினைவுக ளாக்கியுள்ளார். 'ஒரு கவிஞன் இறந்து இருபத் தைந்து ஆண்டுகளுக்குள் அவனைப் பற்றிய வரலாறுகள் எல்லாம் எழுத்தில் வந்துவிட வேண்டும். ஏனென்றால் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அக்கவிஞனைடு நெருங்கிப் பழகிய தலைமுறை மறைந்துவிடும். அதன் பிறகு எழுதப்படும் நூல்களுள் புனைந்துரை இடம் பெற்றுவிடும்' என்று கருதி பாவேந்தரோடு பழகிய அன்பர்களிடமிருந்து திரட்டிய செய்திகளைக் 'குயில் கூவிக்கொண்டிருக்கும்' என்னும் நூலாக்கியுள்ளார். இது 'பாவேந்தர் நினைவுகள்' வரிசையில் வரும் மூன்றாவது நூல்.

●

இது ஓர் அகரம் வெளியீடு